Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 31 புதன்கிழமை (13.06.2012) பக்கங்கள் 20 ஓசை - 256
















# இந்திய வீட்டுத்திட்டத்தில் முஸ்லிம்களுக்கும் இடம் வேண்டும்

## இந்தியப் பிரதமரிடம் கோரிக்கை

(கொழும்பு)

இந்திய அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் வீட்டுத்திட்டத்தில் வடக்கு முஸ்லிம்களையும் இணைத்துக் கொளளும்படி இந்தியப் பிரதமரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கிறது. யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களுக்காக இந்திய அரசின் நிதியுதவியில் வட மாகாணத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள 50,000 வீடுகளில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த முஸ்லிம்களையும் இணைக்குமாறு கோரி இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு மகஜரொன்று அனுப்பப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மேல் மாகாண சபை உறுப்பினர் அர்சட் நிஸாம்தீனால் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு இந்த மகஜர் அனுப்பிவைக்

(19) ஆம் பக்கம் பார்க்க




## அடிகாயங்களுடன் பனந்தோப்பில் சடலம்

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அருகிலுள்ள பனங்காணியில் அடிகாயங்களுடன் முதியவர் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கரணவாய் தெற்கில் வசித்துவரும வீரகத்தி சுப்பிரமணியம் (வயது-63) என்ற 7 பிள்ளைகளின் தந்தையான முதியவரின் சடலமே இதுவென அடையாளம் காணப்பட்டுள்ளது. நேற்றுக் காலை 8.00 மணியளவில் கோவிலுக்கு என இவர் வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றதாக பிள்ளைகள் தெரிவிக்கின்றனர். விசாரணை முடிவடையாத நிலையில் சம்பவ இடத்தில் இருந்து சடலம் மீட்கப்படவில்லை. இன்று காலையிலேயே சடலம் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்படலாம் என நேற்றிரவு பொலிஸார் தெரிவித்தனர். (116)

# வேம்படி மாணவிகள் ஆர்ப்பாட்டம்; அதிபர் நியமனத்திற்கு எதிர்ப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மாணவியர் தமது கல்லூரிக்கு புதிய அதிபர் நியமிக்கப்பட்டதை ஆட்சேபித்து நேற்றுப் பிற்பகல் கல்லூரியின் வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிற்பகல் 1.30 மணிமுதல் 2.00 மணிவரை பாடசாலை வளாகத்தில் ஒன்று கூடிய மாணவியர் புதிய அதிபரின் நியமனத்தை எதிர்த்தும் பழைய அதிபரை தொடர்ந்தும் அதிபராகச் சேவையாற்ற அனுமதிக்குமாறும் கல்வியமைச்சைக் கோரும் மனுவொன்றை ஏந்தியவாறு அங்கு

(19) ஆம் பக்கம் பார்க்க

# வைத்திய அதிகாரியின் இடமாற்றம் இரத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி வந்த சிரேஷ்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க.இராஜசேகரத்தின் திடீர் இடமாற்றத்தினை நிறுத்தி வைத்திருப்பதாகச் சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்திய சாலை வைத்திய அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியுடன் தொடர்புகொண்டு அவரது இடமாற்றத்தை எதிர்த்துப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடப்போவதாகத் தெரிவித்ததை அடுத்து இவ் இடமாற்றம் இடைநிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. பல்வேறு தேவைகளுடன் கஷ்டமான சூழ்நிலையில் இயங்கி

(19) ஆம் பக்கம் பார்க்க

# சிறுமியைக் கடத்தி தோடுகள் அபகரிப்பு

## கந்தரோடையில் பரபரப்பு

கந்தரோடைப் பகுதியில் இனம் தெரியாதவர்களினால் கடத்திச் செல்லப்பட்டு கை கால்கள் கட்டப்பட்ட நிலையில் கைவிடப்பட்ட சிறுமியொருவர் பொதுமக்களால் மீட்கப்பட்ட சம்பவமொன்று இடம் பெற்றுள்ளது. நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை வீட்டின் முன்னால் நின்று பல் தீட்டிக்கொண்டிருந்த 9 வயது சிறுமி, வானில் வந்தவர்களினால் கடத்திச்செல்லப்பட்டு கை, கால்கள் கட்டிய நிலையில் அருளானந்தப் பிள்ளையார் ஆலயத்திற்கு முன்னால் கைவிடப்பட்ட நிலையில் பொதுமக்களினால் மீட்கப்பட்டுள்ளார்.

கடத்தப்பட்ட சிறுமியின் காதில் இருந்து ஒரு சோடி தோடுகள் அபகரிக்கப்பட்ட நிலையில் சிறுமி விடுவிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தை அடுத்து குறித்த சிறுமி யாழ்ப்பாணம் போதனா

(19) ஆம் பக்கம் பார்க்க

# சிவாஜிலிங்கம் வெளிநடப்பு நகரசபை அமர்வில் குழப்பம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நகரசபையின் 10 ஆவது மாதாந்தக் கூட்டத்தில் இருந்து ஆளும் கூட்டமைப்பு உறுப்பினரான எம்.கே. சிவாஜிலிங்கம் வெளிநடப்புச் செய்துள்ளார்.

நகரசபையின் மாதாந்த கூட்டம் நகரசபைத் தலைவர் இ.அனந்தராசா தலைமையில் நேற்று செவ்வாய்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்றது. இக் கூட்டத்தில் ஆளும் கூட்டமைப்பு உறுப்பினர் 7 பேரும் ஏனைய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 2 பேரும் பிரசன்னமாகியிருந்தனர். கூட்டம் ஆரம்பித்து ஒருமணி நேரத்தின் பின்னர் வல்வெட்டித் துறை மீன் சந்தை தொடர்பான பிரச்சினை எழுந்தது.

(19) ஆம் பக்கம் பார்க்க

# பெற்றோரை பராமரிக்கத் தவறினால் சட்ட நடவடிக்கை

பெற்றோரை உரிய முறையில் பராமரிக்காத பிள்ளைகள் தொடர்பிலான முறைப்பாடுகளை முன்வைப்பதற்கு தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 011 2824082 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக இது தொடர்பான முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் என சிரேஷ்ட பிரஜைகளுக்கான செயலகத்தின் பணிப்பாளர் ஜே.கிருஷ்ணமூர்த்தி குறிப்பிடுகின்றார். கிடைக்கப்பெறும் அனைத்து முறைப்பாடுகளும் பிரதேச செயலக மட்டத்தில் ஆராயப்படுமென

(19) ஆம் பக்கம் பார்க்க

# "உதயன்" மீதான வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

(திருநெல்வேலி)


உதயன் பத்திரிகை மீது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தாக்கல் செய்திருந்த அவதூறு வழக்கு யாழ். மாவட்ட நீதிமன்றினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நேற்று இவ்வழக்கு யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. உதயன் பத்திரிகை நிறுவனம் சார்பில் ஆஜரான சட்டத்தரணியினால் இவ் அவதூறு வழக்கில் பதில் அணைப்பதற்கான கால அவகாசம் கோரப்பட்டது. அமைச்சர் தரப்பிலான சட்டத்தரணியினுடனான ஆலோசனையின் பின்னர் பதில் அணைப்பதற்கான கால அவகாசம் வழங்கப்பட்டு வழக்கு அடுத்த மாதம் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இவ்வழக்கில் யாழ் குடா நாட்டில் இருந்து வெளியாகும் 'உதயன்' பத்திரிகை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அவதூறு ஏற்படுத்தும் விதத்தில் செய்திகளை வெளியிட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

(19) ஆம் பக்கம் பார்க்க

# முகமாலை மீள்குடியேற்றம் தொடர்பில் ஆராய்வு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முகமாலை பொந்தர்குடியிருப்புப் பகுதி மக்களை அடுத்த சில வாரங்களில் மீள்குடியேற்றம் செய்வது தொடர்பில் நேற்று நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தலைமையில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

மீளக் குடியேறத் தயாராக உள்ள அறுபது குடும்பங்களை அங்கு மீள்குடியேற்றுவது தொடர்பிலும் அவர்களுக்கான தற்காலிக வீட்டுத்திட்டம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளான வீதி, குடிநீர் வசதி, மலசல கூடம் போன்றவற்றை ஏற்படுத்திக் கொடுத்து பாதுகாப்பாக மீள் குடியேற்றம் செய்யவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது. அத்தோடு இன்னும் ஒரு சில நாட்களில் மீள்குடியேற்ற திகதிஅறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் சத்தியசீலன், பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் ஜெயக்குமார், யு.என்.டி.பி நிறுவனத்தின் பிராந்திய கண்ணி வெடி அகற்றும் பிரிவின் பொறுப்பதிகாரி முருகதாஸ், ஹலோ றஸ்ட் நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் டொம், கிராம அலுவலர் சுதர்சன், பிரதேச இராணுவப் பொறுப்பதிகாரி, மக்கள் அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஹலோறஸ்ட் நிறுவனத்தினரால் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு அதற்கான உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் கிடைக்கப்பெற்ற நிலையில் இந்த மீள் குடியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# பாதுகாப்பற்ற வடிகால்; அடிக்கடி விபத்துக்கள்

(குருநகர்)

யாழ். பாங்ஷால் வீதியைக் குறுக்கிடும் ஓடைக்கரை வீதியின் ஒரு மருங்கில் பாரிய வடிகால் அமைந்துள்ளது. 8 அடி ஆழமும் அகலமும் கொண்ட வடிகாலுக்கு வீதிப்பக்கம் பாதுகாப்புச் சுவர் இல்லாமல் இருந்து வருகிறது.

அதனால் அந்த வடிகாலில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன. அதுவும் பாங்ஷால் வீதி, ஓடைக்கரை வீதி சந்திப் பகுதியில் விபத்துக்கள் இடம் பெறுகின்றன.

நேற்று மதியம் 2.00 மணியளவில் பாடசாலை மாணவ, மாணவிகள் வீடு களுக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் நேரம் கார் ஒன்றும் ஆட்டோ ஒன்றும் விபத்துக்குள்ளானது.

கடந்த முதலாம் திகதி நண்பகல் பாங்ஷால் வீதியில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிளால் இன்னொரு மோட்டார் சைக்கிள் மோதுண்டதால் வடிகாலுக்குள் வீழ்ந்து கிறகரி கிறிஸ்தோப்பர் (வயது - 62) என்பவர் பலத்த காயங்களுக்குள்ளானார்.

ஒரு மாதத்திற்கு முன்பாக ஆட்டோ ஒன்று குறிப்பிட்ட வடிகாலுள் வீழ்ந்ததால் தெய்வாதீனமாக அதில் பயணித்தோர் மயிரிழையில் உயிர் தப்பினர். இக்காரணங்களால் ஓடைக்கரை வீதி வடிகாலின் பாதுகாப்புச் சுவரை அமைத்து வழங்குமாறு சம்பந்தப்பட்டோரை அப்பகுதி மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (68)

# மருத்துவ சேவையில் பயிலுனர்கள் ஆட்சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுநர்கள் மற்றும் துணை மருத்துவ சேவையில் பயிற்சிக்காக பயிலுனர்களை சேர்த்துக்கொள்ளும் பொருட்டு கடந்த 8 ஆம் திகதி இலங்கை சனநாயக சோசலிச குடியரசு வர்த்தமானப் பத்திரிகை மூலம் தகைமைகளையுடைய இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மருத்துவ ஆய்வுகூட தொழிலநுட்பவியலாளர், பௌதீக சிகிச்சையாளர், தொழில்சார் சிகிச்சையாளர், கதிரியக்கவியலாளர், பொதுச்சுகாதார பரிசோதகர், குடும்பநல உத்தியோகத்தர், ஈ.சி.ஜி. தொழில்நுட்பவியலாளர், பொதுச்சுகாதார ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர், மருந்தாளர், கண் தொழில்நுட்பவியலாளர், பல் தொழில்நுட்பவியலாளர், பூச்சியியல் உதவியாளர், பற்சிகிச்சையாளர் ஆகிய தொழிற் பயிற்சிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விபரங்களை வர்த்தமானப் பத்திரிகையை பார்வையிடுவதன் மூலமோ அல்லது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் பெற்றுக்கொள்ளவோ முடியும். மேலும் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தகைமையுடைய விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அடுத்த மாதம் 9 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு சுகாதார செயலாளர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சு, சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கமுடியும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# ‘டெங்கு’ கட்டுப்படுத்த நடவடிக்கை

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் பொலிஸாரினால் ஆனைக்கோட்டை பகுதியில் உள்ள காணிகளில் டெங்கு பரவக்கூடிய காரணிகள் இருக்கிறதா என பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நேற்று ஆரம்பமான இப்பரிசோதனை நடவடிக்கைகளில் இந்தப் பிரதேசத்தில் குறிப்பாக ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதிப்பகுதியில் 5 வீடுகள் டெங்கு பரவக்கூடிய நிலையில் இருப்பது இனங்காணப்பட்டு அவர்கள் எச்சரிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் இப்பிரதேச மக்கள் சுற்றுப்புறச் சூழலை டெங்கு பரவாமல் துப்புரவாக வைத்திருக்குமாறு மக்களுக்கு பொலிஸாரினால் அறிவுறுத்தல்லும் வழங்கப்பட்டுள்ளது. (104)

## மகா கும்பாபிஷேக பெருவிழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மட்டுவில் வடக்கு (சந்திரபுரம்) அருள்மிகு ஸ்ரீ மஹா முத்து மாரியம்மன் தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக பெருவிழா நாளை காலை 10.14 மணி முதல் 11.20 வரையுள்ள சுப வேளையில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தினையொட்டிய எண்ணெய்க் காப்பு சாத்துதல் நிகழ்வும் இன்று மாலை 4.00 மணிவரை நடைபெறவுள்ளது. (60)


# மாற்று வலுவுள்ளோரை ஒன்றிணைக்க ஜெய்ப்பூர் நிறுவனம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தின் வெள்ளிவிழாவை முன்னிட்டு யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தில் மாற்று வலுவுள்ளோரை இனங்காண்பதற்கான ஒத்துழைப்பினை கிராம அலுவலர்களை வழங்கி உதவுமாறு யாழ். ஜெய்ப்பூர் நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஜுலை மாதம் முதலாம் திகதி 25 ஆவது வெள்ளிவிழா கொண்டாடும் முகமாக வீடுகளில் முடங்கியிருக்கும் மாற்றுத் திறனாளிகளை சமூகத்துடன் இணைப்பதுடன் வெள்ளிவிழா நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு அவர்களின் திறமைகளை வெளிக்கொணரும் நோக்கத்திற்காக ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் மாற்றுத் திறனாளிகளை இனங்கண்டு அவர்களின் விபரம் தருமாறு ஜெய்ப்பூர் நிறுவனத்துடன் இணைந்து செயற்பாட்டை மேம்படுத்தி தருமாறும் யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தின் தலைவர் டாக்டர் கே.கணேசமூர்த்தி கேட்டுக்கொண்டுள்ளார். (எஸ்)

# யாழ். மத்திய கல்லூரி 2 ஆம் இடம்



கொழும்பு றோயல் கல்லூரி நடத்திய இவ்வாண்டுக்கான மாவட்ட மட்ட நாடகப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி 2 ஆம் இடத்தினைப் பெற்றுள்ளதுடன் 4 விருதுகளையும் வென்றுள்ளது.

இப்போட்டிகள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் மத்திய கல்லூரியின் ‘விதியின் வலி’ எனும் நாடகம் வெற்றி பெற்றுள்ளது.

இந்நாடகமானது சிறந்த நெறியாள்கை, சிறந்த நடிகர், சிறந்த நடிகை சிறந்த இசையமைப்பாளர் ஆகிய நான்கு துறைசார் விருதுகளினை பெற்றுக்கொண்டது. சிறந்த நெறியாளராக கெ.கொட்வின், சிறந்த நடிகராக கொட்வின், சிறந்த நடிகையாக சதீஸ்குமார் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

இந்நாடகத்திற்கான வழிப்படுத்தலினை மத்திய கல்லூரியின் நாடகமும் அரங்கியலும் ஆசிரியர் எஸ்.ரி.குமரன் வழங்கியுள்ளார்.

இந்நாடகத்தில் நடிகர்களாக செ.அபிசேக், றெ.யெக்சன், வி.மதிவண்ணன், த.சண்முகப்பிரியன்,க.கயீந்திரன், அ.அபினாஸ், அ.கனோஜன், து.ஜனார்த்தன், பு.தர்மிசன்,அ.அலைக்சன், கி.சுகிர்தன், கொ.கொட்வின்., கொ.கிலாஸ்ரோன், ம.றொகான், வ.லக்ஸன், றோ.பிரதீப், த.பிரவீன், ரி.பிரியலக்சன், சதீஸ்குமார் பகீரதன் ஆகியோர் நடித்துள்ளனர்.

# விடுதியை மூடும் மாநகர சபையின் வழக்கு நீதிமன்றினால் நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோவில் வீதியில் உள்ள சட்டவிரோத தங்குமிட விடுதி ஒன்றின் மீது யாழ். மாநகர சபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் யாழ். நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நிராகரிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபை ஆணையாளர் ஊடாக பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் கடந்த மாதம் 28 ஆம் திகதி யாழ். நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கினை விசாரணை மேற்கொண்ட யாழ். நீதவான் நீதிமன்றினால் விடுதி உரிமையாளருக்கு கட்டளை அனுப்பப்பட்டது.

கட்டளையின் பிரகாரம் நேற்றுமுன்தினம் விடுதி உரிமையாளர் மன்றில் ஆஜராகியுள்ளார்.

யாழ். மாநகர சபை பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்த சுகாதாரச் சீர்கேடு மற்றும் கலாசார சீர்கேடுகள் தொடர்பாக விடுதி உரிமையாளரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

அதேவேளை, யாழ். மாநகர சபை பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்ட வேளை யாழ். மாநகர சபை ஊடாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்ததால் விடுதி உரிமையாளர் மீது நீதிமன்றினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அவ்வாறு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்படாமல் நீதிமன்றம் தனிநபர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்வது தனிநபர் உரிமை மீறல், அதனால் விடுதி உரிமையாளர் மீது யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராஜா சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

இருந்தபோதிலும் நீதிமன்றின் கட்டளைப்படி யாழ். மாநகர சபை யாழ். பொலிஸ் நிலையத்தில் பி அறிக்கை மூலம் விடுதியில் நடைபெறும் குற்றச்செயல்கள் நிரூபிக்கப்பட்டு ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யுமாறு யாழ். மாநகர சபைக்கு உத்தரவிட்டார்.

அத்துடன் யாழ். மாநகர கட்டளைச் சட்டத்தின் படி யாழ். மாநகர முதல்வரினால் குறித்த விடுதி நிரந்தரமாக மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மூடப்பட்டுள்ளது. (எஸ்)


## சிறு விளம்பரம்

### வீடு விற்பனை

சுதுமலை தெற்கில் சகல வசதிகளுடனும் கூடிய நல்ல சுற்றாடலில் உள்ள ஒரு நடுத்தர வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: க.சீவறட்ணம், றியிஸ்ரார் சம்பந்தர் ஒழுங்கை, சுதுமலை தெற்கு. (R/138)

வவுனியாவில்

# நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் கிராம ரீதியாக அங்குரார்ப்பணம்



(வவுனியா)

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் வவுனியா மாவட்டத்தில் கிராம சேவகர் பிரிவு ரீதியாக நுகர்வோர் பாதுகாப்புச் சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதன் நிமித்தம் நேற்று முன்தினம் வவுனியா பூந்தோட்டம் கிராமசேவகர் பிரிவில் நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த பூந்தோட்டம் கிராம சேவையாளர், தற்போது வியாபார நிலையங்களில் நடைபெறும் முறைகேடுகளை கருத்திற்கொண்டு நுகர்வோரின் நன்மைக்காக இவ்வாறான அமைப்புக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

பாவனையாளர் அதிகார சபையின் நன்மைகள் சாதாரண மக்களையும் சென்றடையக் கூடியதாகவும் அதன்மூலம் மக்கள் தரமான பொருட்களை கொள்வனவு செய்வதற்கு வழிவகுக்கக்கூடியதாக இருக்குமெனவும் தெரிவித்தார்.

இங்கு கருத்து தெரிவித்த பாவனையாளர் அதிகாரசபையின் விசாரணை அதிகாரி, சில விற்பனை நிலையங்களில் பொருட்களில் குறிப்பிடப்பட்டுள்ள விலையிலும் பார்க்க அதிகரித்த விலையில் பொருட்களை விற்பனை செய்வதுடன், குளிராக்கப்பட்ட பொருட்கள் என்பதனால் அதிக விலை வைத்தும் விற்பனை செய்து வருகின்றனர்.

இது சட்டத்திற்கு முரணானது. அத்துடன் விலைப்பட்டியல் வைக்கப்படுவதில்லை. இவ்வாறான நிலையில், வவுனியா மாவட்டத்தில் வர்த்தக நிலையங்கள் காணப்பட்டால் அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் பொருட்கள் வாங்கப்படும்போது மிகுதிப் பணத்திற்கு பதிலான நுகர்வோரின் விருப்பங்கள் இல்லாமல் வேறு பொருட்கள் வழங்கப்படுகின்றது.

இது வர்த்தகர்கள் தமக்கு உரிமையிருப்பதாக நினைத்து செயற்படுகின்றனர். அவ்வாறான நிலைமைகள் நிறுததப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இச் சங்கத்தின் தலைவராக ந. கபிலநாத், செயலாளராக கருணாநிதி, பொருளாளராக திருமதி எம். சுப்புலட்சுமி, உப தலைவர் ஏ.சி.ஏ. ரகுமான், உப செயலாளர் க. சிவலிங்கம் நிர்வாக உறுப்பினர்களாக குருசாமி, நேமிநாதன், சூசை, ந.பார்த்தீபன், வேலாயுதம், சோதிமலர் ஆகியோரும் தெரிவு செய்யபபட்டனர். (160)

# ஜெய்ப்பூர் நிறுவனத்தின் கொடிவார ஆரம்ப நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு கொடிவாரத்தினை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவி ஜே.கணேசமூர்த்தி தலைமையில் நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் வடமாகாண ஆளுநரின அலுவலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இக் கொடி வாரம், எதிர்வரும் 18 ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

வடமாகாண கல்வித் திணைகளத்தின் ஒத்துழைப்புடன் ஒருவார காலத்தில் இடம்பெறும் கொடி வாரத்தின்போது பாடசாலை மற்றும் அரச திணைக்களங்களில் கொடிகள் கையளிக்கப்பட்டு நிதிகள் சேகரிக்கப்படவுள்ளதால் அனைவரினதும் ஒத்துழைப்பினை யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தினர் எதிர்பார்க்கின்றனர்.

எனவே ஒத்துழைப்பு வழங்கி வலுவிழந்தோருக்கு உதவ முனவருமாறு யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தினர் கேட்டுக்கொள்கின்றனர். (எஸ்)

# கோண்டாவில் பிரதேசத்தில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினால் கோண்டாவில் பிரதேசத்திலுள்ள வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கடந்த 8 ஆம் திகதி முதல் கோண்டாவில் கிழக்கு முதல் கோண்டாவில் மேற்கு வரையான 6 கிராம அலுவலர் பிரிவுகளில் இந்நடவடிக்கை முன் எடுக்கப்பட்டுள்ளதுடன், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரை இடம் பெறவுள்ளது.

இன்று புதன்கிழமை ஜே / 116 கோண்டாவில் மேற்கு மற்றும் ஜே / 115 இணுவில் மஞ்சத்தடி பகுதியிலும், நாளை ஜே / 120 கோண்டாவில் தெற்கு கிராம அலுவலர் பிரிவிலும் நடைபெறவுள்ளது.

குறித்த காலப்பகுதியில் இதுவரை 60 வீதமான வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதுடன் மிகுதி 40 வீதமான நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

எனவே குறித்த கிராம பொதுமக்கள் தாங்கள் வளர்க்கும் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றுமாறு கோண்டாவில் பொது சுகாதார பரிசோதகர் பிரேம்குமார் அறிவித்துள்ளார்.

# குருமண்காட்டுப் பகுதியில் இரு கடைகளில் திருட்டு

(வவுனியா)

வவுனியா - குருமணக்காட்டுச் சந்தியில் அமைந்துள்ள இரு வர்த்தக நிலையங்களில் நேற்றுமுன்தினம் இரவு திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மருந்தகம் மற்றும் நகை கடை என்பவற்றில் இடம்பெற்ற இத்திருட்டுச் சம்பவத்தில் பல இலட்சம் ரூபா பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளதாகவும், நகைக்கடையில் கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவங்கள் தொடர்பில் வவுனியா பொலிஸார் சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டதுடன், தொடர்ச்சியான விசாரணைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். (160)


# பொற்பதி விநாயகர் ஆலய வாகனங்கள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

பொற்பதி வீதியில் உள்ள பொற்பதி விநாயகர் ஆலயத்தில் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் ஆலயத்தின் 4 இலட்சம் ரூபா பெறுமதியான 3 வாகணங்கள் களவாடப்பட்டுள்ளன.

இரவுவேளை வாகனம் ஒன்றில் வந்த திருடர்கள் வாகனத்தை நிறுத்தி விட்டு 3 வாகனங்களையும் தந்திரமான முறையில் திருடி வாகனத்தில் ஏற்றிச் சென்றுள்ளனர்.

அதிகாலை வேளை ஆலய பூசகர் கோயில் கதவை திறந்து பார்த்தபோது வாகனங்கள் களவாடப்பட்டமை தெரிய வந்ததாகவும், இது குறித்து ஆலய நிர்வாகத்தினர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர் வணக்கத்திற்குரிய டாக்டர் ஜெ.இ.ஜெயசீலன், மாணவனுக்கு பரிசில் வழங்குவதையும், கலந்துகொண்ட விருந்தினர்கள், மாணவர்களையும் காணலாம். (20)

# பேச்சுப் போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

யாழ். ஜெய்ப்பூர் புனர்வாழ்வு நிறுவனத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டியில் வடமராட்சி வலயத்திலுள்ள 3 கோட்டங்களிலும் நடைபெற்ற பேச்சுப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு:

**கீழ்ப்பிரிவு**

பருத்தித்துறை

செ.யதுர்சனா, சி.வைஷ்ணவி (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), பூ.சுமிததா (வட இந்து மகளிர் கல்லூரி), வி.திருமகள் (பரு. சித்தி விநாயகர் வித்தியாலயம்).

**மத்தியபிரிவு**

உ.சிம்றா, பா.பிரியா (பரு. சித்தி விநாயகர் வித்தியாலயம்), ஜெ.டிசோபா(மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை).

**மேற்பிரிவு**

ச. ஜனார்த்தனன் (ஹாட்லிக் கல்லூரி), ச.விதுர்ஷா (வட இந்து மகளிர் கல்லூரி), சோ. வைதேகி (வட இந்து மகளிர் கல்லூரி).

**கரவெட்டி கோட்டம்**

**கீழ்ப்பிரிவு**

க.மதுரா, சி.தர்ஷா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), ஜெ. நிலாந்தினி (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்).

**மத்தியபிரிவு**

நி. நிதர்ஷனா, (விக்னேஸ்வராக் கல்லூரி), பா.பாலாஜினி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), த. அனோஜன் (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்) .

**மேற்பிரிவு**

ச. கலைவாணி (வடமராட்சி மததிய மகளிர் கல்லூரி), த.சிநதுஜா (விக்னேஸ்வராக் கல்லூரி).

**மருதங்கேணி**

**கீழ்ப்பிரிவு**

செ.ஜெனிசன், கு.டியூசா, சி.யேசுதாஸன் (மணற்காடு றோ.க.த. பாடசாலை).

**மத்தியபிரிவு**

கு.டினோசா, அ.லொறின்ஷன் நெஸ்லி (மணற்காடு றோ.க.த. பாடசாலை). (109)

# தென்பகுதி சென்று திரும்புபவர்களால் குடாநாட்டில் டெங்கு பரவும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் டெங்கு நோய் கட்டுப்பாட்டில் இருக்கின்றபோதும் தென்பகுதி சென்று திரும்புபவர்கள் மூலமாக இந்த நோய் பரவும் சாத்தியம் இருப்பதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அண்மையில் இவ்வாறு கொழும்பு சென்று திரும்பிய பலா டெங்கு நோய்த் தொற்றிற்குட்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஏற்கனவே இந்நோயின் தாக்கம் குறித்து குடாநாட்டில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றபோதும், தெண்பகுதி சென்று வருபவர்கள் இந்த நோய்த் தாக்கத்திற்குள்ளாகிய நிலையில், இங்கு திரும்பி வருவதன் காரணமாக இந்த நோய் குறித்து மிகுந்த கவனம் செலுத்த வேண்டியுளள தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்சமயம் யாழ். குடாநாட்டில் இந்நோயின் தாக்கத்திற்குள்ளாகி வருபவர்களின் எண்ணிக்கை அரைப்பங்காகக் குறைந்திருப்பதாகவும், நோயின் தாக்கமும் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதாகவும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (பா)

தவறு நேர்ந்து விடுமோ என்று அஞ்சி அஞ்சி எந்த செயலையும் செய்யாமல் பின் வாங்குவது இழிவானது - ஹென்றி ஃபோர்ட்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
விளம்பரப் பணிமனை : 0212220188
thinamurasu@live.com

## பாடழிவில் ஊடகங்களின் பங்கென்ன?

எல்லாவற்றையும் தீர்மானிக்க வல்ல உலக பயங்கரவாத சக்தியாக வருணிக்கப்படும் தகவல் தொழில்நுட்பப் புரட்சிக் கால கட்டத்திற்குள் நாமிருக்கிறோம். அவர்கள் தரும் தகவல்களை விழுங்கி விழுங்கி அவர்கள் உருவாக்கும் அச்சுகளில் வார்த்தெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

முதலாளித்துவ அமைப்பின் மிகச்சிறந்த அடையாளமாகக் கருதப்பட்டவரான ஹென்றி ஃபோர்ட், தனது கார்களுக்கான வியாபார விளம்பர தந்திரத்தில் இப்படிக் கூறியதாகச் சொல்லப்படுவதுண்டு. "எந்த ஒரு வாடிக்கையாளரும் தான் வாங்குகிற கார் கறுப்பு நிறத்தில் இருக்கிற வரையில் அதை தான் விரும்புகிற எந்த ஒரு நிறத்திற்கும் மாற்றிக்கொள்ள முடியும்." ஏனென்றால் அப்போது அவருடைய தொழிற்சாலையில் உருவான கார்கள் எல்லாமே கறுப்பு நிறத்தில் மட்டுமே இருந்தன.

நமது ஊடகங்களும் ஒரே வகையான சரக்கை உற்பத்தி செய்யும் இயந்திரங்களாகவே ஆக்கப்பட்டிருக்கின்றன. செய்திகள், தகவல்கள் அனைத்தும் பொறுப்புணர்வற்ற, வெறும் உணர்ச்சியூட்டி விற்பனையாக்கும் சரக்குகளாகி விட்டன. இந்தச் சரக்கு உற்பத்தியின் நோக்கம், மாற்றங்களை ஏற்படுத்துவதல்ல, பண ரீதியாகவும் அரசியல் வாய்ப்பு ரீதியாகவும் தங்கள் இலாபத்தை அதிகரிப்பது மட்டுமே.

மக்களைத் தகவலறிவு உள்ளவர்களாக்குதல், கல்வியூட்டுதல், ஆட்சியும் அதிகாரப் பிரிவும் நீதியும் மக்களுக்குரியவையாகச் செயற்படுவதைக் கண்காணித்து வழிப்படுத்துதல், மக்களின் வாழ்வுக்குத் தீங்கானவற்றைக் கண்டு வெளிப்படுத்துதலும் சரியான திசை நோக்கிச் செல்ல வேண்டிய மக்களின் குரலாக ஒலித்தலும் ஊடகங்களின் கடமை.

நமது ஊடகங்கள் என்ன செய்கின்றன என்பதை அவற்றின் செய்திப் பொழிதல்களுக்கு அப்பால் நம் சிந்தனையைத் தப்புவித்து வைத்துக்கொண்டு கொஞ்சம் ஆய்ந்து பார்க்க வேண்டியது அவசியம்.

முதலாவது கேள்வி, நாம் நம்பியிருந்தது அல்லது நம்ப வைக்கப்பட்டது நடக்காமல் போய் ஏமாந்திருக்கிறோம். சுமார் முப்பது வருடங்களாக பாடழிவு ஒன்றை நோக்கியே இழுத்துச் செல்லப்பட்டுக் கொண்டிருந்தது பற்றிய எந்த எச்சரிக்கையுணர்வுகளும் மேலெழுந்து சமூகத்தின் குரலாக ஒலித்துவிடாதபடி மறைக்கப்பட்டிருக்கிறோம்.

தொடர்ச்சியாக இவ்வளவு அவலங்களைச் சுமந்து வருகிறோம். இதிலிருந்து மீள்வதற்குரிய சாத்தியமான மக்கள் நம்பக்கூடிய வழி ஏதும் இந்த ஊடகங்களால் இதுவரை எப்போதாவது சொல்லப்பட்டிருக்கிறதா?

உணர்ச்சிகரமாக விடயங்களை அணுகும் முறை தவிர, புத்திசாலித்தனமான, தமிழ் ராஜதந்திர நகர்வில் ஒரு சிறு வெற்றியையேனும் எப்போதாவது பெற்றுக்கொள்ளும்படியான ஆலோசனைகளை இவை சொல்லியிருந்ததுண்டா?

எல்லாவற்றுக்கும் அரசியல்வாதிகளையோ ஆயுதப் போராளிகளையோ பழிசுமத்திவிட்டுத் தப்புவதைத் தவிர ஊடகங்களின் பொறுப்புணர்ச்சியை எப்போதாவது காண்பித்ததுண்டா? நடந்து முடிந்தவற்றுக்கும் நடக்கும் அவலங்களுக்கும் இந்த நான்காவது தூணின் பொறுப்பென்ன?

இன்றைய தமிழ் அபிப்பிராயத்தைப் பெருமளவு வடிவமைத்துக் கொண்டிருப்பவை இந்த செல்வாக்குமிக்க ஊடகங்கள் தான். நமது மக்கள் அனுபவிக்கும் எந்தக் கஷ்டங்களையும் கடந்து செல்ல முடியாதவாறு இன்னும் நம் சிந்தனை இருந்து கொண்டிருப்பதற்கு வேறு யார் முதற் காரணமாக முடியும்?

ஊடகம் உண்மையைச் சொல்லவில்லை என்றால், மக்களின் உண்மை வாழ்க்கையைச் சொல்லவில்லை என்றால் அதன் நெருக்குதல்களிலிருந்து மீள்வதற்கு வேண்டிய யதார்த்தத்தை காட்டவில்லை என்றால், அது வெறும் உணர்ச்சிகளை விற்பனை செய்யும் பொழுதுபோக்காக, முதலாளிகள் லாபமீட்டும் விற்பனைப் பொருளாகவே நின்றுவிடும்.

மக்கள் விழிப்படையவும், இவற்றிடமிருந்து மீளும் வழி காணவும் வேண்டும்.

– ஆசிரியர்

# ஐ.நா.வின் இழிவுப் பட்டியலிலிருந்து இலங்கையின் பெயர் நீக்கப்பட்டது

சிறுவர் போராளிகளைப் பயன்படுத்தும் நாடுகளை ஐக்கிய நாடுகள் அமைப்பு இழிவான நாடுகளின் வரிசையில் இணைத்திருந்தது. இந்த நிலையில் இழிவுப் பட்டியலிலிருந்து இலங்கையின் பெயர் தற்போது நீக்கப்பட்டுள்ளது.

சிறுவர்களைப் போராளிகளாகப் பயன்படுத்தும் நடவடிக்கை வெற்றிகரமாக இல்லாதொழிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை மற்றும் நேபாளம் ஆகிய நாடுகள் ஐக்கிய நாடுகள் இழிவுப் பட்டியலிலிருந்து நீங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தத்தில் சிறுவர்களை இணைத்தல், கொலை செய்தல், பாலியல் ரீதியாகத் துன்புறுத்தல், பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகள் மீது தாக்குதல் நடத்தல் போன்ற செயல்களில் ஈடுபடும் நாடுகளை ஐக்கிய நாடுகள் அமைப்பு இழிவுப் பட்டியலில் இணைத்துள்ளது.

மிக நீண்ட காலமாக இந்தப் பட்டியலில் இடம்பிடித்து வந்த இலங்கை இந்த ஆண்டு அந்தப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

அறிக்கை தயாரிக்கப்பட்ட காலத்தில் இலங்கையின் பாதுகாப்பு நிலைமைகள் கிரமமான முறையில் முன்னேறி வருவதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும், வடக்கில் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உதவிகளை வழங்க வேண்டிய கட்டாயம் தொடர்ந்தும் நீடித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் அதிகளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளதுடன், சிவில் நிர்வாக நடவடிக்கைகளில் இராணுவத்தினர் தலையீடு செய்து வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்திற்குப் பின்னர் சிறுவர்கள் படையில் இணைத்துக் கொள்ளப்பட்டமை தொடர்பான தகவல்கள் கிடைக்கவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும், விடுதலைப் புலிகளினால் படையில் இணைத்துக் கொள்ளப்பட்ட 69045 சிறுவர், சிறுமியரில் 1373 சிறுவர், சிறுமியர் பற்றிய தகவலகள் பற்றிய விபரங்கள் இன்னமும் வெளியிடப்படவில்லை.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியில் இணைத்துக் கொள்ளப்பட்ட ஐந்து சிறுவர் போராளிகளில் இருவர் பற்றிய தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை. சிறுவர் போராளிகளை படையில் இணைத்துக் கொண்ட எவருக்கும் இலங்கையில் இது வரையில் தண்டனை விதிக்கப்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 594 சிறுவர் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளித்து அவர்கள் சமூகததில் மீண்டும் இணைக்கப்பட்டுள்ளனர்.

# மன்னார் பேருந்து தரிப்பிடத்தின் மறைப்பு பகுதிகள் உடைப்பு

(மன்னார்)

மன்னார் அரச பேருந்து தரிப்பிடத்தில் அமைந்துள்ள பயணிகள் தரிப்பிடத்தில் மறைப்பாக காணப்பட்ட பகுதிகளை மன்னார் நகரசபை அகற்றியுள்ளதாக மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தெரிவித்தார்.

மன்னார் அரச பேருந்து தரிப்பிடத்தில் அமைந்துள்ள மறைவான சுற்று சுவர்களைக் கொண்டுள்ள பயணிகள் தரிப்பிடத்தினுள் தொடர்ந்து குற்றச் செயல்கள் இடம்பெற்று வருவதாக மன்னார் நகர சபைக்கு தொடர்ந்து பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டதினைத் தொடர்ந்து மன்னார் நகர சபை குறித்த பயணிகள் தரிப்பிடத்தில் உள்ள மறைப்பை ஏற்படுத்தக்கூடிய சுவர் பகுதியை அகற்றியுள்ளது.

அண்மைக்காலமாக குறித்த தரிப்பிடத்தினுள் போதைப் பொருள் பாவனை மற்றும் இரவு நேரங்களில் சமூகச் சீர்கேடுகள் என்பன இடம்பெற்று வந்தன.

இந்த நிலையில் மன்னார் நகர சபை குறித்த பிரச்சினைகளை தொடர்ந்து ஆராய்ந்து பார்த்த நிலையில் குறித்த மறைப்புச் சுவர் உடைத்து அகற்றப்பட்டுள்ளதாக மன்னரர் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் மேலும் தெரிவித்தர்.

# வடக்கு, கிழக்கு வைத்தியர்களின் பணிப் பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

வடக்கு மற்றும் கிழக்கு வைத்தியர்களினால் முன்னெடுக்கவிருந்த பணிப் பகிஷ்கரிப்பு நடவடிக்கை கால வரையறையின்றி கைவிடப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு வைத்தியசாலைகளில் காணப்படும் வெற்றிடங்கள் தொடர்பில் அரசு இதுவரை எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட அரச வைத்தியர்கள் திட்டமிட்டிருந்தனர்.

வடக்கு, கிழக்கு வைத்தியசாலைகளில் நிலவும் வெற்றிட பிரச்சினை தொடர்பில் சுகாதார அமைச்சை சேர்ந்த அதிகாரிகளுடன் நேற்றைய தினம் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கச் செயலாளர் தெரிவித்தார்.

இதற்கு பின்னதாக வடக்கு, கிழக்கு வைத்தியர்கள் முன்னெடுக்கவிருந்த பணிப் பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

எனினும் இன்றைய தினம் சுகாதார அமைச்சுடன் இடம்பெறவிருக்கும் கலந்துரையாடலின் போது சாதகமாக தீர்வு கிட்டாவிடில் எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

# பிளாஸ்டிக் கூடை பயன்படுத்தாத 27 பேர் கைது செய்யப்பட்டனர்

(கொழும்பு)

மரக்கறி மற்றும் பழவகைகளைக் கொண்டு செல்வதற்கு பிளாஸ்டிக் கூடைகளைப் பயன்படுத்தாத 27 பேர் நுகர்வோர் அதிகார சபையினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு உள்ளிட்ட பல பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களில் இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக அதிகார சபையின் தலைவர் றூமி மர்சூக் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். அத்துடன் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் எனவும் நுகர்வோர் அதிகார சபை குறிப்பிட்டது.

மரக்கறி மற்றும் பழவகைகளைக் கொண்டுசெல்வதற்கு பிளாஸ்டிக் கூடைகளைப் பயன்படுத்தும் நடைமுறையை நேற்று முன்தினம் முதல் மீண்டும் முன்னெடுப்பதற்கு கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது.

இந்த நடைமுறை தெரிவு செய்யப்பட்ட 11 மரக்கறி வகைகளுக்கும் 10 பழ வகை களுக்கும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய தக்காளி, சுண்டக்காய், கரட், பாகற்காய், பிர்க்கங்காய், கோவா, சலாது பசளி, பச்சைமிளகாய், வெள்ளரிக்காய், குடை மிளகாய் ஆகிய மரக்கறி வகைகளை கொண்டு செல்லும்போது கூடைகளை உபயோகிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதனைத்தவிர தோடம்பழம், மங்குஸ்தான், பப்பாளிப்பழம், பியர்ஸ், ஸ்டோபரி, கொய்யா, கொடித்தோடை போன்ற பழவகைகளுக்கும் இந்த நடைமுறை அமுல்படுத்தப்படும் என கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# இலட்சியக் அலட்சியக் கொலைகளும்

- மைத்ரேயன்

**தாம் கருதும் மதிப்பீடுகளுக்கு மொத்த ஜனத்திரள் இணங்க வேண்டும், அடிபணிய வேண்டும் என்ற உருப்பெருத்த தன்-மையச் சிந்தனை, அந்தச் சட்டகத்துக்கு வெளியே இருப்பவர்களின் நியாயங்களைக் கண்கொண்டும் பாராத அலட்சியம். விசித்திரம் என்னவென்றால் அந்த மக்களை விடுவிக்கவே தாம் பிறந்திருப்பதாகக்கூட இவர்கள் நம்புகிறார்கள்.**

அமெரிக்கருக்கு இருக்கும் அபத்தமான, பூனை மீதான காதல் என்பது, வருடந்தோறும் மில்லியன்கள் கணக்கில் சிறு பறவைகளின் சாவுக்குக் காரணமாகின்றது என்று ஒரு கட்டுரையில் படித்தேன்.

இந்தப் பூனைகள் வீடுகளில் நல்ல தீனியைத் தின்று விட்டுக் குண்டாக இருப்பவை. இவற்றுக்குப் பறவைகள் உணவுக்காகவோ, பசிக்கோ தேவை இல்லை.ஆனால் பூனையின் குணமான வேட்டையாடும் உந்துதலுக்காக இவை சிறு பறவைகளை, அணில்களை எல்லாம் வேட்டையாடிக் கொல்கின்றன. அவற்றைத் தின்பதும் இல்லை.

மிருகங்கள் இப்படி பசிக்காக, உணவுக்காக இல்லாமல் வேட்டையாடுவது ஸாடிஸம் என்று சொல்ல முடியாது. (நண்பரொருவர் இதை ஸூஸாடிஸம் (Zoosadism) என்று சொல்லலாமா என்று கேட்டிருந்தார்.)

ஸாட்(Sade) என்பாரின் பெயரை



ஒட்டி வந்த சொல் ஸாடிஸம். ஃப்ரெஞ்சுப் புரட்சியின் நாயகர்களில் இவர் ஒருவர். ஸாட் பாலுறவு முயற்சிகளில் பெண்களிடம் குரூரமாக நடந்தவர் என்று சொல்லப்படுகிறது. இதை வரலாறை எழுதியவர்களின் ஒழுக்கப் பார்வையில் கிட்டிய முடிவாக மட்டும் பார்த்து ஒதுக்க முடியவில்லை. அவர் இப்படி வன்முறை செய்து கொடுமைப்படுத்தியதாக, அடிக்கடி சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

அவர் வளர்ந்ததோ கிறிஸ்தவ பாதிரி, கன்னியாஸ்திரீக்கள் நடுவே. படித்ததும் ஒரு ஜெசுவட் கல்லூரியில். இந்த கட்டுப்பாடான சூழலே அவரை மேற்படி அபரிமிதமான நடத்தைகளில் ஆழத் தூண்டியது என்று கூட சில ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

ஆனால், சூழல்தான் இவரை இப்படி வன்முறையாளராக்கியது என்று சொல்ல முடியுமா என்றால், அவ்வளவு சுலபமான சமன்பாடுகளுள்ள உயிரினமா மனிதர்?

சிலர் பிறப்பிலேயே இப்படி வக்கிர புத்தியோடு பிறக்கிறார்கள் போலிருக்கிறது. இவரும் சரி, இவர் போன்றவர்களும் சரி அனேகமாகச் சக மனிதர்களைக் குரூர வதைகளுக்கு உட்படுத்துவதில்தான் மகிழ்ச்சி காண்கிறார்கள்.

அமெரிக்கரும், ஐரோப்பியரும் பூனைகளை வெளியில் போய் வர அனுமதிக்கிறார்கள். இப்படித் தெருவில் பூனைகள் உலவுவதால், பூனைகள் அமெரிக்காவில் இலட்சக்கணக்கான சிறு பறவைகளைக் கொல்கின்றன என்று படித்தபோது தான் எனக்குப் பிரச்சினையின் பரிமாணம் தெரிந்தது. அதுவும் உணவுக்காக அல்லாமல் சும்மா அலட்சியமாக!

அலட்சிய வன்முறை என்பது மிகவும் கவனிக்கப்பட வேண்டிய ஒரு நடத்தை. நிகொலாய் செளஷெஸ்கு, ழான் க்ளோட் செவாலியே (ஹெட்டி நாட்டு சர்வாதிகாரி) ஆர்ஜண்டினிய இராணுவ ஆட்சியாளர்கள், பினோஷே இப்படி ஏராளமான ஆட்சியாளர்களும், சாதாரணகொலையாளிகளும் அலட்சிய வன்முறையில் ஊறியவர்களாக இருக்கிறார்கள். ஒவ்வொரு நாடும் இப்படிப்பட்ட கொலையாளிகளை ஏதோ செய்து மறைக்கவோ, மறக்கவோ முயல்கிறது என்பது ஒரு பிரச்சினையே.

ஒப்பீட்டில், அலட்சியத்தால், தானும் மடிந்து பல சகபயணிகளையும் மாள்விக்கிற இளைஞர்கள் அமெரிக்காவில் பல்லாயிரம். இவர்களில் பெரும்பங்கு மிதமிஞ்சிய குடிபோதையில் கார்ஓட்டுவதால் இப்படிக்கொலைஞர்களாகிறார்கள். இவர்களில் அனேகமான பேர், சிறைத் தண்டனையை அனுபவிப்பதோடு, வாழ்வில் பெரும் நாசத்தைச் சந்திக்கிறார்கள்.

இந்தியாவில் குடிவெறியில் நடைபாதையில் உறங்குவோர் மீது காரை ஏற்றி கொன்ற பல 'நட்சத்திரங்கள்', தொழிலதிபர்களின் பிள்ளைகள் என்று ஒரு பட்டியலே போட முடியலாம். இவர்கள் ஏதோ ஒரு நியாயத்தைக் கற்பித்து நீதிமன்றத்தில் என்னவோ வாதாடி, இறுதியில் சுதந்திரமாகத் திரிகிறார்கள். இவர்கள் அமர்த்தும் உயர்ந்த விலை வழக்கறிஞர்கள் வாதப் பிரதி வாதங்களால் இவர்கள்ளை விடுவிப்பதை எந்தக் குற்ற உணர்வுமில்லாமல் சகஜமாகச்செய்துவிட்டுத்தம் மாளிகைகளுக்குத் திரும்புகிறார்கள்.

இந்த வகை அலட்சியத்தால்கொல்வதன் இன்னொரு வடிவம்தான் ஆஃப்கனிஸ்தான், ஈராக் போன்ற நாடுகளில் அமெரிக்க இராணுவத்தினர் பல பத்து பேர்களைத் திடீரென்று சுட்டுக் கொல்வது, நோர்வே நாட்டில் பல பத்துக் குழந்தைகளைச் சுட்டும் குண்டெறிந்தும் ஒரு நோர்வீஜிய இனவெறியன் கொன்றது, தொடர்ந்து பலநூறு குண்டு வெடிப்புகளை நிகழ்த்தி வஹ்ஹாபியர்களும், அல்-கொய்தாவினரும் பல நூறு மக்களைக் கொல்வது போன்றன எல்லாம்.

இவர்களில் யாரைக் கேட்டாலும் ஏதோஒரு இலட்சியத்தை முன்வைத்து அதற்காகக் கொல்வதாக வாதிடுவதோடு, ஒரு குற்ற உணர்வும் இல்லாது மார் வீங்கித் திரிவார்கள். இதற்கு இவர்களை நாயகர்களாகச் சித்திரிக்க ஒரு கூட்டம் அறிவிலிகள், 'அறிவாளிகள்' என்ற பெயரோடு உலவுவது மேலும் பெரிய அபத்தம்.

தனி மனிதனாகக் குடித்துவிட்டு காரையோட்டி நடைபாதையில் உறங்கும் ஏழை பாழைகளைக் கொல்லும் பணக்கார வாலிபர்களோடு, ஆதர்சங்களுக்காக ஆயுதமேந்தி காடுகளில் கொல்லும் தீவிரவாதிகளை ஒப்பிடுகிறேன் என்றால் இதுதான் காரணம் : தாம் கருதும் மதிப்பீடுகளுக்கு மொத்த ஜனத்திரள் இணங்க வேண்டும், அடிபணிய வேண்டும் என்ற உருப்பெருத்த தன்-மையச் சிந்தனை, அந்தச் சட்டகத்துக்கு வெளியே இருப்பவர்களின் நியாயங்களைக் கண்கொண்டும் பாராத அலட்சியம்.

அதே நேரம் பிறரின் மதிப்பீடுகள் பற்றிய அலட்சியத்தால்தான் ஆள்வோரும், சிந்தனையாளரும் வன்முறையை மேற்கொள்கிறார் ∴ ஆதரிக்கிறார் என்றுசொல்ல முடியாது. அவர்கள் பெரும் திரள் மனிதர்களையே மதிப்பதில்லை. அதில் ஒரு விசித்திரம் என்னவென்றால் அந்த மக்களை விடுவிக்கவே தாம் பிறந்திருப்பதாகக்கூட இவர்கள் நம்புகிறார்கள். 'False consciousness' என்ற கருத்துருவே இப்படி ஒரு சால்ஜாப்பைக்கைக் கொள்ள உருவான கருத் தாக்கம்தான்.

மரபுச் சிந்தனையில் 'அதை நாயென்று அறிவித்துத் தூக்கிலிடு' என்று ஒரு வழக்கு உண்டு. அதை இவர்கள் எளிதாகவே செய்வார்கள்.

இதற்கு நேரெதிர் நிலைப்பாடு க்வேக்கரியக்கத்தினருடையது. குழுவில் அனைத்து நபர்களும் ஒத்துக் கொள்ளும் வரை அவர்கள் ஒரு முடிவை ஏற்க மாட்டார்கள், நடைமுறைப்படுத்த மாட்டார்கள். பெரும்பான்மையிசம் இங்கு கிடையாது. ஆனால் குழு முழுதும் ஒத்துக் கொள்ளும் வரை கூட்டத்தை நிறுத்தவும் மாட்டார்கள். பலப் பல நாட்கள் கூடினாலும் சர்ச்சித்துக் கொண்டே இருப்பார்கள்.

இந்த வழிமுறையை மெச்சியவர்களில் காந்தி ஒருவர். அதனால்தான் புனா ஒப்பந்தத்துக்கு அம்பேத்கரை இழுக்க உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். அதை ஒரு வித வன் முறை, blackmailing என்று பார்ப்பவர்களும் உண்டு.



**சூழல்தான் இவரை இப்படி வன்முறையாளராக்கியது என்று சொல்ல முடியுமா என்றால், அவ்வளவு சுலபமான சமன்பாடுகளுள்ள உயிரினமா மனிதர்?**

இதன் ஒரு வடிவை நான் சமீபத்தில் ஒரு குழுவில் உறுப்பினராக இருந்த போது அனுபவித்தேன்.மூன்று நாட்களுக்குப் பிறகு அந்த அறையில், கூட இருந்தவர்களைப் பார்க்கவும் சலிப்பாகவே இருந்தது. ஆனால் நல்ல வேளையாக முக்கால் பங்கு உறுப்பினர் ஒத்துக் கொண்டால் போதும் என்று சொல்லப்பட்டிருந்தது. 12 பேரில் 10 பேரை ஒரு முடிவுக்கு அழைத்துவர நான்கு நாட்கள்ஆயின. நான்காம் நாளின் நடுவில் ஒப்புதல் கிட்டிய போது பெரும்பான்மைக்கும் மகிழ்ச்சி இல்லை, சிறுபான்மைக்கும் மகிழ்ச்சி இல்லை. எல்லாரும் இந்த முடிவுக்கு வருவதைத் தாண்டி வேறு வழி அப்போதைக்கு இல்லை என்பதை நன்கு அறிந்திருந்தார்கள். சலிப்பால் வெல்லுதல் என்பது இதுதான் போலும்.

அந்த நேரம், அந்தத் தகவல்களின் அடிப்படையில், அந்த விதிமுறைகளின் கீழ் அந்த முடிவுதான் அணுகிப் பெறக்கூடியதாக இருந்தது. விதிமுறைகளையே உடைப்போம் என்று தொடங்கினால்?

யாருக்காக, யார் என்ன விதிமுறைகளை உடைப்பது? மாற்றாக முன்வைக்கப்படும் விதிமுறைகளின் நியாயத்தை யார் சோதித்தது? அது என்னென்ன நிலைகளில் இப்படிக் குறைப்பட்ட,மூளியான நியாயங்களைக் கொடுக்கும் என்று உடைக்கச் சொல்வோருக்கு எப்படித் தெரியும்?

க்வேக்கர் (Quaker) என்கிற சொல்லின் வேர் விசித்திரமானது. கடவுளின் முன் இறுதி நாளின் போது தம்மை விசாரித்த உள்ளூர் நீதிபதி நடுங்க வேண்டி இருக்கும் என்று இந்தக் குழுவின் தலைவர் ஒருவர் வாதிடுகிறார். அதிலிருந்தும், பிரார்த்தனையில் உடல் நடுங்கப் பிரார்த்திப்பவர்கள் என்ற அர்த்தத்திலும் இந்தப் பெயர் வந்திருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது.

இந்தப் பிரார்த்தனை மனோபாவத்தால் சுயத்துக்கு ஏதும் மகிழ்வு, அல்லது சமாதானம் கிட்டலாமே தவிர புற உலகின் உறவிணைப்புகளின் சிக்கலை வெளிப்படுத்தும் திறன் கிட்டுமா என்பது ஐயமே.

பிரார்த்தனை என்பதைச் சுயக்கட்டுப்பாட்டுக்குப் பயன்படுத்துவோர் நிறைய உண்டு. பிறரைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்துவாரும் உண்டு. பிறரை அச்சுறுத்தப் பயன்படுத்துவாரும் உண்டு.

க்வேக்கர்கள் பெரும்பாலும் தன்னைக் கட்டுப்படுத்தவும், குழுவை ஒன்றிணைக்கவும் பிரார்த்தனைகளைப் பயன்படுத்தி இருப்பதாகத் தெரிகிறது. இந்த இரண்டு உத்திகளும் அக்குழுவுக்கு அத்தனை உதவியதாகத் தெரிகிறதா? இத்தனை ஆண்டுகளில் அக்குழு வளரவில்லை என்பதும், அதன் கிளைப்புகள் படிப்படியாக, ஊடகங்களின் வளர்ச்சியே போல வடிவுகள் மாறி இன்று ஜனநாயகப்பட்ட, திரள் பண்பாட்டு வடிவுகளையே நம்பி இயங்குகின்றன என்பதும் பல வகை முடிவுகளை நமக்குச் சுட்டுகின்றன.

மொத்தத்தில் பார்த்தால் மதிப்பீட்டு அலட்சியத்தில் வெறுப்பு / கொலைவெறி பிறக்கிறது என்பது கூடதிகமாகக் கருத்துகளுக்கு வலிமை கொடுக்கும் அணுகல். பல நேரம் நடத்தை, வாழ்நிலைகள், முன்னனுபவங்கள், வெறும் அதிகாரத் திமிர், எளியார் மீது வென்ற வருக்கு எழும் அலட்சியம், கற்பனை வறட்சி (அத்தனை பெரிய திரளின் துன்பங்களைப் பார்க்க முடியாமை) போன்ற ஏராளமான காரணங்கள் இருக்கலாம்.

இன்றைய நிலையில் இலட்சியத்திற்காகக் கொலைகளுக்கோ, அலட்சியத்தாலெழும் பலிகளுக்கோ எதிராக நானும் நீங்களும் தீனமாக, ஆனால் விடாமல் குரலெழுப்புவதைத் தவிர வேறு எதுவும் செய்வதற்கில்லை.

# நான்கு வகையான கொள்கைக்குள் தடுமாறி வருகின்றது கூட்டமைப்பு



## அமைச்சர் டியூ தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத் தெரிவுக்குழு விவகாரத்தில் உறுதியான தொரு நிலைப் பாட்டை எடுக்காது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நான்கு வகையான கொள்கை களுக்குள் தடுமாறி வருகின்றது என சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள் ளார்.

ஒத்துழைத்து செயற்படவேண்டிய இத்தருணத்தில் கூட்டமைப்பு அநாவசிய மாக அடம் பிடிப்பதால் பாதிககப் படப்போவது அப்பாவித் தமிழ மக் களே எனவும் அவர் கூறியுள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரசன்னம் தொடர்பில் விவரித்த சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர, இது குறித்து மேலும் கூறியவை வருமாறு

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர் வைக் காணும் வகையில் அமைக்கப்பட் டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம வகிக்குமாறு கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்து விடுத்தே அரசு களைத்து விட்டது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு விட யத்தில் கூட்டமைப்பு நான்கு வழிமுறை களைப் பின்பற்றுகின்றது. தெரிவுக்குழு விடயத்தில் புலம்பெயர் தமிழர்களுக்கு ஒரு விதமான கருத்தைச் சொல்லல், ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு வகையான நிலைப்பாட்டை அறிவித்தல், தெரிவுக் குழுவுக்கு வருவோம் என அரசிடம் கூறல், உள்நாட்டில் வாழும் தமிழர்களுக்கு அது விடயம் தொடர்பில் இன்னுமொரு தகவலைக் கூறல் ஆகியவையே அந்த நான்கு வகையான கொள்கைகளாகும்.

கடந்த காலங்களில் நாம் கற்றுக் கொண்ட பாடங்களைவிட இன்னும் கற்றுக்கொள்ள வேண்டிய பல பாடங்கள் எமக்கு உள்ளன. எனவே, ஒத்துழைத்து புரிந்துணர்வுடன் செயற்படவேண்டிய இத்தருணத்தில் எந்தவொரு தரப்பும் அடமபிடிக்கக்கூடாது, அவ்வாறு அடம்பிடித தால் பாதிக்கப்படுவோர் அப்பாவித் தமிழ் மக்கள்தான்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஊடாகவே நீடித்து நிலைக்கக்கூடிய தீர்வைக் காண முடியும். அதனை விடுத்து வேறுவழிமுறை களில் தீர்வைக் காண்பதற்கு முயன்றால் அதறகு எதிராக உள்நாட்டில் பலத்த எதிர்ப்பு கள் கிளம்பும் என்ற யதார்த்தபூர்வமான உண்மையைப் புரிந்துகொள்ள வேண் டும்.

அனைவரும் ஒன்றுசேர்ந்து ஒருமித்த கருத்துகளுடன் தீர்வை நோக்கிப் பயணிக்காத பட்சத்தில் எம்மால் இலக்கை அடையமுடியாது போய்விடும். கடந்த காலங்களில் நாம் இந்தப் பாடங்களைக் கற்றுள்ளோம் என சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.



கொழும்பு - காலிமுகத்திடலிலுள்ள முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் உருவச் சிலையை அகற்றுவதற்கான நில அளவை நடவடிக்கை மேற்கொள்ளப்படு வதனைக் காணலாம். ஹொங கொங்கை தலைமையைகமாகக் கொண்ட சங்கரி லா ஹோட்டல் நிர்மாண பணிக் காகவே குறித்த சிலை அகற்றப்பட வுள்ளமை குறிப்பிடத்தக்கது

# யுத்தத்தின் பின்னர் குற்றச் செயல் இல்லை



## என்கிறார் பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

சிவில் யுத்தம் இடம்பெற்ற பல நாடுகளில் யுத்தத்தின் பின்னர் குற்றங்கள் அதிகரித்த போதிலும், இலங்கையில் அவ்வாறான நிலைமை ஏற்பட இடமளிக்கப்படவில்லை என பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்கக் கோன் குறிப்பிட்டுள்ளார்.

சியபத் வில என பெயரிடப்பட்டுள்ள பொதுமக்கள் நட்புறவுட னான பொலிஸ் சேவையை உருவாக்குவது தொடர்பில் பொலிஸ் அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்துவதற்காக, மஹரகம இளைஞர் சேவை மன்றத்தில் நடைபெற்ற செயலமர்வில் அவர் இவ்வாறு கூறினார்.

யுத்தத்தின் போது பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் ஏனைய மாகா ணங்களுக்கும் கொண்டு செல்லப்படுவதால், யுத்தத்தின் பின்னர் ஆயுத பாவனை அதிகரித்துள்ளது.

ஆயினும் தற்போது கொள்ளைச் சம்பவங்கள், கொலைகள் என்பவற்றிற்கு ஆயுதங்கள் பயன்படுத்தப்படுவதாகவும், அதனைக் கட்டுப்படுத்தாவிடின் எதிர்காலத்தில் பாரிய அழிவுகளை சந்திக்க நேரிடும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்கு சட்ட ஒழுங்கு சீர்குலைவே காரணம்

## என்கிறது ஐ.தே.க

(கொழும்பு)

சட்டம், ஒழுங்கு சீர்குலைந் துள்ளமையே பல்வேறு குற்றச் செயல்கள் இடம்பெறுவதற்கு காரணமாக அமைந்துள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணா திலக தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல பகுதிகளிலும் பதிவாகும் கொலைகள், கடத் தல்கள், துஷ்பிரயோகங்கள், கொள்ளைகள் என்பவற்றில் துரித அதிகரிப்பு ஏற்பட்டுள்ள தாக அவர் குறிப்பிட்டார்.

சட்டம் மற்றும் ஒழுங்குகள் என்பன சீர்குலைந்துள்ளன அத்துடன் இலஞ்சம் மற்றும் ஊழல் தலைவிரித்தாடுகிறது.

போதைக்கு முற்றுப்புள்ளி என்ற கொள்கைத் திட்டம் நடை முறைப்படுத்தப்பட்டுள்ள நிலை யில், மதுபான உற்பத்தியில் எவ்வாறு அதிகரிப்பு ஏற்பட் டுள்ளது.

கூட்டமைப்பு அரசாங்கத்தின் பிரதான எண்ணக்கருவாக போதைக்கு முற்றுப்புள்ளி என்ற கொள்கை விளங்குகின்ற போதிலும், நாட்டில் மதுபான உற்பத்தி வீதத்தில் துரித அதி கரிப்பு ஏற்பட்டுள்ளதை அவ தானிக்கக் கூடியதாக உள் ளது.

2009 ஆம் ஆண்டு நாட்டில்



96 மில்லியன் லீற்றர் மதுபானம் உற்பத்தி செய்யப்பட்டதாகவும், 2010 ஆம் ஆண்டு 120 மில்லி யன் லீற்றராக அதில் அதி கரிப்பு ஏற்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# புலிகளின் நிதி விநியோகம்; சுவிஸ் அரசு விசாரணை

(கொழும்பு)

புலிகளினால் மேற்கொள்ளப் பட்ட நிதிக் கொடுக்கல் வாங் கல்கள் தொடர்பில் சுவிட்சர் லாந்து அரசாங்கம் விசாரணை களை ஆரம்பித்துள்ளது.

சுவிட்சர்லாந்தில் வாழும் 12 புலி உறுப்பினர்கள் நெதர் லாந்து மற்றும் இலங்கைக்கு பணம் அனுப்பி வைத்துள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

நெதர்லாந்தில் கைது செய்யப் பட்டுள்ள புலிகளின் நிதிப் பொறுப்பாளரிடம் சுவிஸ் அதி காரிகள் விரைவில் விசாரணை நடத்துவார்கள் எனக் குறிப் பிடப்படுகிறது.

விசாரணைகளுக்காக இலங் கைக்கும் சுவிஸ் அதிகாரிகள் விஜயம் செய்யவுள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள சிரேஷ்ட உறுப்பினர்கள் உள் ளிட்ட 25 பேரிடம் இலங்கை யில் விசாரணை நடத்தப்பட உள்ளது.

சுவஸ் தமிழர்கள் போலியான மோசடியான முறையில் வங்கி களில் கடன் பெற்றுக்கொண்டு, புலிகளுக்கு வழங்கப்பட்டுள்ள தாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது என சுவிஸ் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ள னர்.

போலியான சம்பளப் பட்டி யல் தயாரிக்கப்பட்டு கடன் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விசாரணை நடத்தப்படுவோர் மீது தேவையற்ற அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதனை தடுக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

குறிப்பாக விசாரணைகளின் போது சுவிட்சர்லாந்து அதிகாரி கள் மற்றும் சட்டத்தரணிகள் மட்டுமே பங்கேற்பார்கள் எனக் குறிப்பிடப்படுகிறது.

விசாரணை நடவடிக்கை களின் போது இலங்கை அதிகாரி கள் பங்கேற்கக்கூடாது என்ற நிபந்தனை அடிப்படையில் விசாரணைகள் நடத்தப்பட உள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கிழக்கு மாகாண முதல்வர் பதவி கோருகிறது முஸ்லிம் காங்கிரஸ்

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில், ஐக்கிய மக்கள் சுதந் திர முன்னணியுடன் இணைந்து போட்டியிடுவதாயின் முதலமைச்சர் வேட்பாளராக தமது கட்சி உறுப் பினர் நிறுத்தப்பட வேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை முன்வைக்கத் தீர் மானித்துள்ளது.

முதலமைச்சர் வேட்பாளர் தமது கட்சிக்கு வழங்கப்பட வில்லையெனில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைநது போட்டியிடாது தனித்து போடடி யிடத் தீர்மானித்துள்ளதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டிய விதம் குறித்து கலந்துரையாடு வதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த நாடாளு மன்றம், மாகாண, மாநகர, நகர, பிரதேச சபை ஆகியவற்றில் அங்கம் வகிக்கும் மக்கள் பிரதி நிதிகளை எதிர்வரும் 15 ஆம் திகதி கொழும்பு வருமாறு அழைப்பு விடுத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கிழக்கு மாகாண சபையில், பெருபான்மைப் பலம் தமது கட் சிக்கு இருக்கும் பின்னணியில், முதலமைச்சர் வேட்பாளராக வேறு கட்சியைச் சேர்ந்தவருக்கு ஆதரவளிப்பத் பலனளிக்காது எனத் தெரிவித்துள்ள ஹசன் அலி, தேர்தலில் அரசாங்கத் துடன் இணைந்து போட்டியிட வேண்டும் என எவ்வித உடன் படிக்கைகளும் கைச்சாத்திடப்பட வில்லை எனக் கூறியுள்ளார்.

# போதியளவு பாதுகாப்பை தமிழக அரசு அளித்தது

## அமைச்சர் குரே தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்நாட்டில் அண்மையில் தான் எதிர்கொண்ட நிலைமை தொடர்பாக தமிழக அரசாங் கத்திடம் ஆட்சேபம் தெரிவிக்க வேண்டியதில்லை என அமைச் சர் ரெஜினோல்ட் குரே கூறி யுள்ளார்.

தனக்கு எதிராக ஆர்ப்பாட் டம் நடத்த திட்டமிடப்பட்டதாக செய்தி வெளியானதிலிருந்து தமிழக அரசாங்கம் தனக்கு போதிய பாதுகாப்பு வழங்கிய தகாவும் தனது பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளை யும் மேற்கொண்டதாகவும் அவர் கூறினார். தான் எப்போதும் மீண்டும் தமிழ்நாட்டிற்கு செல்ல முடியும் எனவும் தன்னை தமிழ்நாட்டிலிருந்து வெளியேறு மாறோ அல்லது மீண்டும் அங்கு வரவேண்டாம் என்றோ யாரும் கூறவில்லை என செய்தியா ளர்களிடம் அமைச்சர் குரே தெரிவித்தார்.

திட்டமிடப்பட்ட ஆர்ப்பாட்டம் குறித்து தமிழக பொலிஸார் தனக்கு தகவல் அளித்ததுடன் தனது பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்கு அனைத்து நட வடிக்கைகளையும் மேற் கொள்ளவுள்ளதாக உறுதியளிதத தாகவும் அவர் கூறினார். எனி னும் முன்னெச்சரிக்கை நட வடிக்கையாக, தான் இலங் கைக்கு திரும்பியதாக அவர் கூறினார்.

# பன்மொழிப் புலவர்களின் விழுமியங்கள் எமது வாழ்வு உயர்வடைய உதவும்

## - அருட்திரு டேமியன் அடிகளார் -

(யாழ்ப்பாணம்)

பன்மொழிப் புலவரான அருட்தந்தை கலாநிதி தாவீது அடிகளாரின் விழுமியக் கருத்துக்கள் பொன் மொழிகள் அவரது வாழ்க்கை முறைகளை அனைவரும் பின்பற்றி உயர்வடைய வேண்டும் என அருட்திரு டேமியன் அடிகளார் தெரிவித்துள்ளார்.

அருட்தந்தை தாவீது அடிகளாரின் 31 ஆவது ஆண்டு நிறைவு தின விழா அண்மையில் பருத்தித்துறையில் உள்ள அவரது நினைவு இடத்தில் நடைபெற்ற போது பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

தாவீது அடிகளார் 32 மொழிகளில் பாண்டித்தியம் பெற்று, மொழிகளில் ஆய்வுகளை மேற்கொண்டு, ஆய்வுகளின் முடிவுகளை உலகத்திலுள்ள பல்வேறு பல்கலைக் கழகங்களில் விரிவுரைகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

ஒப்பியல் அகராதி என்னும் 9 நூல்களை எழுதினார். எமது நாட்டிலுள்ள மக்களுக்காக பல நல்ல விழுமியங்களை விட்டுச் சென்றுள்ளார். அன்பு, கருணை, உண்மை ஆகியவற்றை தாரக மந்திரமாக கொண்டார். இவற்றை ஒவ்வொருவரும் தம்வாழ்க்கையில் கடைப்பிடிப்பார்களானால் வாழ்க்கை உயர்வடையும்.

மொழிகள் ஆராய்ச்சியில் அறிஞர்கள் விட்ட தவறுகளை சுட்டிக்காட்டிய தாவீது அடிகளார், தனிநாயகம் அடிகளாரின் தமிழ் கலாசாரம் என்ற ஆங்கில சஞ்சிகையில் பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

இவ்வாறு இலக்கிய சமூகத்தினால் போற்றத்தக்கவராக விளங்கும் இவரின் படைப்புக்களையும், விழுமியக் கருத்துக்களையும் அனைவரும் பின்பற்றி ஒழுகவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (01)



நவாலி மைந்தரும் நகைச்சுவை நடிகருமான ஐசாக் இன்பராசாவின் நகைச்சுவை நாடக நூல் வெளியீட்டு விழா அண்மையில் நவாலி முருகன் அன்னதான மண்டபத்தில் நடைபெற்றது. இதில் இன்பராசாவின் "மாப்பிள்ளை தேவை" என்ற நாடகத்தின் ஒரு காட்சியை காணலாம். (104)

## வன்னி தொண்டர் ஆசிரியர்களுடன் அவசர கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

வன்னி தொண்டர் ஆசிரியர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நிரந்தர நியமனம் தொடர்பான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இதன்படி கிளிநொச்சி மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு காலை 9.30 மணிக்கு எடிசன் கல்வி நிலையத்திலும், துணுக்காய் கல்வி வலய தொண்டர் ஆசிரியர்களுக்கு காலை 10.00 மணிக்கு ஒட்டுசுட்டான் வின்ஸ்ரார் கல்வி நிலையத்திலும், வவுனியா வடக்கு வலய தொண்டர் ஆசிரியர்களுக்கு பிற்பகல் 2.00 மணிக்கு நெடுங்கேணி மகா வித்தியாலயத்திலும், முல்லைத்தீவு வலய மட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு பிற்பகல் 2.00 மணிக்கு முல்லைத்தீவு மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

சகல வலய தொண்டர் ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வன்னி தொண்டர் ஆசிரியர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (04)

## பயிற்சிக்கான சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணப் பாடசாலை மாணவர்களுக்கு வானொலி நாடகம் சார் அறிவினை வளர்க்கும் நோக்குடன் இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் ஒன்றியத்தினால் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இடம்பெற்ற பன்மைத்துவ வானொலி நாடக பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்ட பயிற்சி நெறியினை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் பா.கவிராஜ் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்விற்கு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில் வேந்தன். ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் எ.எம்.முபாரக், திருக்குடும்ப கன்னியர் மட ஆசிரியை திருமதி பெனடிக், இலங்கை வானொலி அறிவிப்பாளரும் வானொலி நாடகத் தயாரிப்பாளருமாகிய லூக்கஸ் திருச்செல்வம், இலங்கை ஊடகவியல் கல்லூரி விரிவுரையாளர் மணிவாணனன், இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் ஒன்றியப் பணிப்பாளர் எம்.சி. ரஸ்மின், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நாடகமும் அரங்கியலும் பொறுப்பாசிரியர் எஸ்.ரி.குமரன் ஆகியோர் கலந்து கொண்டனர். இப்பயிற்சி நெறியில் கலந்து கொண்டு பயிற்சியினை நிறைவு செய்த 19 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.


## சக்கர நாற்காலி கிடைத்தது

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்திலிருந்து சக்கர நாற்காலிக்கு விண்ணப்பித்தவர்களில் ஒருவருக்கான சக்கர நாற்காலி சமூக சேவைகள் திணைக்களத்தினால் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மட்டுவில் வடக்கு கதிரன் செல்வன் என்னும் பயனாளி தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவில் தொடர்பு கொண்டு இச்சக்கர நாற்காலியைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (11)

## பரமர் சங்கமம்



'கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை' என்று பழமொழி ஒன்றுண்டு. அது போலதான் நம்நாட்டு தொழிலாளர்களும் தொழிலாளர் சம்பந்தமான நலன் பேணும் காரியங்களும்.

1947 ஆம் ஆண்டு இலங்கையில் தொழிலாளர் நலன் கருதிச் சார்ப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஏறத்தாழ 70 ஆண்டுகளை விழுங்கி விட்டதுதான் மிச்சம்.

இன்னமும் இரவு 10 மணிக்கு மேலாகவும் சில வர்த்தக நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டு வழமையான வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

அவற்றில் வேலை செய்யும் தொழிலாளர்களின் நிலை என்ன? இந்த மில்லேனியம் ஆண்டிற்கூட 14 மணி நேரங்களுக்கு மேலாக தொழில் செய்து மாய வேண்டிய நிலைமையில் எந்தவித முன்னேற்றமும் கிடையாது.

இலங்கையில் சகல மாகாணங்களிலும் தொழிற் திணைக்களம் இயங்குகின்றது. ஆயினும் தொழிலாளர்கள் பிரச்சினைகளை அந்தத் திணைக்களங்களால் கையாளப்படுவதாகச் செய்திகள் இல்லை.

இதனிடையே சமீபத்தில் வடபகுதிக்கு தொழில் நீதிமன்று நிறுவப்படவேண்டும் என்ற செய்தியைப் பார்த்தபோது பரமருடைய சிந்தனைகள் பின்நோக்கிப் போயின.

முப்பது வருட அழிவுப் பயணத்தால் கடந்த காலங்களில் வடபகுதியில் தொழிலாளர்களின் பிணக்குகளைத் தீர்ப்பதற்காக நீதிமன்றம் ஒன்று சாவகச்சேரியில் இயங்கி வந்தது.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியால் வெளியிடப்பட்டுவந்த "தொழிலாளி" பத்திரிகையின் வெளியீட்டாசிரியரான வழக்கறிஞர் தியாகராசா அந்த நீதிமன்றில் தொழிலாளர் சார்பாக வழக்குரைத்தும் வந்தார்.

தொண்ணூறுகளில் நீதிமன்றச் செயற்பாடுகள் சிதைந்து போக புகமுடன் இணைந்து "ஈழநாடு" பத்திரிகையின் ஆசிரியபீடத்தில் இணைந்து கொண்ட அவர், 1995 இல் இடம்பெயர்வூடாக சாவகச்சேரி நுணாவிலில் இருந்து வன்னிக்குப் போனவர் திரும்பி வரவில்லை.

இறுதி யுத்தத்திற்கு முன்பாகவே தொழில் நீதிமன்ற வழக்குரைஞர் தியாகராசா வன்னியில் மறைய நேர்ந்ததெல்லாம் பழங்கதையாகிப் போயின.

வடபகுதித் தொழிலாளர்களில் கட்டடத் தொழிலாளர்கள் போன்ற ஒருசிலரே எட்டுமணிநேர வேலையும் கைநிறைஞ்ச ஊதியமும் பெற்றுக்கொண்டு வாழ்கின்றனர்.

சிகை அலங்கரிப்பாளர், புடவை மற்றும் புத்தக, மளிகைக் கடை ஊழியர்கள் நாளொன்றில் 14 மணி நேரத்திற்கும் அதிகமாக வேலை வாங்கப்படுவதுடன், குறைஞ்ச ஊதியம் பெறுபவர்களுமாகவே இருக்கின்றனர்.

இரவு 11 மணியளவில் வீடுகளை அடையும் தொழிலாளர் மறுநாள் காலை 7 மணிக்கே பணிகளில் இணைந்து விடவேண்டும். இவர்களில் எத்தனை பேர்களுக்கு "ஈ.பி.எவ்." என்னும் சேவைக்கால நிதி சேகரிக்கப்படுகின்றதென்பதும் கேள்விக்குறிதான்.

இந்தத் தொழிலாளர்களின் மனைவி, மக்கள், குடும்பங்களுக்கு எப்பதான் விமோசனம் வருமென்று சொல்லுங்க பாப்பம்?

## ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கல்

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக வடமாகாண ஆளுநர் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கலந்து கொள்ளவுள்ளதாகவும் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை அன்றைய தினம் பிற்பகல் 5.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் கலாசார நிகழ்வு ஒன்று நடைபெறவுள்ளதாகவும் இந் நிகழ்விலும் ஆளுநர் கலந்து சிறப்பிக்கவுள்ளதாகவும் மேலும் தெரிய வருகிறது. (பா)

## மண்டலாபிஷேகம்

(காரைநகர்)

காரைநகர் - அரசடிக்காடு அருள் மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற கும்பாபிஷேகத்தினையொட்டிய மண்டலாபிஷேகப் பெருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையன்று மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது.

ஆலய ஆதீனகர்த்தாவும் பிரதமகுருவுமாக விளங்கும் சிவஸ்ரீ.எஸ்.கிரிஸ்வரசர்மா நெறியாள்கையில் சிவஸ்ரீ முத்துசசாமிக்குருக்கள் மண்டலாபிஷேக கிரியைகளை நிறைவேற்றி வைப்பார்கள். மண்டலாபிஷேகத்தைத் தொடர்ந்து 15 தினங்கள் மகோற்சவப் பெருவிழா இடம் பெறவுள்ளது. (60)

## முரசின் இன்றைய பலன்

(13.06.2012 –புதன்கிழமை)

நந்தன வருஷம் வைகாசி மாதம் 31 ஆம் திகதி. நவமி முற்பகல் 10.16 வரை.
நட்சத்திரம் உத்தரட்டாதி. சித்தயோகம், முற்பகல் 10.50 வரை.
இராகுகாலம் 11.53 - 1.22 வரை. சுபநேரம் 4.22 - 5.53 வரை.
எமகண்டம் 7.23 - 8.53 வரை. குளிகைகாலம் 10.23 - 11.53 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | காரியானுகூலம், மாமியார் வழியில் செலவு, புது முயற்சிகளில் கவனம், அன்னியர் உதவி. |
| ரிஷபம் | தொட்டது துலங்கும், நிலுவைகள் வசூலாகும், பதவி உயர்வு, அரச மான்யம் கிடைக்கும். |
| மிதுனம் | பாராட்டுகள், கவலைகள் அகலும், குடும்ப உறவு பலமாகும், மாமன் மாமி அனுசரணை. |
| கடகம் | முன்தினம் போல் நிதானம் தேவை, அதிகாரிகளை அனுசரிக்கவும், கணவர் ஆதரவு கிட்டும. |
| சிம்மம் | முன்தினம் போல அற்புதமான ஆரோக்கியம், பிரிந்த உறவினர் ஒன்று சேருவார். |
| கன்னி | ஆதரவு கிடைக்கும், தடைப்பட்ட சுபகாரியம் நிறைவேறும், நண்பர் உதவி, மருத்துவச் செலவு. |
| துலாம் | சௌக்கியம், நிம்மதியற்ற நிலை, குடும்பத்தில் சச்சரவு ஏற்படலாம், குற்றம் கேட்க நேரிடும். |
| விருச்சிகம் | உற்சாகம், உடல் ஆரோக்கியம் நன்று, சரளமான பண வரவு, மருத்துவச் செலவுகள். |
| தனுசு | புத்திரசாதுர்யம், உடல் ஆரோக்கியம் நன்று, கலைஞர்களுக்கு தனவரவு, பதவியுயர்வு. |
| மகரம் | வாக்கு நாணயம், பொன் பொருள் சேரும், எண்ணம் போல் திருமணம், கணவர் ஒத்துழைப்பு. |
| கும்பம் | வாகன சுகம், தான தர்ம ஈடுபாடு, வேலைப் பளு அதிகரிப்பு, எதிர்பார்த்த உதவி கிட்டாது. |
| மீனம் | சௌக்கியம், சீரான பொருளாதாரம், சுபகாரிய பேச்சுக்கள், தொழிலில் மந்தமான நிலை. |

# அழுத்தத்தில் உக்ரைன்

(கெய்வ்)

உக்ரைன் நாட்டில் நடந்து வரும் யூரோ 2012 கால்பந்து போட்டியில், போட்டியை நடத்தும் உக்ரைன் அணிக்கு வெற்றி பெற்றே ஆக வேண்டும் என்ற அழுத்தம் அதிகரித்துள்ளது.

தங்களது சொந்த நாட்டில் நடக்கும் போட்டி என்பதால் வெற்றியைத் தவிர வேறு எதையும் இரசிகர்கள் எதிர்பார்க்க மாட்டார்கள் என்பதும், போட்டியை நடத்தும் அணி தொடக்கப் போட்டிகளில் சிறப்பாக விளையாட வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் அணி வீரர்களுக்கு அதிக அழுத்தத்தை அளித்துள்ளது.

இது குறித்துப் பேசிய அணியின் பயிற்சியாளர் ஓலேக் ப்லோகின், உக்ரைன் மக்களின் எதிர்பார்ப்பு குறித்து வீரர்களிடம் கூறியுள்ளேன். நாட்டின் மரியாதையைக் காக்கும் விதமாகவும், மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் விதமாகவும் அவர்கள் விளையாடுவார்கள் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# இங்கிலாந்து, பிரான்ஸ் ஆட்டம் சமன்
## சுவீடனைப் பந்தாடிய உக்ரைன்



யூரோக் கிண்ணக் கால்பந்து தொடரின் இங்கிலாந்து – பிரான்ஸ் அணிகளுக்கிடையிலான ஆட்டம் சமநிலையில் நிறைவுற்ற அதேவேளை, சுவீடன் அணிக்கெதிரான போட்டியில் உக்ரைன் அணி வெற்றிபெற்றது.

யூரோக்கோப்பை கால்பந்துபோட்டியில் நான்காம் நாள் நேற்று முன்தினம் டொனட்ஸ்க்கில் நடந்த 'டி' பிரிவு லீக் ஆட்டத்தில் இங்கிலாந்து – பிரான்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தின் முதல் பாதியில் பந்து அதிக நேரம் பிரான்ஸ் அணியின் கட்டுப்பாட்டில் இருந்தாலும் முதல் கோலை இங்கிலாந்து அணி அடித்தது. ஆட்டத்தின் 30ஆவது நிமிடத்தில் பந்துடன் கோல் எல்லையை நோக்கி முன்னேறிய இங்கிலாந்து வீரர் மில்னெரை, பிரான்ஸ் வீரர் இவ்ரா விதிமுறைக்கு மாறாக தடுத்து பவுல் செய்தார். இதைத் தொடர்ந்து கிடைத்த பிரிகிக் வாய்ப்பில் இங்கிலாந்து அணியின் கப்டன் ஜெரார்ட் கோலை நோக்கி அடித்த பந்தை அந்த அணி வீரர் ஜொலோன் லெஸ்காட் அபாரமாக தலையால் முட்டி மின்னல் வேகத்தில் கோல் அடித்தார். அதன் பின்னர் பதில் கோல் திருப்ப பிரான்ஸ் அணி புயல் வேகத்தில் எதிரணி கோல் எல்லையை நோக்கி படையெடுத்தது. 35ஆவது நிமிடத்தில் கிடைத்த பிரிகிக் வாய்ப்பை பிரான்ஸ் கோட்டை விட்டது. அந்த நல்ல வாய்ப்பை இங்கிலாந்து கோல் கீப்பர் ஹார்ட் லாவகமாக தடுத்தார். ஆட்டத்தின் 39ஆவது நிமிடத்தில் பிரான்ஸ் வீரர் பிராங் ரிபெரி பாஸ் செய்து கொடுத்த பந்தை இடது பக்கம் இருந்து அபாரமாக திருப்பிய சக வீரர் சமிர் நஸ்ரி அசுர வேகத்தில் கோலுக்குள் திணித்தார். இங்கிலாந்து கோல் கீப்பர் ஹார்ட் தடுக்க எடுத்தமுயற்சிக்கு பலன் கிடைக்கவில்லை. முதல் பாதி ஆட்டம் முடிவில் இரு அணிகளும் 1–1 என்ற கோல் கணக்கில் சமநிலை வகித்தன. பின் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் அடிக்க தீவிரம் காட்டினாலும் கோல் எதுவும் விழவில்லை. இரு அணிகளுக்கும் சில நல்ல கோல் வாய்ப்புகள் கைநழுவி போனது. விறுவிறுப்பான இந்த ஆட்டம் 1–1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது. மற்றுமொரு டி பிரிவு லீக் ஆட்டத்தில் உக்ரைன் – சுவீடன் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தின் முதல் பாதியில் இரு அணி வீரர்களும் கோல் அடிக்க முடியவில்லை. இரு அணி வீரர்களும் பலமுறை கோல் அடிக்க முயன்றாலும் அவர்களது முயற்சி தோல்வியிலேயே முடிந்தது. ஆட்டத்தின் முடிவை நிர்ணயிக்கும் இரண்டாவது பாதியில் உக்ரைன் அணி வீரர் ஷெவ்செனகோ தங்கள் அணிக்காக இரண்டு கோல்கள் அடித்து அசத்தினார். ஆனால் ஸ்வீடன் அணியால் ஒரு கோல் மட்டுமே அடிக்க முடிந்தது. இதனால் உக்ரைன் அணி, 2–1 என்ற கோல்கணக்கில் சுவீடனை வீழ்த்தி வெற்றிபெற்றது. இந்த வெற்றியின் மூலம் கிடைத்த 3 புள்ளிகளுடன் உக்ரைன் அணி, டி பிரிவில் முதலிடம் வகிக்கிறது.



# மழையால் கைவிடப்பட்ட மூன்றாவது டெஸ்ட் போட்டி

(எட்ஜ்பஸ்டன்)

இங்கிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி மழை காரணமாக வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது. இதன் மூலம் டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி 2-0 என்ற கணக்கில் கைப்பற்றிக் கொண்டது.

எட்ஜ்பஸ்டனில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியின் முதலிரண்டு நாள் ஆட்டமும் மழை காரணமாக முற்றாக விளையாடப்படவில்லை. மூன்றாம், நான்காம் நாள் ஆட்டம் நடைபெற்று மேற்கிந்தியத்தீவுகள் ஆதிக்கம் செலுத்திய நிலையில் ஐந்தாம் நாள் ஆட்டம் மழை காரணமாக முற்றாகத் தடைப்பட்டது. இதன் மூலம் இப்போட்டி வெற்றிதோல்வியின்றி நிறைவுக்கு வந்தது. மேற்கிந்தியத்தீவு முதல் இனிங்ஸ் 426. இங்கிலாந்து முதல் இனிங்ஸ் 221.˙.5. இப்போட்டியின் ஆட்டநாயகனாக பெஸ்ட்டும், தொடர் நாயகனாக சாமுவேல்ஸும் தெரிவானார்கள்.

இதேவேளை, இரு அணிகளுக்குமிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் போட்டி எதிர்வரும் 16ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டி குறித்து கருத்துத் தெரிவித்த மேற்கிந்தியத்தீவு அணித் தலைவர் டரன் சமி, மூன்றாவது டெஸ்ட் போட்டியில் எமது வீரர்கள் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்தியிருந்தனர். மூன்று நாட்கள் பெய்த மழையால் ஆட்டம் வீணாகப் போனதுடன் எமது வெற்றி வாய்ப்பு அதன் மூலம் கரைந்து போய்விட்டது வேதனை தரும் விடயமாகவே உள்ளது என்றார்.

# விஸ்டன் சாதனையாளர் விருது சச்சினுக்கு வழங்கி கௌரவம்



(டுபாய்)

சச்சின் டெண்டுல்கருக்கு விஸ்டன் இந்தியா சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளது. சர்வதேச கிரிக்கெட்டில் 100 சதங்கள் எடுத்ததைப் பாராட்டி அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

டுபாயில் நடைபெற்ற விழாவில் சச்சின் இந்த விருதைப்பெற்றுக் கொண்டார். கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷ் அணிக்கு எதிராக சச்சின் தனது 100ஆவது சதத்தை எட்டினார். விஸ்டன் பத்திரிகை சர்வதேச அளவில் புகழ்பெற்ற கிரிக்கெட் பத்திரிகையாகும். விஸ்டன் விருதுடன் சச்சின் இருக்கும் படம் அதன் அட்டையில் வெளியிடப்படவுள்ளது. இது குறித்து கருத்துத் தெரிவித்த சச்சின், நான் அடித்த 100 சதங்களில் 2008ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக சென்னையில் அடித்ததே மிகவும் சிறந்தது. மும்பை தாக்குதல் சம்பவத்துக்கு பிறகு வெளிநாட்டு அணியுடன் மோதிய முதல் டெஸ்டில் 103 ஓட்டங்கள் எடுத்து அணியை வெற்றி பெற வைத்து அந்த சதத்தை மும்பை தாக்குதலில் இறந்தவர்களுக்காக சமர்ப்பித்தேன். இதுவே மறக்க முடியாத சிறந்த சதமாகும். இதேபோல் 1992 இல் பெர்த்தில் அடித்த சதமும் மறக்க இயலாது. நான் சிறிய வயதில் ரென்னிஸ் வீரர் ஜான் மெக்கனரோ மாதிரி வர வேண்டும் என்று ஆசைப்பட்டேன். ஆனால் அது நடக்க வில்லை. நான் வளர்ந்து கொண்டு இருந்த காலத்தில் கவாஸ்கர்தான் எனக்கு ரோல்மாடல். இதேபோல விவியன் ரிச்சர்ட்சும் எனக்கு முன்மாதிரிதான். மனைவியையும், கிரிக்கெட்டையும் நான் மிகவும் நேசிக்கிறேன்.

# மூன்றாவது போட்டி இன்று

(கொழும்பு)

பாகிஸ்தான் இலங்கை அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒரு நாள் போட்டி இன்றைய தினம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

ஐந்துபோட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் இரு அணிகளுமே தலா ஒவ்வொரு வெற்றியைப் பதிவாக்கியுள்ள நிலையில் இன்றைய போட்டி பெரும்பரபரப்புநிறைந்ததாகஅமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாங்கள் எதிர்பாராத விதமான முதல் போட்டியில் தோல்வி அடைந்துவிட்டோம். இருப்பினும் இரண்டாவது போட்டியில் வெற்றிபெற்று தற்போது தொடரைச் சமன் செய்துள்ளோம். தொடர்ந்து வரும்போட்டிகளில் வெற்றிபெற்றுதொடரைக் கைப்பற்றுவோம் என இலங்கை அணித் தலைவர் மஹேல தெரிவித்தார்.

# தாய்லாந்தில் சம்பியன்
## ஒலிம்பிக்கிற்கு சிறந்த பயிற்சி

(புதுடில்லி)

ஒலிம்பிக் போட்டிக்கு சிறப்பாக தயாராகுவதற்கு தாய்லாந்து ஓப்பன் பட்மின்ரனில் சாதித்தது நல்ல பயிற்சி ஆட்டமாக அமைந்துள்ளது என சாய்னா தெரிவித்தார்.

ஒட்டுமொத்தத்தில் எனது ஆட்டதிறன் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. பதற்றம் எதுவும் இல்லாமலும், அமைதியாகவும் போட்டியின்போது செயற்பட்டது எனக்கு நல்ல பலனை அளித்தது. பல நேரங்களில் நான் நெருக்கடியான சூழ்நிலையில் வெறுப்புக்கு ஆளாவேன். ஆனால் இந்த போட்டியில் நான் அப்படி எதுவும் அடையவில்லை. மிகவும் பொறுமையாக செயற்பட்டேன். அத்துடன் நான் எளிதானதவறுகள் ஏதையும்செய்யவில்லை. இந்த பட்டம் வென்றது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. இந்தப் போட்டி கடினமாக இருந்தாலும்நெருக்கடியான போட்டியில் நான் நன்றாக விளையாடினேன். அடுத்த வாரம் நடைபெறும் இந்தோனேஷிய ஓப்பன் சீரிஸ் போட்டிக்கு முன்பு கிடைத்த இந்த வெற்றி நல்லதாகும் என்றார்.

# ஒரு நாள், ருவென்ரி -20 இங்கிலாந்து அணி அறிவிப்பு

(லண்டன்)

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான ஒரு நாள் மற்றும் ருவென்ரி – 20 கிரிக்கெட் தொடருக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் ருவென்ரி – 20 அணியில் இளைய வீரர்களைக் கொண்ட அணியாகக் காணப்படுவதுடன், எதிர்வரும் செப்டெம்பரில் சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக ருவென்ரி – 20 தொடர் இலங்கையில் ஆரம்பிக்கவுள்ள நிலையில் அதற்காகத் தயார்படுத்தலாகவும் அமையவுள்ளது.

ஒருநாள் சர்வதேசப் போட்டி அணி:

அலஸ்ரெயர் குக், ஜேம்ஸ் அன்டர்சன், ஜோனி பெயர்ஸ்ரோ, இயன் பெல், ரவி போப்பாரா, ரிம் பிரெஸ்னன், ஸ்ருவேர்ட் ப்ரோட், ஜேட் டேர்ண்பக், ஸ்டீவன் ஃபின், கிரெய்க் கீஸ்வெட்டர், ஒய்ன் மோர்கன், சமித் பட்டேல், கிரேம் ஸ்வான், ஜொனதன் ட்ரொட்.

ருவென்ரி – 20 அணி:

ஸ்ருவேர்ட் ப்ரோட், ஜோனி பெயர்ஸ்ரோ, ரவி போப்பாரா, ரிம் பிரெஸ்னன், டனி பிறிக்ஸ், ஜொஸ் பட்லர், ஜேட் டேர்ண்பக், ஸ்டீவன் ஃபின், அலெக்ஸ் ஹேல்ஸ், கிரெய்க் கீஸ்வெட்டர், ஒய்ன் மோர்கன், சமித் பட்டேல், கிரேம் ஸ்வான்.



# ராம்டீனுக்கு அபராதம்

(லண்டன்)

மேற்கிந்தியதீவுகள் கிரிக்கெட் அணியின் விக்கெட் காப்பாளர் டனிஸ் ராம்டினுக்கு போட்டிக் கட்டணத்தில் 20 வீத அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்துடனான டெஸ்ட் போட்டியின்போது முறையற்ற விதத்தில் நடந்துகொண்டதாக தெரிவித்து இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

சர்வதேச கிரிக்கெட் பேரவையின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக வீரர்கள் செயற்பட வேண்டும் என்றும், அதை ராம்டீன் மீறியுள்ளதாகவும் போட்டி மத்தியஸ்தர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# ரென்னிஸ் வாழ்வில் சிறப்பான வெற்றி

(பாரிஸ்)

பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் 7ஆவது முறையாக பட்டம் வென்றது எனது ரென்னிஸ் வாழ்க்கையில் சிறப்பு வாய்ந்ததாகக் கருதுகின்றேன் என ரபேல் நடால் தெரிவித்தார்.

7ஆவது முறையாக பிரெஞ் ஓப்பனை கைப்பற்றியதை எனக்கு கிடைத்த மிகப்பெரிய கௌரவமாகக் கருதுகிறேன். இந்த போட்டி அதிக சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். இந்த கோப்பையை கையில் வைத்து இருப்பது உணர்ச்சிகரமாக இருக்கிறது. எனது ரென்னிஸ் வாழ்க்கையில் இது மிகவும் சிறப்பு வாய்ந்த தருணமாகும் எனவும் அவர் தெரிவித்தார்.




# வடமாகாண பெண்கள் ஹொக்கி உடுவில் மகளிர் ஹட்ரிக் சாதனை!



வடக்கு மாகாண பெண்களுக்கான ஹொக்கிப் போட்டித் தொடரில் உடுவில் மகளிர் கல்லூரி அணி ஹட்ரிக் சாதனை படைத்துள்ளது.

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான ஹொக்கிப் போட்டித் தொடர் கடந்த 10ஆம் திகதி வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இதன் இறுதிப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி அணியும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் மோதின. இதில் யாழ். மாவட்டத்தில் பெண்களுக்கான ஹொக்கிப் போட்டி 2008ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து நடப்பு ஆண்டு வரை மாவட்ட சம்பியனாகத் திகழும் உடுவில் மகளிர் கல்லூரி, வடக்கு மாகாணத்திலும் கடந்த 2010, 2011ஆம் ஆண்டு சம்பியனாகி யிருந்ததுடன் இவ்இறுதிப்போட்டியில் வென்று ஹட்ரிக சாதனை படைக்கும் முனைப்புடன் களமிறங்கியது.

இதற்கமைய போட்டி ஆரம்பம் முதல் இறுதி வரை உடுவில் மகளிர் கல்லூரி வீராங்கனைகளின் ஆட்டம் வேகமான, நேர்த்தியான ஆட்டமாக அமைந்திருந்தது. இறுதியில் 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று வடக்கு மாகாண மட்டத்திலும் ஹட்ரிக் சாதனை படைத்தது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் வவுனியா சுந்தரபுரம் ஜி.ரி.எம்.எஸ். அணியும், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணியும் மோதின. இரு அணிகளும் மிகச் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்தி ஆடி வந்தன. ஆட்டம் நிறைவடையும் வரை இரு அணிகளும் கோல் போடும் முனைப்பில் தீவிரமாக ஈடுபட்டபோதும் அது சாத்தியமாகவில்லை. இறுதியில் தண்ட உடை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் வவுனியா சுந்தரபுரம் ஜி.ரி.எம்.எஸ். அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. (93)

**ஜே.பி.எல். ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடர்**

# சமநிலையில் நிறைவடைந்த சென்றல், ஜொலிஸ்ரார் ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

ஜே.பி.எல். ருவென்ரி - 20 கிரிகெட் தொடரில் கடந்த 10ஆம்திகதி நடைபெற்ற ஜொலிஸ்ரார், யாழ். சென்றல் அணிகளுக்கிடையிலான போட்டி சமநிலையில் நிறைவடைந்தது.

ஜே.பி.எல். ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடர் யாழ். இந்துக் கல்லூரி மைதான்த்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஒன்பதாவது போட்டியில் ஜொலிஸ்ரார், யாழ். சென்றல் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஜொலிஸ்ரார் அணி ஆரம்பத்தில் தடுமாறியதுடன் விரைவாக ஐந்து விக்கெட்டுக்களை இழந்து திணறியது. இந்நிலையில் ஜோடி சேர்ந்த கார்த்திக், உமாதரன் இணை மிகச் சிறப்பான இணைப்பாட்டம் ஒன்றை வழங்கி அணியை வலுப்படுத்தியது. இறுதியில் ஜொலிஸ்ரார் அணி 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கார்த்திக் 41 பந்துகளை எதிர்கொண்டு மூன்று சிக்ஸர்கள், 11 பவுண்டரிகள் அடங்கலாக 73 ஓட்டங்களையும், உமாதரன் 41 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், மூன்று பவுண்டரிகள் அடங்கலாக 37 ஓட்டங்களையும், ஜெனார்த்தனன் 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் விமலகாந் நான்கு ஓவர்கள் பந்து வீசி 15 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும், ராஜிவ்குமார் 33 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 161 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். சென்றல் அணியும் ஜொலிஸ்ரார் அணிக்கு இணையாக தமது ஆட்டத் திறனை வெளிப்படுத்தியது. இருப்பினும் இறுதியில் யாழ். சென்றல் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது. இதன் மூலம் இப்போட்டி சமநிலையில் நிறைவடைந்தது. இப்போட்டித் தொடரில் இரண்டாவது ஆட்டம் சமநிலையில் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது. துடுப்பாட்டத்தில் ஜசிந்தன் 48 பந்துகளை எதிர்கொண்டு மூன்று சிக்ஸர், மூன்று பவுண்டரிகள் அடங்கலாக 46 ஓட்டங்களையும், சலிஸ்ரன் 14 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர், நான்கு பவுண்டரிகள் அடங்லாக 30 ஓட்டங்களையும், சுதர்சன் 12 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர், இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 24 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சன்யத் 37 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும், சைலோஸ்வரன் 29 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், ஜெனார்த்தனன் 27 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்டநாயாகனாக கார்த்திக் தெரிவு செய்யப்பட்டார்.

(எஸ்.பி.,எஸ்)

# மாவட்ட மட்ட தாச்சி இறுதியில் சிந்து அணி

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் 15ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் மாவட்ட மட்டத்திலான தாச்சிப் போட்டியின் இறுதி ஆட்டத்திற்கு உடுவில் ஆலடி சிந்து அணி தகுதி பெற்றுள்ளது.

மின்னொளியில் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடரின் இரண்டாவது அரையிறுதி ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இப்போட்டியில் உடுவில் ஆலடி சிந்து அணியும், பண்டத்தரிப்பு சாந்தை அணியும் மோதின. இரு அணிகளும் பலம் வாய்ந்த அணிகள் என்பதால் இப்போட்டி பெரும் பரபரப்பாக அமையும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், உடுவில் ஆலடி சிந்து அணி வீரர்களின் ஆட்டம் மிக வேகமானதாக அமைந்ததுடன், இரகர்களின் மனதையும் கவரும் வகையில் இருந்தது. மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய உடுவில் ஆலடி சிந்து அணி 7-3 என்ற பழம் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. ஏற்கனவே, தாவடி காளி அம்பாள் அணி உடுவில் ஆலடி சூப்பர் கிங் அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றமை தெரிந்ததே. இதேவேளை, எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் உடுவில் ஆலடி சிந்து அணியை எதிர்த்து தாவடி காளி அம்பாள் அணி மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(எஸ்.பி)

# கே.சி.சி.சி. இலகு வெற்றி

(யாழ்ப்பாணம்)

கிருபவன், பிரதீஸ் ஆகியோரின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் ஜே.வி.எல். ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரின் பத்தாவது லீக் ஆட்டத்தில் கொக்குவில் கே.சி.சி.சி. அணி இலகு வெற்றிபெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 10ஆவது போட்டியில் மானிப்பாய் பரிஷ் அணியும், கொக்குவில் கே.சி.சி.சி. அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய மானிப்பாய் பரிஷ் அணி கிருபவன், பிரதீஸ் ஆகியோரின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறகொடுத்தது. இறுதியில் மானிப்பாய் பரிஷ் அணி 19 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றது. இதில் துவாரகன் 47 பந்துகளை எதிர்கொண்டு ஒரு பவுண்டரி அடங்கலாக 17 ஓட்டங்களையும், ஜெயரூபன் 7 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் கிருபவன் ஆறு ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும், பிரதீஸ் 13 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 62 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொக்குவில் கே.சி.சி.சி. அணி 5.3 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் பங்குஜன் ஆட்டமிழக்காது 12 ஓட்டங்களையும், சாம்பவன் 12 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ஹரிகரன், ஜெயரூபன், வினோம் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாத கிருபவன் தெரிவானார்.

(எஸ்.பி.,எஸ்)

# லண்டன் பயணத்தில் மேலும் ஒரு காட்சி!




சிறப்பு விருந்தினர்கள் மதிய போசனத்துக்காக மலர்களின் பெயரிடப்பட்ட பதினொரு தனியான மேசைகளில் அமர்ந்தனர். ராஜபக்ஷக்கள், கோல்டன் வட்டல் என்கிற மலரின் பெயர் பொறிக்கப்பட்ட மேசை முன் அமர்ந்துள்ள மகாராணிக்கு நேரே. இடது புறமாக உள்ள மேசையில் அமர்ந்திருந்தார்கள்.

செயலாளர் நாயகம் சர்மா விருந்தினர்களை வரவேற்றுப் பேசுகையில் "பொதுநலவாயத்தின் வரலாற்றிலே சிறப்புமிக்க இந்த நாளில் உங்கள் அனைவரையும் வரவேற்பது எனக்கு அளவற்ற மகிழ்ச்சியைத் தருகிறது" என்றார்.

ராஜபக்ஷ ஜோடி, பொது நலவாய செயலாளர் நாயகத்தின் மனைவி, பாப்ளி சர்மா, நமீபியன் ஜனாதிபதி ஹிபிக்புண்யே போகாம்பா மற்றும் அவரது மனைவி, நியுசிலாந்தின் பிரதமர் ஜோண் பிலிப் கீ மற்றும் அவரது மனைவி ஆகியோருடன் ஒரே மேசையில் அமர்ந்திருந்தனர்.

சுவராஸ்யமானதாக மதியபோசனத்தின்போது, பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரோன் ஜனாதிபதி ராஜபக்ஷவுடன் நேருக்கு நேரான உரையாடல் ஒன்றிலும் ஈடுபட்டார். இந்த சுமுகமான உரையாடலின்போது ராஜபக்ஷ கமரோனுக்கு இலங்கையில் உள்ள தற்போதைய முன்னேற்றங்களை சுருக்கமாக விபரித்தார். பிரித்தானிய பிரதமர் போர்க்குற்றங்களை விசாரணை செய்வதைப் பற்றிய விடயத்தை எழுப்பியபோது, ஜனாதிபதி, பிரித்தானிய பிரதமரிடம், எப்படி தனது அரசாங்கம் இது தொடர்பாக திறமையான ஒரு வேலைத்திட்டத்தை உருவாக்கி அதை பின்தொடர முயற்சிக்கிறது என்பதை விபரித்தார்.

பின்பு உத்தியோகபூர்வ குழுவினர், மகாராணியாரையும் மற்றும் விருந்தினர்களையும் புகைப்படம் எடுத்தபோது கமரோனும் மற்றும் ராஜபக்ஷவும் பக்கத்துக்கு பக்கம் நின்று புகைப்படத்துக்கு காட்சி கொடுத்தனர். இலங்கை ஜனாதிபதி முன்வரிசையின் இடதுபுற கோடியில் பிரித்தானிய பிரதமருக்கு அருகில் நின்றிருந்தார். இந்தக் காட்சி குறிப்பாக புலம்பெயர் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எரிச்சலை மூட்டியிருக்கும்.

- டி.பி.எஸ்.ஜெயராஜ் கட்டுரையிலிருந்து



# 'வயதாகிவிட்டது, இனி அடிதடி இல்லை' ஓய்வு பெறுகிறார் ஜாக்கி சான்

இனி ஆக்ஷன் படங்களில் நடிக்கப் போவதில்லை... ஓய்வு பெறப் போவதாக அறிவித்துள்ளார் உலகப் புகழ்பெற்ற நடிகர் ஜாக்கி சான். கேன்ஸ் சர்வதேசத் திரைப்பட விழாவில் தனது "ஆர்மர் ஒ.்.ப் கோட்" மூன்றாம் பாகத்தை அறிமுகப்படுத்தியபோது அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார். பரபரப்பான சண்டைக் காட்சிகளில் நடிக்க தன் வயது தடையாக உள்ளதாகவும், நடிப்பு தன்னை களைப்படைய வைத்துவிட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

58 வயதாகும் ஜாக்கி சான் தனது 100ஆவது படமான 'சைனீஸ் ஜோடியாக்கை (ஆர்மர் ஒ.்.ப் கோட்-3) உருவாக்கி வருகிறார். இந்தப் படம்தான் அவரது கடைசி ஆக்ஷன் படமாகும். டிசம்பரில் இந்தப் படம் வெளியாகிறது. கேன்ஸ் திரைப்பட விழாவில் சைனீஸ் ஜோடியாக் புரமோஷனுக்காக வந்திருக்கும் ஜாக்கி சான், இந்தப் படத்தோடு நடிப்புக்கு குட்பை சொல்வதாக அறிவித்து, ரசிகர்களுக்கு பெரும் அதிர்ச்சியைத் தந்தார்.

தனது ஓய்வு குறித்து அறிவித்த ஜாக்கி சான் கூறுகையில், "சண்டை போட்டு போட்டு களைத்துவிட்டது. அதிரடி சண்டைக்கு என் வயசு இடம்கொடுக்கவில்லை. இப்போது உலகம் மிகவும் வன்முறைக் களமாக மாறிவிட்டது. உண்மையில் எனக்கு வன்முறை சுத்தமாகப் பிடிக்கவில்லை. அதனால்தான் என் படங்களில் சண்டைக் காட்சியைக் கூட நகைச்சுவையாக்கி விட்டேன்.


"கராத்தே கிட்" நடிக்கும்போதே, போதும் ஆக்ஷன் என்ற மனநிலைக்கு வந்திருந்தேன். சைனீஸ் ஜோடியாக் படத்துக்குப் பின் இனி ஆக்ஷன் படங்களில் நடிக்க மாட்டேன். திரைக்குப் பின்னால் என் பங்களிப்பு இருக்கும். றொபேர்ட் டி நீரோ போல, புதிய பரிமாணத்தில் தோன்றத் திட்டமிட்டுள்ளேன்" என்றார்.

# விஸ்வரூபம் படத்தின் கதை சிங்கப்பூரில் கமல் விளக்கம்



ஹொலிவுட் பாணியில் தயாராகி இருக்கும் விஸ்வரூபம் படத்தின் முன்னோட்டம் மற்றும் படக்காட்சிகளை கடந்த வாரம் சிங்கப்பூரில் சர்வதேச இந்திய திரைப்பட விருது விழாவின்போது, வெளியிட்டார் நடிகர் கமல்ஹாசன். பயங்கரவாதமும், அதற்கு எதிரான போராட்டம்தான் படத்தின் கதை. அமெரிக்கா, ஆப்கானிஸ்தானில் இதுவரை பார்த்திராத இடங்களில் காட்சிகளை எடுத்திருக்கிறார்கள். ஒன்றரை நிமிடம் ஓடும் இந்த முன்னோட்டக் காட்சியில், படத்தின் பிரமாண்டம் தெரிகிறது. படத்தில் கதக் டான்சராகவும் மிரட்டியுள்ளார் கமல்.

விஸ்வரூபம் படம் குறித்து சிங்கப்பூரில் கமல் கூறியதாவது, கடந்த 7 வருடங்களாக என் மனதில் பதிந்திருந்த கதை தான் விஸ்வரூபம். அமெரிக்காவில். தனது மேற்படிப்பை முடிக்க நினைத்த ஒரு நடுத்தர வர்க்கத்து தமிழ்ப் பெண் நிருபமா, அங்குள்ள விஸ்வநாதனை திருமணம் செய்து கொள்கிறாள். 3 வருடம் காதல், ஊடல், கூடலின்றி இல்லறம் நடத்தி பி.எச்.டி முடித்து வேலைக்கும் செல்கிறாள். தனது நடனப் பள்ளியை இடைஞ்சலின்றி நடத்தி வருகிறார் விஸ்வநாத். ஆசை யாரைவிட்டது. நிருபமா வேறு புதுக்கனவு காணுகிறாள். திருமணத்தை துறக்க விரும்புகிறாள். மண முறிவிற்கு என்ன காரணம் சொல்வது என குழம்புகிறாள். விஸ்வநாத்திடம் ஏதாவது களங்கம் உள்ளதா என்பதை துப்பறிய ஒரு ஆளை அமர்த்துகிறாள். கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாகிறது என்பதோடு நிறுத்திய கமல், மீதியை திரையில் நீங்களே பாருங்கள் என்று கூறி முடித்துவிட்டார்.



# மீண்டும் மீண்டும் தனுஷை வம்புக்கு இழுக்கும் சிம்பு...!

தனுஷை வம்புக்கு இழுப்பதே சிம்புவுக்கு வேலையாகிவிட்டது. கடந்த சில தினங்களுக்கு முன்னர்தான் இவரின் "வாலு" படத்தின் ஷூட்டிங் தொடங்கியது. இப்படத்தின் ஒரு காட்சியில் சிம்புவைப் பார்த்து ஹன்சிகா, "ஒரு சில பசங்களை பாக்க பாக்கத்தான் பிடிக்கும், ஆனா உன்னை மாதிரி பசங்களை பாத்த உடனே பிடிச்சிடும்" என்று வசனம் பேசுகி றார். இது படிக்காதவன் படத்தில் தனுஷ், தமன்னாவைப் பார்த்து பேசும் பிரபலமான அந்த வசனத்தின் உல்டாவாகும். ஆனால் இதற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை, இயக்குநர் தான் அப்படி வைத்தார், நான் யாரையும் வம்புக்கு இழுக்கவில்லை என்று ஒரு ஸ்டேட்மென்ட் கொடுத்தார் சிம்பு.

இந்நிலையில் தனுஷை மீண்டும் வம்புக்கு இழுப்பது போன்று பேசியுள்ளார் சிம்பு. செல்வராகவன், பாலா போன்றோரின் படங்களில் நடிக்க விருப்பம் இல்லையா என்று செய்தியாளர் ஒருவர் கேட்டதற்கு, "அவர்களின் படங்களில் நடிக்க நான் விரும்பமாட்டேன். அதுபோன்ற கதைகள் தனுஷுக்கு தான் செட் ஆகும். என் படங்கள் அனைத்தும் பொழுதுபோக்கு படங்களாக இருக்கும். எனக்கு தேசிய விருதோ, ஒஸ்காரோ தேவையில்லை. என் படங்கள் ஓடும் தியேட்டர்களில் கைதட்டலும், விசில் சத்தமும் கேட்டாலே போதும்" என்று சிம்பு கூறியுள்ளார்.

# பெரிதினும் பெரிது!



- மிகப்பெரிய பெருங்கடல் பசிபிக் பெருங்கடல். ஆழம்: 12,925 அடி.
- மிகப்பெரிய பீடபூமி திபேத் பீடபூமி. பரப்பு: 77,000 சதுர மைல்
- மிகப்பெரிய தீவு க்ரீன்லாந்து. பரப்பு: சுமார் 8,40,000 சதுர மைல்
- மிகப்பெரிய பாலைவனம் சகாரா பாலைவனம். பரப்பு: 1,25,000 சதுரமைல்.
- மிகப்பெரிய டெல்டா பகுதி பங்களாதேஷில் உள்ளது. பரப்பு: 30,000 சதுரமைல்.
- மிகப்பெரிய நாடு ரஷ்யா.
- மிகப்பெரிய அருங்காட்சியகம் அமெரிக்க இயற்கை வரலாற்று அருங்காட்சியகம். இது நியூயோர்க்கில் உள்ளது.
- மிகப்பெரிய அரண்மனை சீனாவிலுள்ள பெய்ஜிங்கின் இம்பீரியல் அரண்மனை.
- மிகப்பெரிய வங்கி அமெரிக்காவின் வாஷிங்டனிலுள்ள உலக வங்கி.
- மிகப்பெரிய விமான நிலையம் தென் அரேபியாவின் ரியாத்திலுள்ள அரசர் கலீத் பன்னாட்டு விமான நிலையம்.
- மிகப்பெரிய கார் நிறுத்துமிடம் கனடாவிலுள்ள எட்மண்டன் நகரின் மேற்கு எட்மண்டன்மால்.
- மிகப்பெரிய வளைகுடா மெக்சிக்கோ வளைகுடா. பரப்பு: 5,80,000 சதுரமைல்.

சம்பந்தன் ஐயாவின் மாநாட்டு உரையினை சற்று ஊன்றி வாசிக்கும் போது "ரீமிக்ஸ்" உத்தியைக் ஆற்றல், மனச்சாட்சிக்கு விரோதமான குறுக்கு வழிகள் யாவும் சேர்ந்தே ஒருவரை பாராளுமன்ற உறுப்பினராக்க முடியும். இவற்றுடன் வாய் வல்லமை, பெறுவது தொடக்கம் தம்மவர்களுக்காக ஜனாதிபதி, அமைச்சர்களிடம் சலுகைகள் பெறுவது வரை எந்தவிதக் கூச்சமும் குற்ற உணர்வும் இன்றி நடந்து கொள்வார்கள்...........

பாராளுமன்றம் என்பது கள்வர்களின் குகை என மாபெரும் அரசியல் மேதையான லெனின் கூறிச் சென்றார். இவ்வாறு பெருங்குகைகள் இருந்து வரும் அதேவேளை உள்ளூராட்சி சபைகள் சிறுகுகைகளாகவே இருந்து வருகின்றன. உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள், தலைவர்கள், தவிசாளர்கள் என்போர் இருந்தவாறு மக்கள் சேவை புரிவது தான் விந்தையானதாகும்.

இவ்வாறு பாராளுமன்றத்தில் மாகாண சபையில் உள்ளூராட்சி சபைகளில் பதவிகளும் பட்டங்களும் பெற்று மக்கள் பணத்தைச் சுரண்டிக் கொள்ளையிட்டு வாழ்வதைத் தமிழ்த் தேசியம் தாராளமாகவே ஏற்றுக் கொள்கிறது. இதனையே எமது மண்ணை நாமே ஆள வேண்டும் என்பதன் அர்த்தமாகும். இவர்களுக்கு ஆளும் பிரச்சினை, ஆனால் சாதாரணத் தமிழ் மக்களுக்கோ வாழும் பிரச்சினை. இவர்கள் கோரும் ஆளும் அரங்குகளால் மக்களுக்கு எதுவும் கிடைக்க மாட்டாது. ஆனால் அதிகாரத்தில் உள்ளோருக்கு மட்டும் வாய்ப்புக்களும், வசதிகளும் ஏராளம். அது சிங்களவர் ஆண்டாலும், தமிழர்கள் ஆண்டாலும், முஸ்லிம்கள் ஆண்டாலும் சாதாரண மக்கள் சாதாரண நிலையில் தான்.

**நாங்கள் சிங்கள அரசாங்கங்களை நம்புவதும் இல்லை ஆதரிப்பதும் இல்லை என முழக்கமிடும் தமிழ்த் தேசிய வாதப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வரி விலக்குடன் வழங்கப்பட்ட ஆடம்பரக் கார்கள் பெறுவது தொடக்கம் தம்மவர்களுக்காக ஜனாதிபதி, அமைச்சர்களிடம் ,சலுகைகள் பெறுவது வரை எந்தவிதக் கூச்சமும் குற்ற உணர்வும் இன்றி நடந்து கொள்வார்கள்.**

**- கால கண்டன் கட்டுரையிலிருந்து.**

# பிற்போக்குத் தேசியவாதிகளின் பிடியிலேயே தமிழ் மக்கள்!



காணமுடிந்தது மட்டுமன்றி அதனை வேறு ஒருவரின் கைகளால் எழுதப்பட்டிருக்குமோ என்ற ஒரு சந்தேகத்தையும் கிளப்பியிருக்கின்றது. எது எவ்வாறாயினும் தமிழரசுக் கட்சி மாநாடு முடிவுகளும் சம்பந்தனின் நீட்டி வாசித்த உரையும் தமிழ் தேசிய இனத்தின் மீட்சிக்கான எந்தவொரு புதிய திசை மார்க்கத்தையும் காட்டவில்லை. வேதாளம் மீண்டும் முருங்கையில் என்பது தான் தமிழ்த் தேசிய வாத அரசியல் அரங்கிலே காணக்கிடக்கிறது.

வாட்டசாட்டமானவர்களாகவே தமிழரசு - கூட்டமைப்புத் தலைவர்கள் காணப்படுகின்றனர். ஆனால் அவர்களிடம் பழமைவாதமும் தலைமைச் சுயநலங்களும் பாராளுமன்ற மற்றும் பதவிப் பேரவாக்களும் காணப்படுகின்றனவே அன்றி மக்கள் சார்போ அரசியல் அர்ப்பணிப்புக்களோ இல்லை.

அதனால் அவர்களிடம் புதிய சிந்தனைப் போக்குகளையோ அன்றி செயற்றிட்டங்களையோ காண இயலவில்லை. பூசாரியாக இருக்கும் வரை மணியைக் கிலுக்கிக் கொண்டிருப்பது என்பது போலவே அவர்களின் நிலை உள்ளது. அதற்கு அப்பால் வேறு எதுவுமே இல்லை என்பது போலவே தமிழ் பாராளுமன்றத் தலைமைகள் இருந்து வருகின்றன. இவர்களைத் தமது தலைவர்கள் என ஏற்றுக் கொண்ட தமிழ் மக்கள் தான்

**தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் வடக்கின் அநேகமான உள்ளூராட்சி சபைகளில் ஆளும் தரப்பாக இருந்து வருகின்றார்கள். அங்கெல்லாம் ஊழல், ஏமாற்று, மோசடி, இலஞ்சங்களும், அதிகார துஷ்பிரயோகங்களும் தாராளமாகவே இருந்து வருவதாகவே மக்கள் பேசிக் கொள்கின்றனர். இவ்வாறு பாராளுமன்றத்தில் மாகாண சபையில் உள்ளூராட்சி சபைகளில் மக்கள் பணத்தைச் சுரண்டிக் கொள்ளையிட்டு வாழ்வதைத் தமிழ்த் தேசியம் தாராளமாகவே ஏற்றுக் கொள்கிறது. இதனையே எமது மண்ணை நாமே ஆள வேண்டும் என்பதன் அர்த்தமாகும். இவர்களுக்கு ஆளும் பிரச்சினை, ஆனால் சாதாரணத் தமிழ் மக்களுக்கோ வாழும் பிரச்சினை.**

பாவப்பட்ட மக்களாக இன்று வரை சிலுவை சுமந்தவர்களாக இருந்து வருகின்றனர். இளநீர் குடித்தவன் யாரோ கோம்பை சூப்புபவன் யாரோ என்ற நிலைதான் நீடிக்கிறது.

ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராக வந்து விட்டால் போதுமானது. அதுவும் ஆதிக்க அரசியல் கட்சியில் இருந்து வந்து விட்டால் அத்தகைய பாராளுமன்ற உறுப்பினர்களே குறிப்பிட்ட மக்கள் சமூகத்தின் அரசியல் தலைமையாகத் தம்மைத் தாமே சுய பிரகடனம் செய்து கொள்கிறார்கள். அவ்வாறு ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராக வருவதற்கு அரசியல் ஞானமோ, விவேகமோ தூர நோக்குடைய கொள்கை கோட்பாடுகளோ அல்லது மக்கள் சேவையோ தகுதிகள் அல்ல. சாதி, சமூகத்தொகுதி, சொத்து வசதி, பணம் வாரி இறைக்கும் ஊடகங்களின் பின்புலம், அரசியல் நடிப்புத்திறன் போன்றவை மேலதிக திறமைகளாகும்.

இவை பொதுவானவைகளாக இருந்த போதிலும் தமிழ்ச் சூழலில் ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராக வருவதற்கு ஒரு ஆதிக்க அரசியல் கட்சியில் நிற்பது அவசியமாகும். அந்த வகையிலேயே தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அன்றிலிருந்து இன்று வரை தெரிவு செய்யப்பட்டு வந்திருக்கின்றார்கள். இதற்கு ஓரிரு விதி விலக்குகள் இருந்த போதிலும் பொதுவான ஓட்டம் இனம், மொழி, மதம் சார்ந்த தமிழ்த் தேசியம் என்பதன் ஊடாகவே அரசியல் தலைமைகள் தம்மைப் பாராளுமன்ற வாதிகள் ஆக்கிக் கொண்டார்கள்.

இது தனியே தமிழ்த் தரப்பில் மட்டுமன்றி சிங்கள, முஸ்லிம், மலையக மக்களிடையேயும் இவ்வாறு நடந்து வந்திருக்கின்றது. பாராளுமன்ற உரை இடையிடையே அறிக்கைகள், பத்திரிகை நேர்காணல், பதில் அறிக்கைகள், ஏதாவது அனர்த்தம் அல்லது சம்பவம் இடம்பெற்றால் அந்த இடங்களுக்கு நேரில் சென்று பார்த்தல், இவ்வளவும் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தனது பதவியை தக்க வைத்துக் கொள்வதற்குப் போதுமானவையாகும்.

இவற்றுக்கு அப்பால் பரந்து பட்ட மக்கள் பிரச்சினைகளுக்கும் துன்பங்களுக்கும் மாற்றுத் திட்டங்கள் எதுவுமே இப்பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கிடையாது. அதேவேளை இப் பதவிகளை வைத்து தம்மை அந்தஸ்து மிக்க பெரிய மனிதர்களாகவும் வெவ்வேறு வழிகளில் பணம் பண்ணுவோராகவும் சொத்து சுகம் அனுபவிப்பவர்களாகவும் தம்மை ஆக்கிக் கொள்வார்கள். மக்களுக்காகச் சேவை செய்து ஓட்டாண்டி ஆகிப் போன ஒரு பாராளுமன்ற உறுப்பினரையும் காண இயலாது.

நாங்கள் சிங்கள அரசாங்கங்களை நம்புவதும் இல்லை ஆதரிப்பதும் இல்லை என முழக்கமிடும் தமிழ்த் தேசிய வாதப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வரி விலக்குடன் வழங்கப்பட்ட ஆடம்பரக் கார்கள் ஊழல்களிலும், இலஞ்சங்களிலும் ஊறித் திளைத்து வருகின்றார்கள். அது மட்டுமன்றி கொலை, பாலியல் வன்புணர்ச்சி ஆகியவற்றிலும் தாராளமாக ஈடுபட்டு வருகின்றனர். இவற்றுக்கு தமிழ்த் தேசியவாதம் பேசிய எவரும் விதிவிலக்காக இருக்கவில்லை.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் வடக்கின் அநேகமான உள்ளூராட்சி சபைகளில் ஆளும் தரப்பாக இருந்து வருகின்றார்கள். அங்கெல்லாம் ஊழல், ஏமாற்று, மோசடி, இலஞ்சம் என்பன மருந்திற்கும் இல்லை எனக் கூட்டமைப்பினரால் சத்தியம் செய்ய முடியாத நிலையிலேயே அவர்கள் இருந்து வருகிறார்கள். வெளியே வராத ஊழல், இலஞ்சங்களும், அதிகார துஷ்பிரயோகங்களும் அங்கு தாராளமாகவே இருந்து வருவதாகவே மக்கள் பேசிக் கொள்கின்றனர்.

பட்டம், பதவிகளுக்காக அலையும் தமிழ்த் தேசியவாதம் பேசியோரைத் திரும்பிய இடமெல்லாம் தரிசிக்க முடிகிறது. முன்பு அரசியலமைப்பிற்கான ஆறாவது திருத்தத்தின் கீழ் சத்தியப் பிரமாணம் செய்ய மாட்டோம் என்ற, தமிழ்த் தேசியமே தமது உயிர் என உரைத்த தலைவர்களும் தொண்டர்களும் இன்று அவற்றையெல்லாம் மறந்து அதே சத்தியப் பிரமாணம் எடுத்து பதவிகளைச் சுமந்து நிற்கிறார்கள். முன்பு புலிகள் இயக்கத்தின் சிற்றூர் சபைகளில் இருந்தவாறு யாரிடம் பவுண், பணம் இருக்கின்றன என்பதைக் காட்டிக் கொடுத்து கறக்க வைப்பதற்கு கையாட்களாக இருந்தவர்களில் பலர் இன்று வெவ்வேறு பதவிகளில்

இந்நிலையில் தமிழரசுக் கட்சியா அல்லது தமிழ்த் தேசிய கூட்டமைப்பா அல்லது இரண்டு தேசக் கொள்கை கொண்ட கஜேந்திரகுமார்-கஜேந்திரன் கட்சியா என அங்கலாய்ப்பதில் பலன் இல்லை. இவை யாவும் பழமை வாதம் நிறைந்த ஆதிக்க சிந்தனையையும் அதிகார வக்கிர சிந்தனை வழிவந்த தமிழ்த் தேசியவாதக் கட்சிகளேயாகும்.

இவர்கள் இதே படகுகளில் ஏறி நின்றவாறு தமிழ் மக்கள் எதிர்நோக்கும் சமுத்திரம் போன்ற பிரச்சினைகளுக்கு சிறு துடுப்பு வைத்து வலித்துக் கரைகாண முற்பட்டுள்ளனர். இதில் பாராளுமன்ற ஆசனங்களைப் பங்குபோட்டுக் கொண்டால் அதுவே அவர்களுக்குரிய ஈடேற்றமாகும்.

தமிழ் மக்கள் இது வரை பட்ட அழிவுகள் போன்று இன்னும் பல அழிவுகள் பட்டாலும் தமிழ்த்தலைமைகளுக்குப் பிரச்சினை இல்லை. அவர்களது குடும்பங்கள், உறவுகள் கொழும்பு, சென்னை, இலண்டன், நியூயோர்க், ரொறாண்டோ என வியாபித்து நிற்கின்றன. அந்நாடுகளில் சமியாக் குணம் கொண்டோர் எமது மக்களின் துயரங்கள், கண்ணீர்க்கதைகளை வைத்து தமிழீழ நாடகத்தைத் தொடர்ந்து அரங்கேற்றி வருகின்றார்கள். அதுவும் இங்குள்ள இத் தமிழ்த் தேசியவாத வீராதி வீரர்களுக்கு ஆத்ம பலமும் பண பலமும் தான்.

இவை யாவற்றுக்கும் மேலால் சம்பந்தன் ஐயா கூறியது போன்று இன்று இந்தியாவும் அமெரிக்காவும் நமது பக்கத்தில் இருக்கும் போது பயமேன். என்றாலும் பொறுமை காக்க வேண்டும். எதுவரை என்று விளக்கம் கேட்பீர்களானால் அது பங்களாதேஷ், கிழக்கு தீமோர், கொசோவோ, தென் சூடான் போன்ற நாடுகளில் இடம் பெற்றவைகள் வரை இராஜதந்திரப் பொறுமை காப்பது என்றே கூறுவார்கள்.

இவ்வாறான தமிழ்த்தேசியவாத ஆதிக்க அரசியலானது தமிழ்ச் சமூகப் பரப்பில் ஊறித்திளைத்த ஒன்றாக விளங்கும் போது ஒரு முற்போக்கான தேசியம் என்பது சிறு பொறியாக எழவேண்டியது காலத்தின் தேவையாகவே காணப்படுகின்றது. அத்தகைய சிறு பொறி பெரும் காட்டுத்தீயாகவே பற்றிப் பரவ முடியும் என்பது நாடுகளின் வரலாறுகளில் காணக்கிடைத்தவைகளாகும். அவ்வாறு தோன்றும் முற்போக்கு ஜனநாயக சக்திகளோடு கைகோர்த்து முன் செல்ல முடியும் என்ற நம்பிக்கை எவ்வகையிலும் இல்லாது போய்விடவில்லை.

**தமிழ் மக்கள் இது வரை பட்ட அழிவுகள் போன்று இன்னும் பல அழிவுகள் பட்டாலும் அவர்களுக்குப் பிரச்சினை இல்லை. அவர்களது குடும்பங்கள், உறவுகள் கொழும்பு, சென்னை, இலண்டன், நியூயோர்க், ரொறாண்டோ என வியாபித்து நிற்கின்றன. அந்நாடுகளில் சமியாக் குணம் கொண்டோர் எமது மக்களின் துயரங்கள், கண்ணீர்க்கதைகளை வைத்து தமிழீழ நாடகத்தைத் தொடர்ந்து அரங்கேற்றி வருகின்றார்கள். அதுவும் இங்குள்ள இத் தமிழ்த் தேசியவாத வீராதி வீரர்களுக்கு ஆத்ம பலமும் பண பலமும் தான்.**

# சுலபமாகச் சீரழிந்து போகும் அளவுக்கு யாழ்ப்பாணக் கலாசாரம் பலவீனமானதா?

"யாழ்ப்பாணத்தில் கலாசாரம் சீரழிந்து வருகிறது. இளைஞர்கள் தறிகெட்டுவிட்டார்கள்." என்ற விதமான குற்றச்சாட்டுக்கள் அண்மைக் காலமாக உரத்து ஒலிக்கத் தொடங்கியுள்ளன.

அதுவும், இயல்புச் சூழ்நிலை திரும்பி, ஏ-9 பாதையூடான போக்குவரத்துக்கள் சுமுகமான பின்னர்தான இது அதிகரித்திருப்பதாக பரவலாக ஊடகங்களிலும் குற்றஞ்சாட்டப்பட்டு வருகின்றது.

வெளிநாடுகளிலிருந்து நடத்தப்படும் சில இணையத்தளங்கள் இன்னும் ஒருபடி மேலே போய், இணைய சேவை மையங்களில் மாணவர்கள் சீர்கெடுவதாகவும், யாழ்.நகரில் ஆண், பெண்கள் தவறான நடத்தைகளில் ஈடுபடுவதாகவும் ஆதாரமற்ற காணொளிகளை வெளியிடுகின்றன.

இன்றைய இளைஞர்கள் தமது இளமைக் காலம் முழுவதையும் போர்ச சூழலிலேயே கழித்தவர்கள். ரயில் வண்டியையே காணாமல், நவீன வசதிகள் எதனையும் அனுபவிக்காமலே வாழ்ந்து விட்டவர்கள்.

புதிய சூழலில் ஏராளமான வசதிகளை அனுபவிக்கக் கிடைத்ததில் திளைத்திருக்கும் இவர்கள், சில வேளைகளில் திசைமாறியிருந்தாலும், அதற்கு அவர்கள் காரணம் என்பதை விட, இத்தனை காலமும் இருண்ட சூழ்நிலைக்குள் வைத்திருந்த நிலைமைகள்தான் காரணமாகிறது.

திடீரெனத் தமக்குத் கிடைத்திருக்கும் பல்வேறுபட்ட வாய்ப்புக்களையும் அனுபவிக்கத் துடிக்கும் அவர்களை, கலாசார சீர்கேட்டின் அடையாளங்களாகக் கூறி விடுவது எந்தளவுக்கு நியாயம்? சுலபமாகச் சீரழிந்து போகும் அளவுக்கு யாழ்ப்பாணக் கலாசாரம் அவ்வளவு பலவீனமான ஒன்றா?

இந்தக் கேள்விகள் மனதைக் குடைய, துறைசார்ந்த நிபுணர்கள் சிலரிடம் இதுபற்றிக் கேட்டோம்.

சாந்திகம் உளவளத்துணை நிலையத்தில் கடமையாற்றும் உளவளத் துணை ஒருங்கிணைப்பாளரான வைத்திய கலாநிதி திருமதி பு.ஜீவானந்தம் நிலைமையை இவ்வாறு விளக கினார்:

"இளைஞர்கள் அப்படியொன்றும் தறிகெட்டுப் போய்விடவில்லை. அவரகளைக் குற்றவாளிகள் என்று சொன்னால், உண்மையில் அவர்களை வழி



நடத்துபவர்கள் தான் குற்றவாளிகளாவார்கள்" என்று சொன்ன அவர்,

"இன்று இங்கே கிடைக்கும் பலவும் நமது இளைஞர்களுக்குப் புதியவை. நீண்ட காலத்துக்குப் பின்னர் தளர்வான சூழலில் பலவித வசதிகளை அறிமுகப்படுத்தும் போது அது பற்றிய நன்மை தீமைகளை எடுத்துரைப்பார் யாருமில்லை. இதனால், எதையும் பரிச்சயப்படுத்திப் பார்க்கும் வயதுடைய இளைஞர்கள், இன்றைய சமுதாயத்தின் வாழ்க்கைத்தரம் உயர்ந்து காணப்படுவதனாலும், அவர்களின் உணர்வுகளை கையாளப் போதியளவு அறிவு இல்லாமையினாலும் சில முரண்பாடான பிரச்சினைகளுக்கு ஆளாகிறார்கள்" என்று மேலும் விளக்கினார்.

இதே மாதிரியான பதிலைத்தான்



பிராந்திய சுகாதார சேவைத் திணைகளத்தின் (RDHS) உளவள ஆலோசகர் (Psychiatrist social works) திரு. எஸ்.இரவீந்திரனும் கூறினார்.

"பெரியவர்கள் நாளாந்தம் காட்டிக் கொடுக்கும் விடயங்கள் இளைஞர்களை ஈர்க்கக் கூடிய வகையிலுள்ள போது அதை அவர்கள் செய்ய முயல்கிறார்கள்" என்கிறார் அவர்.

ஆனாலும், மதுவுக்கும், போதைக்கும் அடிமையாவதும், வீதிகளில் பெண்களுடன் சேட்டை புரிவதும், பெண் பிள்ளைகள் திருமணமாகாமலே கருவுறுவதும், பெற்றெடுத்த குழந்தைகளைத் தூக்கியெறிவதும் என நீண்டு செல்லும் பிரச்சினைகளை அப்போ என்னவென்பது? ஏன் இளைஞர்கள் இவ்வாறு நடந்து கொள்கிறார்கள்? என்று திருமதி ஜீவானந்தத்திடம் கேட்டபோது,

"பொதுவாகவே இளைஞர்களுக்கு அவர்களது பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் ஏனைய பெரியவர்களுடான உளவள ஊடாட்டம் மிகவும் குறைவாகவே இருக்கிறது. இந்த நிலையில், தமது பிரச்சினைகள், சந்தேகங்களை இளைஞர்கள் பெரியவர்களிடம் சொல்லவோ, கேட்கவோ தயங்குகிறார்கள். அது மட்டுமன்றி, பெரியவரகளும் முன்னெச்சரிக்கையாக எதையும உணர்த்துவதில்லை. இந்த இடைவெளியே இளைஞர்கள் இவ்வாறு நடந்துகொள்ளக் காரணமாக அமைந்து விடுகிறது" என்றார்.

இளைஞர்களுக்கு சமூக விழுமியக கல்வி கற்பிக்கப்படாமைதான் இதற்கு காரணம் என்று கூறும் திரு. இரவீந்திரன், பெற்றோர் முதல் சமூக நிறுவனங்கள் வரை, இளைஞர்களுக்கு விழுமியக் கல்வியை ஊட்டத் தவறுகிறார்கள் என்கிறார்.

**"இன்று இங்கே கிடைக்கும் பலவும் நமது இளைஞர்களுக்குப் புதியவை. நீண்ட காலத்துக்குப் பின்னர் தளர்வான சூழலில் பலவித வசதிகளை அறிமுகப்படுத்தும் போது அது பற்றிய நன்மை தீமைகளை எடுத்துரைப்பார் யாருமில்லை. இதனால், எதையும் பரிச்சயப்படுத்திப் பார்க்கும் வயதுடைய இளைஞர்கள், இன்றைய சமுதாயத்தின் வாழ்க்கைத்தரம் உயர்ந்து காணப் படுவதனாலும், அவர்களின் உணர்வுகளை கையாளப் போதியளவு அறிவு இல்லாமையினாலும் சில முரண்பாடான பிரச்சினைகளுக்கு ஆளாகிறார்கள்"**

பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் இருக்க வேண்டிய உறவு முறையையும் அவர் தெளிவாக விளக்கினார்.

13 வயதுக்கிடைப்பட்ட பிள்ளைகள் பெற்றோரை சார்ந்து வாழ்பவர்கள் (Dependent Children) அடிப்படை சமூக விழுமியக் கல்வியுடன், தமது முழுக் கட்டுப்பாடுகளையும் பெற்றோர கொடுக்க முடியும்.

13 - 20 வயதுக்கிடைப்பட்ட சுதந்திரமான வாழ்க்கையை விரும்பும் பிள்ளைகளுக்கு (Independent Children) பெற்றோர் அளவுக்கதிமான கண்டிப்பு, விமர்சனங்கள் மற்றும் கட்டுப்பாடுகளைத் திணிக்கும் போது பிள்ளைகள் அதை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். ஒரு சிலர் முறை தவறவும் கூடும்.

***பெற்றோர் பிள்ளைகள் மேல் நம்பிக்கையுடன் அன்பு (Authoritative & love) காட்டி வளர்க்க வேண்டும். இது கடினமாகதெனினும் இதுவே சரியான வளர்ப்பு முறையாகும். பிள்ளைகளுடைய தலைமைத்துவப் பண்பை வளர்த்து, வாழ்க்கைத் திறன்கள் மற்றும் அவர்களுடைய கடமை -பொறுப்புகளை உணர்த்த வேண்டும். பாலியல் கல்வியை விரசத்தோடு பார்க்காது, அறிவு புகட்ட வேண்டும்.***

அடுத்தபடியாக 20 - 25 வயது. இது இன்னொருவருடன் தங்கி வாழப் பழகும் (Inter Dependent) பருவமாக இருக்கிறது. பல்கலைக்கழக மாணவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் இன்னொருவருடன் சார்ந்திருக்க விழைவர். இங்கும் சரியான புரிந்துணர்வு மற்றும் தன்னிச்சையான முடிவுகளுக்கு இடமளிக்கப்படும் பட்சத்தில் தவறான



செயல்கள் நடக்க வாய்ப்பில்லை.

எல்லா விடயங்களிலும் தலையிடுதல், விமர்சிப்பு, கண்டனங்கள், குறைகளை பெரிதளவில் வெளிப்படுத்தல் போன்ற அணுகுமுறைகளைப் பெற்றோர் கடைப்பிடித்தால் நிலைமை மோசமடையும். இதன் போது, பெற்றோர் மறைமுகமாக பிள்ளைகளின் முடிவுகளுக்குத் தடையாக நிற்கின்றனர். இதனால், "செய்யலாமா? இல்லையா?" என்ற குழப்பம் மற்றும் கேட பதில் தயக்கம் என்பவற்றால் வழி மாறுகிறார்கள்.

சமூக நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளும் சரியான வாழ்வியல் பற்றிய விடயங்களை, சமூக விழுமியங்களை, பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்கத் தவறுவதாலும் இத்தகைய பிரச்சினைகள் எழுகின்றன என்று கூறும் இரவீந்திரன், இதற்கு சமூகம் தான் பொறுப்பேற்க வேண்டும் என்று வாதிடுகின்றார்.

சரி, தம் மீதான இத்தகைய குற்றசாட்டுக்கள் குறித்து இளைஞர்கள் என்ன செய்ய வேண்டும் என்று திருமதி ஜீவானந்தத்திடம் கேட்டோம்.

பெற்றோரின் தேவைகள் என்ன? அவர்கள் எம்மிடம் எதை எதிர்பார்க் கிறார்கள்? என்பவற்றை இளைஞர்கள் புரிந்து கொள்ள வேண்டும். பெரியவர்கள் சொல்லும விடயங்களைச் செவிமடுத்தல், எந்த ஒரு புதிய விடயத்தையும் பெரியவரகளுடன் நட்புடன் கேட்டு விளக்கம் பெறல் என்பன அவசியமாகும்.

வீட்டுக்கு மறைத்துச் செய்ய முயலும் விடயங்கள் பற்றி அவற்றைச் செய்ய முன்னரே, அதனால் ஏற்படக கூடிய பின் விளைவுகளை தெரிந்து கொள்ள வேண்டும். முக்கியமாக், பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார விடயங்களை முறையாகக் கற்றுக்கொள்ளவேண்டும் என்று ஆலோசனை கூறுகிறார் வைத்திய கலாநிதி திருமதி ஜீவானந்தம்.

அதேவேளை, பெற்றோர் பிள்ளைகளைப் புரிந்து நடப்பவர்களாக இருப்பதுடன் கவனிப்பு உள்ளவர்களாக இருக்க வேண்டும். பாடசாலைகளில் மாணவர்களுக்கு உளவள ஆலோசனை வழங்குதல், இனப்பெருக்க சுகாதாரம் பற்றிய விளக்கத்தை அவர்களுக்குத் தெளிவுபடுத்துதல் என்பனவும் அவசியமாகும் என்கிறார் அவர்.

(சிகரம் செய்திப் பிரிவு)

இதற்காகச் சட்டத்தில் கூட சிறு மாற்றம் ஏற்படின் அது பாதிக்கப்பட்ட இளைஞர்களின் எதிர்காலத்துக்கு நல்லது. குறிப்பாக, பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளான சிறு பிள்ளைகள் கருக்கலைப்புச் செய்ய அனுமதிப்பதுடன், புறம்பாக மனமொத்து முறையற்ற கர்ப்பமாகும் பிள்ளைகளுக்கு இது பொருந்தாது என்று சட்டத்திருத்தம் கொண்டுவரலாம் என்கிறார் அவர்.

நிலைமையைச் சீராக்க பெற்றோரும், பிள்ளைகளும் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி பின் வருமாறு விளக்குகிறார் இரவீந்திரன்:

பெற்றோர் பிள்ளைகள் மேல் நம்பிக்கையுடன் அன்பு (Authoritative & love) காட்டி வளர்க்க வேண்டும். இது கடினமாகதெனினும் இதுவே சரியான வளர்ப்பு முறையாகும். பிள்ளைகளுடைய தலைமைத்துவப் பண்பை வளர்த்து, வாழ்க்கைத் திறன்கள் மற்றும் அவர்களுடைய கடமை -பொறுப்புகளை உணர்த்த வேண்டும் என்று கூறும் அவர், பாலியல் கல்வியை விரசத்தோடு பார்க்காது, அறிவு புகட்ட வேண்டும் எனச் சொன்னார்.

இவற்றைச் சமுதாயம் உறுதிப்படுததுமானால், இளைஞர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் நீங்க வழியேற்படும். நிலைமையைச் சீர்செய்யாமல் மேலெழுந்தவாரியாக இளைஞர்களைக் குறறஞ்சாட்டுபவர்கள், தாமே இளைஞர்களின் இந்த நிலைமைக்குக் காரணமாகிறார்கள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும் என்றும் சொன்னார அவர்.

# நர்த்தன ஷேத்திரா நடனப்பள்ளி ஆற்றுகையாளர்கள் கௌரவிப்பு

(கிரு - சிகரம்)

2011ஆம் ஆண்டு நடைபெற்ற அரச தேசிய நாட்டிய நாடக விழாவில் பங்கு பற்றி வெற்றி பெற்ற யாழ். நர்த்தன ஷேத்திரா நடனப்பள்ளி ஆற்றுகையாளர்களுக்கான கௌரவிப்பு கடந்த வாரம் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோயிலடி ஸ்ரீ காமாட்சி அம்பாள் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கை கலைக் கழகத்தின் அரச நாட்டிய நாடகக்குழு கலாசார அலுவல்கள் திணைக்களம் கலாசார மற்றும் கலை அமைச்சின் ஒருங்கமைப்பிலேயே இந்த நாட்டிய நாடக விழா கடந்த ஆண்டு நடைபெற்றது.

ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் இந்த விழாவில் யாழ். நர்த்தன ஷேத்திரா நடனப் பள்ளி 2011ஆம் ஆண்டு நடைபெற்ற அரச தேசிய நாட்டிய நாடக விழாவில் ஸ்ரீகண்ணனின் சங்க இலக்கியம் "புறானாறு கூறும் இரும்பொறை மன்னனின் புகழ்கூறும் நாட்டிய நாடகம் மற்றும், இராவணனின் கதை கூறும் "கம்பன்கதை" நாட்டிய நாடகம் ஆகியன தேசிய ரீதியில் முதல் இடத்தினைப் பெற்றுக்கொண்டன.

அரச தேசிய நாட்டிய நாடக விழாவில் யாழ். நர்த்தன சேஷத்திரா நடனப் பள்ளியின் இயக்குனரும் இரும்பொறை மன்னனாகவும் நடித்த ஸ்ரீகண்ணனுக்கு, சிறந்த நாட்டிய நாடகத்திற்கு இரண்டு விருதுகளும், சிறந்த ஒளி அமைப்பு , சிறந்த எழுதுருவாக்கம், சிறந்த முகபாவம், சிறந்த வேட உடை ஒப்பனைக்கு இரண்டு விருதுகள் என ஏழு விருதுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.



செங்கணான் சோழனாக நடித்த தவேந்திரன் சிறந்த நாட்டிய நடிகருக்கான விருதையும், இராவணனாக நடித்த தர்மலிங்கம் சிறந்த நாட்டிய நாடக நடிப்பு, சிறந்த முகபாவனைக்கான விருதுகளையும், பிரியதர்சினி வாகீசன் மற்றும் பவித்திரா தயாபரனுக்கு சிறந்த மேடை அமைப்புக்கான விருதுகளையும், சீதையாக நடித்த வானதி சிறந்த நாட்டிய நடிகை விருதையும். வித்தியாதாரணி, பிரவீணா ஆகியோர் சிறந்த துணை நடிகை விருதையும், இராமராக நடித்த அனுராஜ் சிறந்த ஒப்பனைக்கான விருதையும், போர்வீரர்களாக நடித்த திஷோதரன், கஜரூபன், தயாநிஷன், பகீரதன் ஆகியோர் சிறந்த போர்வீரர்களுக்கான விருதையும் பெற்றுக்கொண்டனர்.

அத்துடன், நந்தகுமார் சிறந்த மிருதங்க வித்துவான் விருதையும், ரஜீவன் இசையமைப்பாளர் விருதையும், ரட்ணப்பிரபாகர சர்மா சிறந்த தபேலா வித்துவான் விருதையும், தயாபரன், விபீசன் ஆகியயோர் சிறந்த பக்கப் பாட்டுகாரர்களுக்கான விருதுகளையும் பெற்றுக்கொண்டனர். இந்த நிகழ்வில் கலாகீர்த்தி ஸ்ரீமதி சாந்தினி சிவநேசன், நடனாவாரிதி திருமதி பத்மினி செல்வேந்திரகுமார், ஸ்ரீமதி வசந்தி குஞ்சிதபாதம், நல்லூர் பிரதேச கலாசார உத்தியோகத்தர் தமிழ்மாறன், நடனஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# நல்லூரில் வீதி அகலிப்பு; மோர் வியாபாரம் பாதிப்பு

சிகரம்)

வீதி அகலிப்புப் பணிகள் தற்போது மிக துரிதகதியில் நடைபெற்றுவருகின்றன. இந்த வீதி அகலிப்புப் பணிகளால், தனது வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக நல்லூர் பின்வீதியில் மோர் வியாபாரத்தில் ஈடுபட்டுவரும் பெண்மணி ஒருவர் குறிப்பிட்டார்.

நல்லூர் தெற்குப் பக்க மற்றும் முன்பக்க வீதிகள் யாழ்.மநகரசபை வரையில் புனரமைப்புப் பணிகளுக்காக மூடப்பட்டுள்ளதனால் அவ் வீதியால் பயணிப்பவர்கள் வேறு வீதியூடாகவே தமது பயணத்தை மேற்கொள்கின்றனர். மூடப்பட்டுள்ள தெற்கு வீதியிலேயே குறித்த மோர்க்கடை உள்ளது. இதனாலேயே நுகர்வோரின் எண்ணிக்கை மிகக் குறைந்துள்ளதால் தனது வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறுகிறார்.

கோடை காலங்களில் அதிகளவில் மோர் விற்பனையில் ஈடுபடுவதாகக் குறிப்பிட்ட இந்தப் பெண்மணி, மழை காலங்களில் நுகர்வோரின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுவதால் அக் காலப் பகுதயில் மோர் விற்பனையில் இடுபடுவதில்லை எனவும், 60ரூபாவுக்கு ஒரு போத்தல் பாலை கொள்வனவுசெய்து, அதனைப் பின்னர் பதப்படுத்தி மோராக்கி ஒரு போத்தல் மோரை 20ரூபாவிற்கு விற்பனை செய்வதாகவும் அவர் தெரிவித்தார்.

மோரின் உள்ளீட்டுப் பொருட்களான வெங்காயம், பால் போன்ற பொருட்களின் விலையதிகரிப்பால் முதலிட்ட பணத்தை சில வேளைகளில் பெறமுடியவில்லை என்றும் அவர் கவலை வெளியிட்டார்.


# புதுப்பொலிவு பெறும் அந்தோனியார் ஆலயம்

(கஜா-சிகரம்)

மானிப்பாய் பிரதான வீதியில் அமைந்துள்ள அந்தோனியார் தேவலாயம் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது.

சுற்றுலாப் பயணிகளின் பார்வையிடமாகத் திகழும் இந்தப் புகழ் பெற்ற தேவாலயத்தை மேலும் விஸ்தரிக்கும் பொருட்டே இந்தப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப் படுவதாக தேவாலயத்தின் நிர்வாகிகள் தெரிவித்தனர்.

தென்னிலங்கை கட்டடத் தொழிலாளர்களினால் மேற்கொள்ளப்பட்டுவரும் புனரமைப்புப் பணிகளால் தேவாலயம் புதுப்பொலிவு பெற்று வருகின்றமை தமக்கு மிகுந்த மகிழ்ச்சியளிப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.






52ஆவது படைப்பிரிவு மற்றும் செஞ்சிலுவைச் சங்கத்தின் குருநாகல் கிளை என்பன ஒன்றிணைந்து கடந்த சனிக்கிழமை மட்டுவில் பகுதியில் மருத்துவ முகாம் ஒன்றை நடாத்தியிருந்தது. தெல்லிப்பளை மந்திகை வைத்தியசாலையிலிருந்த ஒரு வைத்தியரும், யாழ்.போதனா வைத்தியசாலையிலிருந்து இரண்டு வைத்தியர்களும் இந்த மருத்துவ முகாமில் கலந்துகொண்ட மக்களுக்கு சிகிச்சைகள் மற்றும் அறிவுரைகளை வழங்கினர். சுமார் 300ற்கும் மேற்பட்ட மக்கள் இந்த மருத்துவ முகாமில் கலந்துகொண்டு பயன்பெற்றனர். (சிகரம்)

# மெய்தான் பாருங்கோ...

## இனம் காணப்பட வேண்டியவை



ஒரு அரச நிர்வாகக் கட்டமைப்புக்குள்ளும் சரி,அல்லாட்டி வேறை எந்த நிறுவனங்களுக்குள்ளும் சரி, அதுக்குள்ள பணிபுரியுற ஆட்களுக்கு ஏதோ ஒரு வகையில ஒவ்வொரு ஆளுமையெண்டது இருக்கத்தான் செய்யும் பாருங்கோ!

இந்த ஆளுமை எண்டுசொல்லுறது ஏதோ ஒரு பெரிய படிப்பு படிச்சாப் போலையோ, அல்லாட்டி அதுக்கும் அப்பால மேற்கொண்டு படிக்கிற படிப்பாலையோ வருமெண்டில்லை.

பள்ளிக்கூடத்துக்குப் போய் அறப் படிக்காத எந்தவொரு மனிசனும் கூட, தான் பாக்கிற தொழிலின் அனுபவப் படிப்பினூடாக தன்ர ஆளுமையை வளர்த்துக்கொண்டு, வாழ்க்கையில முன்நிலைக்கு வந்து விடுகிறான் கண்டியளே!

நான் அறியத்தக்கதாக கல்வியறிவு குறைஞ்ச ஆட்கள் பலபேர் சில நிறுவனங்களில ஆரம்ப வேலையாக குப்பை கூட்டுற... தேத்தண்ணி ஊத்துற வேலைக்குச் சேந்து... பிறகு படிப்படியாக தங்கட தொழில் அனுபவத்தால ஒவ்வொரு உயர் நிலைக்கும் மாறி, பிற்காலத்தில அந்த நிறுவனங்களையே நிர்வகிக்கக் கூடிய தகுதிக்கு உயர்ந்திருக்கினம் கண்டியளே!

இவையள் இப்படி உயர் நிலைக்கு வாறதுக்கு... இவையளுக்குள்ள இருக்கிற ஆளுமைகளை அங்கை பொறுப்பதிகாரியாக இருக்கிற இன்னொருவர் இனம் காணப்பட வேணும் பாருங்கோ! அப்பிடி இனம் காணுகிறவருக்கு பொது நலம் சார்ந்த எண்ணங்கள்... அறிவு பூர்வமாகச் சிந்திக்கிற உணர்வுகள்... பரந்துபட்ட மனப்பான்மை... இரக்க சுபாவம்... தூர நோக்குப்பார்வை... சகிப்புத்தன்மை... எந்த நிலையிலும் பணியாளர்களுக்குரிய பிரச்சினைகளை உள்வாங்கும் போது நிதானம் தவறாமல் கையாளும் திறன்... அன்பான கண்டிப்பு... எண்டு இப்பிடி பல சுபாவங்கள் அவருக்குள்ள இருந்தால் தான், தனக்குக் கீழை பணிபுரிகிறவன்ர ஆளுமைகள் அவரால் இனம் காணப்படமுடியும் எண்டும், அந்தப் பணியாளன் மற்றவர்களால அறியப்பட முடியும் எண்டும் நான் இதில சொல்ல வாறன்.

பல இடங்களில நான் கவனிச்சுப் பாத்திருக்கிறன் பாருங்கோ! ஒரு நிர்வாகிக்குக் கீழை வேலை செய்கிற பல பணியாளர்களுக்கு, அந்தந்தத் துறை சார்ந்த ஆளுமைகள் நிறைய இருந்தாலும், அந்த ஆளுமைகளைப் பயன்படுத்த அந்தந்த நிர்வாகிகள் விரும்புறேல்லை. காலம் பூராகவும் அல்லாட்டி அந்தப் பணியாளர் விலகும் வரைக்கும் அந்த மட்டத்திலேயே வைச்சுக்கொண்டு நல்லாவேலை வாங்கிக் கொண்டிருப்பினம் பாருங்கோ!

எண்டாலும், எவனொரு பணியாளன் தன்னையும் தன்ர ஆளுமையையும் நம்புகிறானோ அவன், வக்கிரமமான எண்ணங்கள் கொண்ட ஒரு நர்வாகிக்குக் கீழை கனகாலத்துக்கு நிண்டு வேலை செய்யமாட்டான் பாருங்கோ!

ஒரு நிர்வாகி எண்டவர் தனக்குக் கீழை வேலை செய்யிற பணியாளன்ர ஆளுமையைக் கணிப்பீடு போட்டுக் கொண்டு... அவனை அந்தப் பணியிலிருந்து மெல்ல மெல்ல ஒருபடி மேல்நிலைக்கு உயருறதுக்கு வழி வகுத்துக் குடுக்க வேணும். இல்லாட்டி, அவன் சுத்திச்சுத்தி... சுப்பற்ர கொல்லைக்குள்ள நிண்ட கதைமாதிரி... ஒரு துறைப் பணி நிலையோடை ஆளுமைகள்... அனுபவங்கள்... எல்லாம் முளை விடாமல் மூச்சடங்கிப்போயிடும் கண்டியளே!.

ஒரு துறையில... அது எந்தத் துறையாக இருந்தாலும் சரி, அதில ஆர்வமும், அக்கறையும், விசுவாசமும், நம்பிக்கையும், அர்ப்பணிப்பும் கொண்ட பணியாளர்களை இனம் கண்டு, அவையளை ஊக்கப்படுத்தி... உற்சாகப்படுத்தி வழி காட்டவேண்டியது அந்தத் துறையின் நிர்வாகப் பகுதியைச் சேர்ந்த விடயம் பாருங்கோ.

நிர்வாகம் தனக்குக் கீழை ஆளுமை உள்ளவர்களை இனம் காணத்தவறியிட்டு, தனக்குச் சார்பானவர்களுக்கு துதி பாடிக் கொண்டிருந்தால், அந்தத்துறை பிற்காலத்தில சரித்திரமாகப் போகாது! பெரிய தரித்திரமாகத்தான் போய் முடியும்.

ஒருவனுக்குரிய ஆளுமையின் விவேகத்தை; விருப்பத்தை சரியாக இனம் கண்டு கொள்ளப்படாமல், "உனக்கொண்டும், தெரியாது. அங்கால போ..." எண்டு சொல்லுறதும், 'இந்த வேலை உனக்குச் சரிவராது...' எண்டு மனக்கணக்குப் போட்டுக்கொண்டு, சம்பந்தப்பட்டவன்ர மானம், மரியாதையைப் பரிகாசம் பண்ணுறதும், அவனுக்குள்ளான ஆளுமைகளைச் சிதறடிக்கிற செயற்பாடுகள்தானேயொழிய, வேறையொண்டுமில்லைக் கண்டியளே!

**- சின்னக்குட்டி சின்னச்சாமி.**

# சிறுவர் நட்புணர்வு கல்வி

# புதிய கையேடு அறிமுகம்

(கொழும்பு)

சிறுவர்களுக்கு நட்புணர்வுடன் கல்வி புகட்டுவதற்கான புதிய கையேடு நேற்று முன்தினம் அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. சிறுவர் நேய ஆரம்ப கல்வியை நோக்கி முன்நகர்தல் எனும் தொனிப்பொருளில் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வின் போதே இந்தக் கையேடு வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன, யுனிசெப் அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி றீஸா ஹொசைனி மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் எச்.எம்.குணசேகர ஆகியோர் கலந்துகொண்டனர். சிங்கம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் தயாரிக்கப்பட்டுள்ள இக்கையேடு நாட்டிலுள்ள ஆரம்ப பாடசாலைகள் அனைத்திலும் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கு இன்றியமையாத தேவையாக உள்ள முக்கிய அம்சங்கள் தொடர்பான வழிகாட்டலை வழங்குகின்றது.



யுனிசெப் மற்றும் சர்வதேச அபிவிருத்திக்கான அவுஸ்ரேலிய முகவர் அமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து கல்வி அமைச்சு முக்கியமான இக்கையேட்டை அறிமுகப்படுத்தியுள்ளது. சர்வதேச அபிவிருத்திக்கான அவுஸ்ரேலிய முகவர் அமைப்பு மற்றும் ஏனைய அபிவிருத்திப் பங்காளர்களின் ஆதரவுடன் கல்வித் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு 2002 ஆம் ஆண்டு முதல் 76 அமெரிக்க டொலரை யுனிசெப் வழங்கியுள்ளது.

இதற்கு மேலதிகமாக எதிர்பாராத நெருக்கடியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு பாதுகாப்பு மற்றும் தரமான கல்வியை பெறுவதற்கு சுமார் 38 மில்லியன் அமெரிக்க டொலரையும் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எண்ணெய் இறக்குமதிக்கான இலங்கையின் தடை நீக்கம்

(கொழும்பு)

ஈரான்மீது அமெரிக்கா விதித்திருந்த பொருளாதாரத் தடையில் இருந்து, இலங்கை உள்ளிட்ட ஏழு நாடுகளுக்கு விதிவிலக்கு வழங்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டண் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில் இலங்கை, இந்தியா, மலேசியா, தென்னாபிரிக்கா, தென்கொரியா, துருக்கி மற்றும் தாய்வான் போன்ற நாடுகளுக்கு இந்த விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இந்த ஏழு நாடுகளும் ஈரானில் இருந்து எரிபொருளை இறக்குமதி செய்யலாம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈரான் மீதான தடையைத் தொடர்ந்து, இந்த நாடுகள் சடுதியாக தமது எண்ணெய் இறக்குமதியை குறைத்துக் கொண்டன.

இதனைத் தொடர்ந்தே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக ஹிலாரி கிளின்டண் தெரிவித்துள்ளார். இதன் மூலம் கடந்த மார்ச் மாதம் இந்தத் தடையில் இருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்ட ஜப்பான் உள்ளிட்ட 11 நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளடங்குகிறது.

இதேவேளை இந்த விதிவிலக்கு தொடர்பில் எரிபொருள் துறை அமைச்சர் சுசில் பிரேம்ஜெயந்த தெரிவிக்கையில்; ஈரானில் இருந்து இறக்குமதி செய்யாது விடப்பட்ட ஒரு தொகுதி எண்ணெயையும், இந்தத் தடை நீக்கத்தின் மூலம் கொள்வனவு செய்ய முடியும் எனத் தெரிவித்தார்.

# கஞ்சா விற்பனை செய்த இருவருக்கு அபராதம்


கஞ்சா விற்பனை செய்த 2 நபர்களுக்கு 18 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. குருநகர் - இராஜசிங்கம் வீதியைச் சேர்ந்த இருவரும் நேற்று முன்தினம் யாழ்.பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

மேற்படி வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா 15 கிராம் கஞ்சா விற்பனை செய்தவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டமும், 3 கிராம் கஞ்சா விறபனை செய்தவருக்கு 8 ஆயிரம் ரூபா தண்டமும் இருவரும் தண்டம் செலுத்தத் தவறின் 4 மாத சாதாரண சிறைத்தண்டனையை அனுபவிககுமாறு தண்டத்தில் மூன்றில் ஒரு பகுதியை பொலிஸாருக்கு வெகுமதியாக வழங்குமாறும் உத்தரவிட்டார். (எஸ், 137)

# மன்னார் - வட்டக்கண்டல் கிராமத்தில் இலவச மாலை நேர வகுப்புக்கள்

(மன்னார்)

அண்மையில் காலமான கலாநிதி சிவஸ்ரீ.சபாமனோகரக் குருக்களின் நற்பணி மன்றத்தினால் மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட வட்டக்கண்டல் மற்றும் அதனை அண்டிய கிராமங்களில் வாழ்ந்து வரும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான மாலை நேர ஊக்குவிப்பு வகுப்புக்கள் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாக ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளதாக சிவஸ்ரீ. சபா மனோகரக் குருக்கள் நற்பணி மன்றத்தின் தலைவர் பிரம்மஸ்ரீ மனோ பூ.ஐங்கரசர்மா தெரிவித்தார்.



மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பல கிராமங்களில் கல்வி கற்க ஆர்வம் உள்ள மாணவர்கள் காணப்படுகின்ற போதும், அவர்களது கல்வி நடவடிக்கையினை மேலும் அதிகரிக்க மாலை நேர வகுப்புகளுக்குச் செல்ல முடியாத நிலையில் மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த பகுதியில் உள்ள வட்டக்கண்டல் மற்றும் அதனை அண்டிய கிராமங்களில் உள்ள வறிய மாணவர்களை ஒன்றிணைத்து தரம் - 1 முதல் தரம் - 6 வரையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு தனித்தனியே முதற்கட்டமாக இலவச மாலை நேர வகுப்புக்களை சிவஸ்ரீ.சபா மனோகர குருக்கள் நற்பணி மன்றம் ஆரம்பித்துள்ளது.

தொடர்ந்தும் குறித்த மாலை நேர வகுப்புக்கள் விஸ்தரிக்கப்பட்டு ஏனைய வகுப்புக்களில் கல்வி கற்கும் வறிய மாணவர்களும் பலன் பெறக்கூடிய வகையில் குறித்த வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சிவஸ்ரீ.சபா மனோகரக் குருக்கள் நற்பணிமன்றத்தின் தலைவர் பிரம்மஸ்ரீ மனோ பூ.ஐங்கர சர்மா மேலும் தெரிவித்தார்.

# மானிய விலையில் வழங்கப்படும் மின் உற்பத்திக்கான எரிபொருள்

(கொழும்பு)

எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டால், அதன் அனுகூலங்களை மக்களுக்கு வழங்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக பெற்றோலிய வளத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

விலை குறைவடைவதன் அனுகூலம் மக்களுக்கு வழங்கப்படமாட்டாது என மக்கள் விடுதலை முன்னணியின் பிரதம செயலாளர் ரில்வின் சில்வாவினால் கூறப்பட்ட கருத்திற்கு பதிலளிக்கும் நோக்கில் அமைச்சு இந்தக் கருத்தினை முன்வைத்துள்ளது.

எரிபொருள் விலையில் வீழ்ச்சி ஏற்படும் போது கிடைக்கும் அனுகூலங்களை நாட்டு மக்களுக்கு வழங்காது இருப்பதற்கான எந்தவொரு முயற்சியையும் அரசாங்கம் முன்னெடுக்கவில்லை என பெற்றோலிய வளத்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

24 மணித்தியாலங்களும் மின்சாரத்தை விநியோகிப்பதற்காக, உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தில் 80 வீதமானவை எரிபொருளினூடாகவே விநியோகிக்கப்படுவதாக பெற்றோலிய வளத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சக்தி துறைக்கு மானிய விலையில் எரிபொருளை வழங்குவதற்காக கடந்த நான்கு மாத காலத்திற்குள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 17 பில்லியனுக்கும் அதிகமான நட்டத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 100 பாடசாலைகளுக்கு ஒரு ஆசிரியர் வடமாகாணத்திலேயே அதிகம்

(கொழும்பு)

இலங்கையில், 100 பாடசாலைகளுக்கு ஒரு ஆசிரியர் மாத்திரம் மாணவர்களுக்குக் கற்பிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக கல்வி அமைச்சு ஆய்வு மூலம் தகவல் வெளியிட்டுள்ளது. இதன்படி, நாடு முழுவதும் 72 தமிழ் மொழிப் பாடசாலைகளும், 28 சிங்கள மொழிப் பாடசாலைகளும் இவ்வாறு இயங்குவதாக ஆய்வுத்தகவல்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறான பாடசாலைகள் வட மாகாணத்திலேயே அதிக எண்ணிக்கையில் காணப்படுவதாகவும், இதன்படி 58 பாடசாலைகள் இவ்வாறு உள்ளதாகவும், சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குறிப்பாக இப்பாடசாலைகள் அனைத்தும் தமிழ் மொழிப் பாடசாலைகளாக காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

இதன்படி, குறிப்பிட்ட பாடசாலைகளாக வவுனியா மாவட்டத்தில் 44 தமிழ் மொழிப் பாடசாலைகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 07 தமிழ் மொழிப் பாடசாலைகளும், மன்னார் மாவட்டத்தில் 06 தமிழ் மொழிப் பாடசாலைகளும், யாழ். மாவட்டத்தில் 01 தமிழ் மொழிப் பாடசாலையும் செயற்படுவதாக தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

# இன்று நல்லூரில் கற்பூரத் திருவிழா

உலகெல்லாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம் பொருளாகிய முருகப் பெருமான் தம்மை வழிபடும் அடியவர்களின் துன்ப துயரங்களைப் போக்கும் வகையில் எழுந்தருளி வீற்றிருக்கும் புனித புண்ணிய ஸ்தலம் நல்லூராகும்.

இந்த நல்லூரில் இன்று கற்பூரத் திருவிழா. தொல்லை வினை தீர்க்கும் நல்லைக் கந்தனின் கும்பாபிஷேக தினமான இன்றைய மணவாளக் கோல நன்னாளில் எம்பெருமானுக்கு 1008 சங்குகளால் ஆனந்த அபிஷேகம் நடைபெறுகிறது.

அழகன் முருகனின் ஆனந்தமயமான அற்புத எழிற்காட்சி இன்று நல்லூரில் காணலாம். வினை தீர்க்கும் வேலனான ஆறுமுருகப் பெருமானுக்கு இன்று பக்தி மயமான வேதபாராயணத்துடன் அந்தண சிவாச்சாரியர்கள் அழகாகச் செய்யும் அபிஷேக ஆராதனை விசேட பூசைகள் பக்தியை உண்டுபண்ணும் அதே நேரத்தில், ஆனந்த உணர்வு மேம்பாட்டினால் கூடிய மகிழ்ச்சியையும் அளிக்கும்.

இன்று பிற்பகல் ஷண்முகப் பெருமானுக்குத் திருக்கல்யாணம். இச்சா சக்தியான வள்ளியம்மையை இடப்பாகத்திலும் அமர்த்தி ஆறுமுகனுக்கு நடைபெறும் இத்திருக்கல்யாண வைபவம் காணக் கண் கோடி வேண்டும்.

இதில் இன்னொரு விஷேசம் என்னவென்றால் இன்றைய மணவாளக் கோல நன்னாளில் முருகப் பெருமானுக்கு நிகழ்கின்ற கல்யாணக் காட்சியைக் கண்ணுற்றால் திருமண வயதை எட்டியும் இதுவரை திருமணம் நடைபெறாத இளங் கன்னியரும், காளையரும் திருமணம் நடந்து சிறப்புப் பெறுவார்கள் என்பது ஐதீகம்.

இன்றைய கற்பூரத்திருவிழாவைக் கண்டு தரிசித்து சகல சௌபாக்கியங்களும் நிறைந்த திவ்ய பேரருட் கருணையினால் கிடைக்கும் நல்வாழ்க்கையை எய்தி இன்புற்றிருக்க நம்மை நாமே தயார் படுத்திக் கொள்வோமாக

சிவநெறி கலாநிதி
- இராசையா ஸ்ரீதரன் -

(06) ஒழுங்கற்றிருக்கும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி எழுதுக.

1. பணத்தை / கண்மூடித்தனமாக / செய்யாதே / செலவு / வீணே

..............................................................................

2. அவதானிக்கும் / அவன் / ஒரே / நூறு / நேரத்தில் / விடயங்களை / உடையவன் / ஆற்றல்

..............................................................................

(07) கீழ்வரும் மரபுத் தொடர்களின் உட்கருத்தை எழுதுக.

1. தலைக்கனம் : ..............................................

2. காது கொடுத்தல் : ..............................................

(08) பின்வரும் தனிவாக்கியங்களை தொடர் வாக்கியமாக மாற்றி எழுதுக.

1. மயூரன் நன்றாக பாடல் பாடுவான்
2. கண்ணன் நன்றாகப் பாடல் பாடுவான்

..............................................................................

(09) வெற்றிடத்திற்குப் பொருத்தமான எழுத்துப் பிழையற்ற சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

1. மே மாதம் 1 ஆம் திகதி .................................................. தினம்
(தொளிலாழிகள் / தொலிளாழிகள் / தொழிலாளிகள்)

2. மக்கள் கள்வனை .................................................. காட்டினர்
(அடயாளம் / அடையாளம் / அடையாலம்)

(10) ஒவ்வொரு தமிழ்ச் சொற்களுக்குமான பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

1. பென்சில் ..............................
2. பலூன் ..............................
3. அலுவலகம் ..............................

(11) பின்வரும் வசனங்களுக்குரிய கருத்தினைத் தமிழில் எழுதுக.

1. can I help you? ..............................................
2. please give me a book ..............................................
3. I want to rest ..............................................
4. what are you doing? ..............................................

(12) பின்வரும் ஒவ்வொரு சிங்களச் சொல்லினதும் தமிழ்க் கருத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

1. .................................................. ஒபட ஒன மொனவத?
2. .................................................. மட்ட தே ஓண?
3. ..................................................மகே பொத்த கோயித?

(13) பின்வரும் தமிழ்ச் சொற்களை சிங்கிளத்தில் எழுதுக.

1. சொல்லுங்கள் : ..............................................
2. உங்கள் பெயர் என்ன? : ..............................................
3. சாப்பீட்டீங்களா? : ..............................................

(14) பின்வரும் வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

01. பின்வரும் விதைகளில் எவ்விதை சிறியது?
1. பலாவிதை 2. மிளகு 3. ஆலம்விதை

02. இலங்கையின் தேசிய மரம்
1. நாகமரம் 2. நாவல்மரம் 3. வேப்பமரம்







T.S. கஜன்

## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

# கல்வி முரசு

வெளியீடு 81



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

(01) பின்வரும் விவரணத்தை வாசித்துக் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

> நான் ஒரு மின்னணுச் சாதனம், மனிதனது தேவைகளை நிறைவு செய்ய உருவாக்கப்பட்டவன். நான் நானாக இயங்காது, பிறர் கட்டளைகளுக்கேற்பவே செயற்படுவேன். நான் எவரையும் ஏமாற்றுவதில்லை. ஏளனமாகச் சிரிப்பதில்லை. எனக்குப் பேராசை கிடையாது. எனது பணிகளை நிறைவாகச் செய்வேன். நேரத்தை வீண் விரயமாக்கமாட்டேன். நான் இன்று கல்வி, வணிகம், வங்கி போன்ற பல துறைகளில் முக்கிய பங்காற்றுகின்றேன். நான் உங்களுக்கு சிறந்த ஆசிரியன். பிறருடைய வேகத்திற்கு தகுந்தபடி மெதுவாகவும், துரிதமாகவும் கற்றுக் கொள்ள வழிகாட்டுவேன்.

1. பணிகளை நிறைவாகச் செய்வேன் என்ற வாக்கியத்தின் எழுவாய் எது?
..............................................................................
2. இங்கு ‘விரயமாக்குதல்’ என்ற சொல்லின் பொருள் யாது?
..............................................................................
3. ‘நிறைவு’ என்பதன் எதிர்க் கருத்துச் சொல்லை எழுதுக.
..............................................................................
4. ‘கட்டளை’ என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக.
..............................................................................
5. ‘பங்காற்றுகின்றேன்’ ஏன்பதை இறந்த காலத்தில் எழுதுக.
..............................................................................
6. ‘ஆசிரியன்’ என்பதற்குரிய பெண்பாற் சொல்லை எழுதுக.
..............................................................................
7. தன்மை ஒருமைப் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக.
..............................................................................
8. ‘ஏமாற்றுவதில்லை’ என்பதைப் பிரித்து எழுதுக.
..............................................................................
9. ‘சிரிப்பதில்லை’ என்பதன் உடன்பாட்டு வடிவம் யாது?
..............................................................................
10. மின்னுச்சாதனம் பங்காற்றும் முக்கிய துறையினை எழுதுக.
..............................................................................

(02) **இப்பாடலைப் படித்து இது தொடர்பாகக் கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

காலை மாலை எப்பொழுதும்
கடவுளின் நினைவே கொண்டவராம்
வேலை இன்றிச் சிறுபொழுதும்
வீணாய்ப் போக்க மாட்டாராம்

சத்தியம் பேசுதல் அவர் கொள்கை
தருமம் காத்தல் அவர் கொள்கை
இத்தல மக்கள் யாவர்க்கும்
இன்ப சுதந்திரம் அவர் கொள்கை

கண்ணிற் சிறந்த விடுதலையைக்
கருதி வாழ்ந்தார் நம் தாத்தா
மண்ணில் யாவர் வாழ்விற்கும்
வழிகாட்டுவார் நம் தாத்தா

(i) இப்பாடலில் நம் தாத்தா யார்? (..................................)

(ii) 'சத்தியம்' என்ற சொல்லின் கருத்து யாது? (..................................)

(iii) 'மண்ணில்' என்பதை பன்மையில் எழுதுக. (..................................)

(iv) 'மக்கள்' என்பதற்கு ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக. (..................................)

(V) 'தாத்தா' என்பதன் எதிர்ப்பாற்சொல் யாது? (..................................)

(vi) உயர்திணை ஒருமை இறந்தகால வினைச்சொல் எழுதுக. (..................................)

(vii) 'தர்மம்' என்பதன் எதிர்ச்சொல் யாது? (..................................)

(viii) 'வழிகாட்டுவார்' என்ற சொல் எக்காலத்துக்குரியது? (..................................)

(ix) இப்பாடலிலுள்ள இணை மொழியினை எழுதுக. (..................................)

(X) மேலுள்ள பாடலில் குறிப்பிட்டுள்ள நற்பழக்க வழக்கம் ஒன்றினை எழுதுக.
(..................................)

(03) **சுருக்கமான விடை தருக.**

1. 5 மீற்றர் 0.25 சென்ரி மீற்றரை மீற்றரில் தருக. ..................................................
2. 0.978 ஐ விஞ்ஞான முறைக் குறியீட்டில் எழுதுக. ..................................................
3. 3, 9, 27, ...................... அடுத்து வரும் எண் யாது?
4. 1 1/5, 1/5, 2 1/5, ......................எனும் தொடரை இறங்குவரிசையில் எழுதுக.
..................................................
5. 0.1 + 0.25 + 0.0001 தரப்பட்டவற்றைக் கூட்டி எழுதுக. ..................................................
6. ..............,9500,.............. முன்னுள்ள பின்னுள்ள எண்களை எழுதுக.
7. இரண்டு கிலோ சீனியின் விலை 98.00 அப்பிள் ஒன்றின் விலை 15.00 எனின், 5500 கிராம் சீனியினதும் 12 அப்பிள்களினதும் மொத்தப் பெறுமதி யாது? ..................................................
8. 37 ஐ உரோம எண்ணில் எழுதுக. ..................................................
9. ஒரு தேசிய பாடசாலையின் வகுப்பு ஒன்றிலுள்ள மாணவர்களின் சராசரி எண்ணிக்கை 125 எனின் அப்பாடசாலையின் தரம் - 1 முதல் தரம் -13 வரையுள்ள வகுப்புக்களில் உள்ள மாணவர்களின் மொத்த மாணவர் தொகை யாது? ..................................................
10. 8043 ஐ எண்சட்டத்தில் காட்டுக. ..................................................

(04) பாலன், குமார், விமலன் ஆகிய நண்பர்கள் மூவரும் விறகு வெட்ட காட்டுக்குச் சென்றனர். அவர்கள் விறகு வெட்டும் போது உறுமல் சத்தம் கேட்டது. அதன்பின் நடந்த சம்பவத்தை பயனிலைகளுடன் ஆறு வசனங்கள் எழுதுக. ஒரு வசனம் நான்கு சொற்களைக் கொண்டிருக்க வேண்டும்

..................................................
..................................................
..................................................
..................................................
..................................................
..................................................

(05) **பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அது தொடர்பாக கேட்கப்பட்டுள்ள வினாக்களிற்கு விடை தருக.**

பூசாவின் பால் போன்ற வெண்ணிற மேனியிலே கரிய புள்ளிகள் உள்ளன. அது 'மொழு மொழு' உருண்டு, திரண்டு கொழுத்திருந்தது. கரிய மணி போன்ற கண்கள் சிவந்த சின்னஞ்சிறிய வாய் நிமிர்ந்து நின்று அசையும் சின்னக் காதுகள், பட்டுப் போன்ற மிக மிருதுவான உடல் ஆகியவை என்னைக் கவர்ந்தன. நான் "பூசா" என்று கூப்பிட்டால் அது உடனே ஓடிவரும். சிலசமயம் என் மடிமேலே சுருண்டு படுத்துவிடும். நாயைக் கண்டவுடன் அது பாய்ந்தோடி வந்து என்னிடம் தஞ்சம் புகும். உடனே அதனைத் தூக்கி அணைத்துக் கொள்ளல் வேண்டும். அன்றேல் அது என்னை அசையவிடாது. இரவில் எனது அருகில் அது படுத்து உறங்கும். அன்போடு பூசியை அணைத்துக் கொண்டு துயில்வேன்.

1. பந்தியில் "பூசா" என்று குறிப்பிடப்படுவது எதுவாக இருக்கும்?
..................................................
2. தஞ்சம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக.
..................................................
3. சின்னஞ்சிறிய என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லினை எழுதுக.
..................................................
4. பந்தியில் இடம்பெற்றுள்ள அடுக்கு இடுக்குத் தொடர் ஒன்றைத் தருக.
..................................................
5. பந்தியில் வந்துள்ள இரட்டைக்கிளவி ஒன்றைத் தருக.
..................................................
6. பந்தியில் இடம்பெற்றுள்ள உவமைத் தொடர் ஒன்றை எழுதுக.
..................................................
7. பந்தியில் இடம்பெற்றுள்ள அஃறிணை ஒருமை இறந்தகால வினைச்சொல் ஒன்றை எழுதுக.
..................................................
8. பின்வரும் வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள அடைமொழிச் சொல்லின் கீழ் கீறிடுக.
"நிமிர்ந்து நின்று அசையும் சின்னக் காதுகள்"
..................................................
9. மிருதுவான என்பதன் கருத்து யாது?
..................................................
10. 'அன்போடு பூசாவை அணைத்துக் கொண்டு துயில்வேன்' இவ்வாக்கியத்தில் வரும் பயனிலைச் சொல் யாது?
..................................................


விசேட வினாத்தாள் I V தரம் 05 - 2012 V கல்விமுரசு

# நித்தியானந்தா கைது உத்தரவு; மூடப்பட்டது மதுரை ஆதீனமடம்



(கொழும்பு)

நித்தியானந்தா பெரும் பிரச்சினையில் சிக்கியுள்ளதாலும், தலைமறைவாகி விட்டதாலும், அவரை கர்நாடக பொலிஸார் தீவிரமாகத் தேடி வருவதாலும், மதுரை ஆதீன மடத்தை மூடி விட்டனர், பூஜைகளையும் நிறுததி விட்டனர். இதனால் மதுரை மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

மதுரை ஆதீன மடத்திற்கு வந்த சோதனை இன்னும் தீரவிலலை. தொடர்ந்து ஆட்டிப் படைத்து அலைக்கழித்து வருகிறது.

இந்த மடத்தின் வாரிசாக நித்தியானந்தாவை அறிவித்த மதுரை ஆதீனம் தற்போது ஏகப்பட்ட பிரச்சினைகளை தொடர்ந்து சந்தித்து வருகிறார்.இந்த நிலையில்தான் கர்நாடகத்தில் கன்னட பததிரிக்கையாளர்களுடன் 'மோதி நித்தியானந்தா பெரும் சிக்கலில் மாட்டியுள்ளார்.

தலைமறைவாகி ஓடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.அவர் எங்கிருக்கிறார் என்பது பெரும் மர்மமாக உள்ளது. அவரது வாழ்க்கையில் இது இரண்டாவது தலைமறைவு ஓட்டமாகும்.

பிடதி ஆசிரத்தை மூடி சீல் வைத்ததுடன் நித்தியானந்தாவையும் கைது செய்யுமாறு பொலிஸாருக்கு கர்நாடக மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

இதனால் மதுரைக்கு நித்தியானந்தா தப்பி ஓடி வந்துள்ளதாகவும், ஆதீன மடத்துக்குள்ளேயே அவர் பதுங்கியிருப்பதாகவும் ஒரு தகவல் கூறுகிறது. இதனால் மதுரைப் பக்கம் கரநாடகப் பொலிஸாரின் பார்வை திரும்பியுள்ளதாகக் கூறப்படுகிறது.

மதுரை பொலிஸாரின் உதவியுடன் ஆதீன மடத்திற்குள் புகுந்து நித்தியானந்தாவை கர்நாடக பொலிஸார் கைது செய்யலாம் என்ற பலத்த எதிர்பார்ப்பும் உள்ளது.

இந்த நிலையில் திடீரென ஆதீன மடத்தை பூட்டி விட்டார்கள். இரு பக்க வாயிற்கதவுகளும் மூடப்பட்டுள்ளன. தற்காலிகமாக மடம் மூடிவைக்கப்பட்டுள்ளது. பூஜைகளும் தற்காலிகமாக இரத்துச் செய்யப்படுவதாக அறிவிப்பு ஒன்றை வைத்துள்ளனர்.

இதேவேளை கர்நாடக பொலிஸாரின் பிடியில் சிக்காமல் தப்பி ஓடி வரும் நித்தியானந்தா, பெண் வேடத்தில் அதாவது சுடிதார் அணிந்து தப்பி வருவதாக ஒரு தகவல் கூறுகிறது.

மேலும் அவர் சுடிதார் உடையில், மதுரை ஆதீன மடத்திற்கு நள்ளிரவில் வந்ததாகவும் ஒரு தகவல் உள்ளது. இதுகுறித்து மதுரை உளவுத்துறை பொலிஸாருக்கும் தகவல் கிடைத்துள்ளதாம்.

மேலிட உத்தரவுக்காக அவர்கள் காத்துள்ளனராம். மதுரை ஆதீன மடத்தில் நித்தியானந்தா இருப்பது உறுதியானால், மேலிடம் பசசைக்கொடி காட்டினால், அவரைக் கர்நாடக பொலிஸாரிடம் பிடித்து கொடுப்பதற்கு மதுரை பொலிஸார் ஆயத்தமாக இருப்பதாகத் தெரிகிறது.




இந்துமகா சமுத்திரத்தில் அமெரிக்கா கடற்படைத் தளம் அமைக்க முயற்சிப்பதை கண்டித்து ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தினர் கொல்கத்தாவில் பிரதமர் மன்மோகன் சிங், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா ஆகியோரின் உருவப் பொம்மைகளை எரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதனைக் காணலாம்.

# அத்துமீறி நுழைந்த விமானத்தால் பரபரப்பு

(சென்னை)

ஓமான் நாட்டு தலைநகர் மஸ்கட்டில் இருந்து பங்காள தேச தலைநகர் டாக்கா நோக்கி சென்ற தனியார் விமானம் அனுமதி இல்லாமல் நேற்று முன்தினம் பாதுகாக்கப்பட்ட ஜோத்பூர் விமானப் படை வான்வெளியில் நுழைந்தது. இதை அடுத்து அந்த விமானம் ஜெய்ப்பூரில் உள்ள சங்கனேர் விமான நிலையத்தில் கட்டாயமாக தரை இறக்கப்பட்டது.

இது குறித்து இந்திய உளவுத்துறை அமைப்புகளுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

வழி மாறி பயணம் செய்த அந்த விமானத்தின் விமானியிடம் விசாரணை நடைபெற்று வருகிறது. தொழில்நுட்ப கோளாறு காரணமாகவே நிர்ணயிக்கப்பட்ட வழியில் இருந்து விலகி விமானத்தை இயக்க நேரிட்டதாக விமானி தெரிவித்தார். அந்த விமானத்தின் தகவல் பதிவு கருவியை அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர்.

சிவில் விமான போக்குவர்த்து ஆணையத்தின் ஒப்புதலுக்கு பிறகே அந்த விமானம் வெளியேற அனுமதிக்கப்படும் என்றும் அதிகாரிகள் கூறினர்.

# பிரணாப் ஜனாதிபதியானால் அடுத்த நிதியமைச்சர் யார்?

(புதுடில்லி)

நாட்டின் புதிய ஜனாதிபதியாக தற்போதைய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தேர்ந்தெடுக் கப்பட்டால் அடுத்த நிதியமைச்சர் யாராக இருப்பார் என்ற யூக விவாதங்கள் டில்லியில் பலமாக அடிபட்டு வருகிறது.

நாடாளுமன்றத்தில் 2013 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்படும் நிதி நிலை அறிக்கையானது 2014-ஆம் ஆண்டு மக்களவைத் தேர்த்லை முன்னிறுத்தியே அமைய வேண்டியிருக்கிறது. இதனால் புதிய நிதி அமைச்சரின் பொறுப்பு சவாலானதாகவும் இருக்கும்.

இந்தப் பட்டியலில் தற்போதைய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சரும் முன்னாள் உலக வங்கி அதிகாரியுமான ஜெய்ராம் ரமேஷ் பெயரும் அடிபடுகிறது. அவர் சோனியாவுக்கு விசுவாசி என்ற காரணமும் கூடுதலாகச் சேர்க்கப்படுகிறது.

மக்களவைத் தேர்தலுக்கான பட்ஜெட் தயாரிகக வேண்டும் என்பதால் பிரதமர் மன்மோகன் சிங்கே நிதித் துறையையும் தம்வசம் வைத்துக் கொண்டு சமாளிப்பார் என்றும் ஒரு பேச்சு உண்டு.

அதேநேரத்தில் நிதி அமைச்சராக அனுபவம் பெற்றுள்ள தற்போதைய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்தின் பெயரும் அடிபடுகிறது.



அதேநேரததில் 1990களில் நாட்டின் புதிய பொருளாதாரக் கொள்கைக்கு ஒரு அதிகாரியாக இருந்த மன்மோகன்சிங் எப்படி நிதி அமைச்சராக காரணமாக இருந்தாரோ அதேபோல் நாட்டின் தற்போதைய சிக்கலான பொருளாதார நிலைமையில் திட்டக் குழு துணைத் தலைவரான மான்டேக் சிங் அலுவாலியாவையோ அல்லது பிரதமரின் பொர்ருளாதார ஆலோசகரான ரங்கராஜனையோ நிதி அமைச்சராக்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றும் கூறப்படுகிறது.

## அதி கூடிய வயதானவராக தமிழகத்தின் சௌமி அக்கா



இந்தியாவில் அதிகூடிய வயதானவராக தமிழகத்தின் கோயம்புத்தூர் பகுதியில் வசித்து வரும் 120 வயதான சௌமி அக்கா என்ற மூதாட்டி தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவின் பெண்களின் ஆயுட்கால வயதெல்லை 60 தொடக்கம் 65 வரை எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

10 குழந்தைகளுக்குத் தாயான இவர், அதிகளவிலான முதியோர்கள் போசணைக் குறைபாடு மற்றும் சுதந்திரமான வாழ்க்கை முறைமை இல்லாத காரணத்தினாலேயே உயிரிழப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

சௌமி அக்கா என்ற இந்த மூதாட்டி தனது தனிப்பட்ட தேவைகளைத் தானே நிறைவேற்றிக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளார். இவருடைய இளைய புதல்விக்கு 95 வயது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதித் தேர்தல் ஏற்பாடு பூர்த்தியென அறிவிப்பு



(புதுடில்லி)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான முக்கிய ஏற்பாடுகள் அனைத்தும் முடிந்து விட்டன. தேர்தல் திகதி விரைவில் அறிவக்கப்படும் என தலைமை தேரதல் ஆணையராக பொறுப்பேற்ற வி.எஸ்.சம்பத் தெரிவித்தார்.

தலைமை தேர்தல் ஆணையர் குரேஷி ஓய்வு பெற்றதையடுத்து, புதிய தலைமை தேர்தல ஆணையராக வி.எஸ்.சம்பத் நேற்றுமுன்தினம் பொறுப்பேற்றார். அதன் பின் நிருபர்களுக்கு அளித்த முதல் பேட்டியில்;

ஜனாதிபதி தேர்தலுக்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் நடைபெறுகிறது. அடிப்படை ஏற்பாடுகள் அனைத்தும் முடிந்து விட்டன. பணியில் ஈடுபடும் தேர்தல் அதிகாரிகளுக்கு கடந்த மாதம் தேவையான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

எனவே ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதிக்கான தேர்தல் திகதி விரைவில் அறிவிக்கப்படும். குஜராத், இமாச்சலப் பிரதேசம், நாகாலாந்து, திரிபுரா மற்றும் மேகாலயா ஆகிய மாநிலங்களில் நடைபெறவுள்ள சட்டசபைத் தேர்தல்களுக்கான் ஏற்பாடுகளைச் செய்வதிலும் தேர்தல் ஆணையம் ஏற்கனவே இறங்கிவிட்டது எனத் தெரிவித்தார்.

# சியாச்சினிலிருந்து படை விலக்கல்; இந்தியா - பாகிஸ்தான் பேச்சுவார்த்தை




(சென்னை)

இந்தியா - பாகிஸ்தான் இடையில் சர்ச்சையில் சிக்கியிருககும் காஷ்மீரில் உள்ள சியாச்சன் பனிமுகடு தொடர்பாக இருநாட்டு உயர் அதிகாரிகளும் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறார்கள்.

கடந்த ஏப்ரல் மாதம் இப்பகுதியில் ஏற்பட்ட பனிப்புயலில் 140 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் பாகிஸ்தான் இராணுவச் சிப்பாய்கள் ஆவார். இந்தச் சம்பவத்துக்குப்பிறகு பாகிஸ்தானிய இராணுவத் தலைமைத் தளபதி ஜெனரல் அஷ்பக் கயானி, அந்தப் பிராந்தியத்திலிருந்து இராணுவத்தை விலக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறார்.


ஆனால் இந்திய ஆளுகைக்குட்பட்ட காஷ்மீரின் பாதுகாப்புக்கு இந்த சியாச்சின் பனிமுகடு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தது என்று இந்தியா கருதுகிறது.

உலகின் மிக உயரமான இராணுவ மோதல் களமாக வர்ணிக்கப்படும் சியாச்சன் பனிமுகடு, கடல் மட்டத்திலிருந்து ஆறாயிரத்து எழுநூறு மீற்றர் உயரத்தில் இருக்கிறது. இங்கே இந்திய மற்றும் பாகிஸ்தானிய இராணுவத்தினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.




நன்றி: தினமலர்

# கடல் எல்லை குறித்துப் பதட்டம்; ஏவுகணைதிறனை அதிகரிக்கும் சீனா




(பீஜிங்)

சீனாவுக்கும் அதன் அண்டை நாடுகளுக்கும் இடையில் கடல் எல்லை தொடர்பான பதட்டங்கள் அதிகரித்து வருகின்றன. சீன ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில், ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் மீது அமெரிக்கா தனது இராணுவ ரீதியிலான கவனத்தைச் செலுத்தி வருகிறது.

இந்நிலையில், சீனா தனது ஏவுகணைத் திறனை மேம்படுத்தி வருகிறது. இது தொடர்பாக, சீன இராணுவத்தின் தளபதி டான் வீஹாங் கூறுகையில் "நவீன போர்க்கருவிகளில் ஏவுகணைகள் முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன. எனவே நாம் எந்த நேரமும் தயாராக இருக்க வேண்டும். தாக்குதல்களுக்குப் பதிலடி கொடுக்கும் வகையிலும், இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கும் வகையிலும் நாம் திறம்படைத்தவர்களாக இருக்க வேண்டும் என்றார்.

முன்னதாக, சீனா தனது இராணுவம் ஏவுகணைச் 'சோதனைகளை நடத்தப் போவதாக கடந்த 1995ஆம் ஆண்டு அறிவித்தது. இதன் மூலம் அதன் ஏவுகணைப் பிரிவு, அனைவரின் கவனத்தையும் கவர்ந்தது. அப்போது ஒரு வாரத்துக்கு 6 ஏவுகணைகள் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டன.

# அல்கொய்தா தலைவர் உயிருடன் உள்ளார்



அமெரிக்கா கடந்த வாரம் நடத்திய தாக்குதலில் அல்கொய்தா பயங்கரவாத இயக்கத்தின் இரண்டாவது நிலைத் தலைவரான அபு யாஹ்யா அல் லிபி என்பவர் கொல்லப்பட்டதாகத் தகவல் வெளியானது.

ஆனால் அவர் இன்னும் உயிருடன் தான் உள்ளார் என எக்ஸ் பிரஸ் டிரிபியூன் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

மேலும் அந்தப் பத்திரிகை, அன்சார் மற்றும் அல்பிதா இணையத்தளங்களில் வெளியிடப்பட்டுள்ள செய்திகளைப் பார்க்கும் போது அவர் இன்னும் உயிருடன் தான் உள்ளதாக தெரிகிறது எனவும் தகவல் வெளியிட்டுள்ளது.

# கணிப்பீடுகளைப் பொய்யாக்கிய சீனப்பெருஞ்சுவரின் நீளம்


சீனப் பெருஞ்சுவரின் நீளம் முன்னைய கணிப்பீடுகளை விடவும் நீளமானது என அண்மைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

சீனப் பெருஞ்சுவரின் நீளம் முன்னர் கருதப்பட்டதனை விடவும் அதிக நீளமானது என தற்போது உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சீனப் பெருஞ்சுவரின் நீளம் 21,186.18 கிலோ மீற்றர் என அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

2009 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட கணிப்பீடுகளின் போது சீனப் பெருஞ்சுவரின் மொத்த நீளம் 8,850 கிலோ மீற்றர் எனக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

சீனாவின் வட எல்லையைப் பாதுகாக்கும் நோக்கில் சீனப் பெருஞ்சுவர் அமைக்கப்பட்டது. மனிதனினால் உலகில் உருவாக்கப்பட்ட மிகப் பெரிய கட்டட நிர்மாணம் இதுவாகும்.



. பண்டைய வரலாற்று தொல்பொருள் தகவல்களின் அடிப்படையிலேயே கடந்த காலங்களில் சீனப்பெருஞ்சுவரின் நீளம் பற்றிய தகவல்கள் வெளியிடப்பட்டன.

கிறிஸ்துவுக்கு முன் 500 ஆம் ஆண்டளவில் சீனப்பெருஞ்சுவர் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

பண்டைய சீனப் பெருஞ்சுவரின் பகுதிகளில் 8.2 வீதமே தற்போது எஞ்சியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

# மகளை ஹோட்டலில் விட்டு வீடு சென்ற பிரிட்டன் பிரதமர்

பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் தனது 8 வயது மகளை ஹோடடலிலேயே மறந்து விட்டுச் சென்றது பரபரப்பை ஏற்படுத்தியது.

கமரூன் தனது குடும்பத்தினர், நண்பர்களுடன் ஹோட்டல் ஒன்றில் விருந்து சாப்பிட்ட பின்னர் தனது 8 வயது மகளை அந்த ஹோட்டலிலேயே தவறுதலாக விட்டுச் சென்றார்.

வீட்டுக்குச் சென்ற பின்னர் தான் அவருக்கு மகளை ஹோட்டலிலேயே விட்டு விட்டு வந்தது தெரியவந்தது.

இதையடுத்து மீண்டும் ஹோட்டலுக்குச் சென்று மகள் நான்சியைக் கண்டுபிடித்துக் கூட்டிவந்துள்ளார்.

நான்சி தங்களுடன் இல்லாததை அறிந்த பிரதமரும், அவரது மனைவி சமந்தாவும் மிகுந்த அதிர்ச்சி அடைந்தனர்.

பின்னர் ஹோட்டலுக்கு ஃபோன் செய்து விசாரித்த பின்னரே மகள் பத்திரமாக இருப்பது அவர்களுக்குத் தெரியவந்தது. பின்னர் ஹோட்டலுக்குச் சென்று அவரைத் திரும்ப அழைத்து வந்துள்ளனர்.

# சிரிய மனிதப் பேரவலம்; அமெரிக்கா கவலை

சிரியாவின் அல் அப்லா பகுதியில் அந்நாட்டு அரசாங்கப் படையினர் மற்றுமொரு பாரிய மனிதப் பேரவலத்தை ஏற்படுத்த முனைப்பு காட்டி வருவதாக அமெரிக்கா குற்றம் சுமத்தியுள்ளது.

குறித்த பிரதேசத்தில் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட ஐக்கிய நாடுகளின் கண்காணிப்பாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

அல் அப்லாவில் பாரியளவில் வன்முறைகள் இடம்பெற்று வருவதாக ஐக்கிய நாடுகளின் விசேட பிரதிநிதி கொபி அனான் அச்சம் வெளியிட்டுள்ளார்.

சிரிய அரசாங்கத்தின் மீது அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக அழுத்தங்களை பிரயோகித்து நிலைமைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்கப்பட வேண்டுமென



அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் விக்டோரியா நூலாண்ட் தெரிவித்துள்ளார்.

ஹோம்ஸ் மற்றும் ஹப்லா ஆகிய நகரங்களில் பாரியளவிலான பொதுமக்கள் சிக்கியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரச படையினர் கிளர்ச்சியாளர்களையும், கிளர்ச்சியாளர்கள் அரச படையினரையும்குற்றம் சுமத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பிரான்ஸ் நாடாளுமன்றத் தேர்தல்; இடதுசாரி கட்சிகள் வெற்றி

பிரான்ஸ் நாடாளுமன்றத்தின் கீழவைக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேர்தலின் முதல்சுற்று வாக்குப்பதிவில் புதிய ஜனாதிபதி பிரான்ஸுவா ஒலாந்த் தலைமையிலான இடது சாரிக்கட்சிகள் பெரும்பான்மை பலத்தை பெற்றுள்ளன.

இடதுசாரி மற்றும் கிறீன் கட்சிகளின் கூட்டு 46 வீத வாக்குகளையும், மத்திய வலதுசாரிக் கட்சி 34 வீத வாக்குகளையும் பெற்றுள்ளன என உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. புதிய ஜனாதிபதி ஒலாந்த் புதிய




சீர்திருத்தங்களை முன்வைத்துள்ள பின்னணியில், அவரது அரசாங்கத்துக்கு இந்தத் தேர்தல் முக்கியமானதாக கருதப்படுகிறது.

கீழவைக்கான முதல்சுற்று நிறைவடைந்துள்ள நிலையில், இரண்டாம் சுற்று வாக்குப்பதிவு இன்னும் ஒரு வாரத்தில் நடத்தப்படும். இந்தத் தேர்தலில் ஜனாதிபதி ஒலாந்தின் சோஷலிஸ்ட் கட்சி பெரும்பான்மை ஆதரவை தட்டிக்கொள்ளுமானால், அவரது தீர்க்கமான வரி விதிப்பு மற்றும் செலவினக் கொள்கைகளுக்கு முக்கிய அங்கீகாரம் கிடைத்துவிடும் என்று செய்தியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஒலாந்த் அரசாங்கம் திருத்தப்பட்ட புதிய வரவுசெலவுத் திட்டமொன்றை அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளது.

# சதாமின் பாதுகாவலருக்கு மரண தண்டனை விதிப்பு



ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹூசெயினின் பிரதான மெய்ப பாதுகாவலருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

சதாம் ஹூசையினின் பிரதான மெய்ப்பாதுகாவலராகவும் செயலாளராகவும் கடமையாற்றிய Abid Hamid Mahmud al-Tikriti என்ற நபருக்கே மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

1980 களில் ஈராக்கின் ஷியா முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட அடக்குமுறை, இனசுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்காக இவரிற்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2003 ஆம் ஆண்டு Abid Hamid Mahmud al-Tikriti கைது செய்யப்பட்ட காலத்தில் அமெரிக்காவின் தேடப்பட்டு வரும் மிக முக்கியமான நபர்களின் பட்டியலில் நான்காம் இடத்தை வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சதாம் ஹூசையன் தூக்கிலிடப்பட்டார்.

இதேவேளை, ஈராக்கில் அதிகளவில் மரண தண்டனைகள் நிறைவேற்றப்பட்டு வருவதாக மனித உரிமை கண்காணிப்பகம் குற்றம் சுமத்தியுள்ளது. 2012 ஆம் ஆண்டின் முதல் 40 நாட்களில் மட்டும் 65 கைதிகளுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

# இஸ்ரேல்-வத்திக்கான் இடையே பொருளாதார ஒப்பந்தம் கைச்சாத்து

(ஜெருசலேம்)

இஸ்ரேல்-வத்திக்கான் நாடுகளிடையே விரைவில் பொருளாதார ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது. உலகெங்கும் வாழும் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களின் மத குருவான போப்பாண்டவரின் ஆளுகைக்கு உட்பட்ட நாடாக வத்திக்கான் விளங்குகிறது.

யூதர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இஸ்ரேலுக்கும் வத்திக்கானுக்கும் இடையில் விரைவில் பொருளாதார ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது. இதன் மூலம், பலஸ்தீனர்கள் தங்களின் எதிர்காலத் தலைநகராகக் கருதும், சர்ச்சைக்குரிய கிழக்கு ஜெருசலேம் நகர், இஸ்ரேலின் நிலப்பரப்புதான் என்று வத்திக்கான் மறைமுகமாக அங்கீகரிக்கிறது.

மேலும், பலஸ்தீனர்களின் மேற்குக் கரையில் உள்ள சில பகுதிகளில் இஸ்ரேலியச் சட்டத்தை அமுல்படுத்தவும் வத்திக்கான் மறைமுகமாக அங்கீகரிக்கிறது. இது பலஸ்தீனர்களைக் கவலையடையச் செய்துள்ளது. எனினும், இந்தப் பொருளாதார ஒப்பந்தத்தால் பலஸ்தீனர்களின் உரிமைகள் பாதிக்கப்படாது என்று இஸ்ரேல் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# யாழில் தமிழ்ச்சங்கம் உதயம் மொழியை வளர்ப்பதே இலக்கு

(யாழ்ப்பாணம்)

மொழி பண்பாடு தொடர்பான பணிகளை முன்னெடுக்கும் நோக்குடன் யாழ்ப்பாணத்தில் தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டதுடன் அதன் தொடக்க நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் இடம்பெற்றது.

தொடக்க நிகழ்வில் சங்கப் பணிகளை முன்னெடுப்பதற்கெனத் தற்காலிக நிர்வாகக் குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

யாழ். தமிழ்ச் சங்கத் தலைவராக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தெரிவு செய்யப்பட்டுள்ள அதேவேளை, துணைத் தலைவர்களாக சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

செயலாளர்களாக தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயர் அதிவண. சு.ஜெபநேசன், பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, கலாநிதி க.குணராசா இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள முன்னாள் உதவிப் பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் ஆகியோரும் சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேலும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

உப செயலாளர்களாக, கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன், யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் நாக. தமிழிந்திரன் ஆகியோரும் பொருளாளராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடப் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பியும் செயற்படவுள்ளனர். இருபத்தைந்து பேரைக் கொண்ட ஆட்சிக் குழுவும் அமைககப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புதிதாக அமைக்கப்பட்ட தமிழ்ச் சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபன், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், கிளிநொச்சி செயலக கலசார உத்தியோகத்தர் கு.றஜீபன், புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் வண. ம.ஜெறோ செல்வநாயகம், திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் ந.விஜயசுந்தரம் உள்ளிட்ட பலர் கருத்துக்களை முன்வைத்தனர்.

சங்கத்தில் புதிதாக உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் ஆயுட்சந்தாவாக மூவாயிரம் ரூபாவையோ ஆண்டுச் சந்தாவாக இருநூற்றைம்பது ரூபாவையோ செலுத்துவதன் மூலம் உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் சங்கத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தெரிவித்தார்.

# ஆஸி. செல்ல முயன்ற 11 பேர் புத்தளத்தில் கைது

சட்டவிரோதமான முறையில் படகொன்றில் அவுஸ்ரேலியாவுக்குச் செல்ல முயன்ற 11 பேரைக் கைதுசெய்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சருமான அஜித் ரோஹன தெரிவித்தார். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் ஒன்பது பேர் மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் என்றும் ஏனைய இருவரும் முல்லைத்தீவைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

புத்தளம் வைத்தியசாலைக்கு பின்புறமாகவுள்ள விடுதியொன்றில் தங்கியிருந்த நிலையில் மேற்படி 11பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவுஸ்ரேலியாவுக்கு அனுப்பி வைப்பதற்காக நேற்று முன்தினம் இவர்கள் அவ்விடத்துக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. இவர்களை அவுஸ்ரேலியாவுக்கு அனுப்புவதாகக் கூறி அழைத்து வந்த முகவர், பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவரைக் கைது செய்வதற்காக விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்த முகவர், மேற்படி நபர்களை முதல் அவுஸ்ரேலியாவுக்கு அனுப்புவதற்கான கூலியாக ஒருவரிடம் இரண்டு இலட்சம் ரூபா வரை வசூலித்துள்ளார் என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் புத்தளம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார்.



நெடுந்தீவு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கேணிகள் தூர்வாரும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரதேச சபை தவிசாளர் தானியேல் றெக்சியன் தலைமையில் பிரதேச சபை ஊழியர்களால் நெடுந்தீவு கிழக்கு ஐங்கரன் சனசமூக நிலையத்திற்கு அருகாமையில் உள்ள கேணியில் ஆரம்பமாகியது. மேலும் இக்கேணி தூர் வாரப்பட்டதனால் இப்பகுதியில் பெருமளவில் காணப்படும் மாடுகள், ஆடுகள், குதிரைகள் நன்மையடையும் என இப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் தெரிவித்தனர். அத்தோடு இனிவரும் நாட்களில் நெடுந்தீவில் பல பகுதிகளிலும் இருக்ககூடிய கேணிகள், கிணறுகள் நெடுந்தீவு பிரதேச சபையினால் துப்பரவு செய்யப்பட்டு பாவனைக்கு விடப்படவுள்ளதாக நெடுந்தீவு பிரதேச சபை தவிசாளர் தானியேல் றெக்சியன் தெரிவித்தார்.

## வைத்திய அதிகாரியின்...

வரும் யாழ். போதனா வைத்தியசாலையின் செயற்பாடுகளை ஸ்தம்பிதம் அடையச் செய்யாது இருக்கும் வகையில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியக் கலாநிதி க.இராசசேகரம் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு நேற்று முதல் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக் கது. இடமாற்றம் இரத்துச்செய்யப்பட்டது தொடர்பான உத்தியோகபூர்வ கடிதம் நேற்று மாலை மேற்படி மருத்துவமனையின் பணிப்பாளருக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. (வி)

## இந்திய...

கப்பட்டுள்ளது. கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் மாகாண சபை உறுப் பினர் தலைமையிலான குழுவினரால் இந்த மகஜர் நேற்று கையளிக்கப்பட்டது. வட மாகாணத்தின் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களிலிருந்து விடுதலை புலிகளினால் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களையும் இந்திய வீட்டுத்திட்டத்தில் இணைக்குமாறு குறித்த மகஜரில் கோரப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்திய வீட்டுத் திட்டத்தில் உள்நாட்டில் இடம் பெயர்ந்த முஸ்லிம்களையும் இணைந்துகொள்ளுமாறு கோரி நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கையெழுத்திட்டு இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் அசோக் கே.காந்தாவிற்கு அண்மையில் கடிதம் அனுப்பியமை குறிப்பிடத்தக்கது.

## வேம்படி...

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஏற்கனவே யாழ். வேம்படி மகளிர் கல்லூரி அதிபராக இருந்தவர் ஓய்வுபெற்றதனைத் தொடர்ந்து பதில் அதிபராக இருந்த திருமதி ஆர்.முத்துக்குமரன் அதிபராகப் பொறுப்பெடுத்துக் கொண்டிருந்தார்.

இவரது காலத்தில் கல்லூரி அபிவிருத்தி அடைந்து வந்திருப்பதுடன் நல்ல நிலையில் பாடசாலையும் மாணவியரையும் வழிநடத்தி வந்திருக்கின்றார். எனவே அவரை இடமாற்றம் செய்ய வேண்டாம், தொடர்ந்தும் அதிபராக செயற்பட அனுமதி வழங்க வேண்டும் என்று கோரி கல்லூரியின் மாணவியரது கையொப்பததுடன் மகஜர் ஒன்றையும் வேம்படி மகளிர் கல்லூரி மாணவியர் கல்வியமைச்சிற்கு நேற்று அனுப்பி வைத்திருக்கின்றனர்.

வேம்படி மகளிர் கல்லூரியின் அதிபராகக் கல்வியமைச்சின் பொதுச்சேவை ஆணைக் குழுவினால் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி வேணுசா சண்முகரட்ணம் நியமிக்கப்பட்டிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்று வேம்படி மகளிர் கல்லூரியில் புதிய அதிபர் நியமனத்தை எதிர்த்து மாணவியர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதாகத் தகவல் வெளியாகியதை அடுத்துக் கல்லூரியின் முன்பாகப் பெற்றோர் தமது பிள்ளைகளை வீட்டிற்கு அழைத்துச்செல்வதில் முண்டியடித்ததனையும் அவதானிக்க முடிந்தது.

இதேவேளை தமக்கு ஆதரவாக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முனைந்தபோது அவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட வேண்டாம் என்று திருமதி ஆர்.முத்துக்குமரன் மாணவர்களைக் கேட்டுக்கொண்டதாகவும் அதனையும் மீறி மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகவும் தெரியவருகின்றது. (பா,எஸ்)

## உதயன்...

'விக்கிலீக்ஸ்'இல் வெளியான செய்தியின் கடைசிப் பந்தியில் காணப்பட்ட "இவை ஆதாரமற்றவை" என்னும் சொற்களைப் பிரசுரிக்காமல் மறைத்து அமைச்சருக்கு அவதூறு ஏற்படுத்தும் விதத்தில் செய்திகளைப் பிரசுரம் செய்திருந்ததாக உதயன் பத்திரிகை மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அவதூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் இப்பத்திரிகை மீது ஆயிரம் கோடி ரூபா மானநஷ்டம் கோரி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

'உதயன்' பத்திரிகை மீது அமைச்சரினால் தொடரப்பட்ட மற்றொரு மானநஸ்ட வழக்கு எதிர்வரும் 29 ஆம் திகதி விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்படவுள்ளது. அமைச்சர் சார்பில் சட்டத்தரணி ரங்கன் தேவராஜன் ஆஜரானார். பத்திரிகை சார் பில் சட்டத்தரணி லக்சிறி பெர்னாண்டோ ஆஜரானார். (எஸ்ட,137)

## சிறுமியை...

வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனு மதிக்கப்பட்டுள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சிவாஜிலிங்கம்...

இபபிரச்சினையை ஆளும் கூட்டமைப்பு உறுப்பினரான எம்.கே. சிவாஜிலிங்கம் கிளப்பினார்.

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி மீன் சந்தை குத்தகைப் பணத்தை மூன்றில் ஒரு பங்கு குறைத்த மாதிரி ஏனைய வல்வெட்டித்துறை நகர சபையின் எல்லைக்குட்பட்ட வல்வெட்டித்துறை, பொலிகண்டி, தொண்டைமானாறு ஆகிய இடங்களில் இருக்கும் மீன் சந்தைகளுக்கான குத்தகைப் பணத்தை மூன்றில் ஒன்றாக பிரிக்கும்படி கடந்த பல கூட்டங்களில் கோரிக்கை விடுத்தபோதிலும் இது வரை நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் தனது சொல்லுக்கு மதிப்பளிக்கவில்லையெனவும் கூறி, சபைத் தலைவர் மீது தகாத வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டு தண்ணீர் போத்தலையும் தூக்கி எறிந்துவிட்டு சபை அமர்வுக்கான பதிவேட்டுக் கொப்பியையும் தூக்கி வீசிவிட்டு அங்கிருந்து விரைவாக வெளியேறியுள்ளார்.

இதனைச் சகிக்கமுடியாத ஏனைய ஆளும் கூட்டமைப்பின் உறுப்பினர்களும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் மௌனமாக இருந்தனர். அவர் வெளிநடப்புச் செய்தபோதிலும் ஏனைய உறுப்பினர்களின் பிரசன்னத்தைக் கொண்டு கூட்டம் மீண்டும் ஆரம்பமாகி பல தீர்மானங்களும் எடுக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

## பெற்றோரை...

அவர் கூறினார். இதுவரையில் பெற்றோர் உள்ளிட்ட வயதானவர்களை பராமரிக்காத 15 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் சுட்டிக்காட்டினார்.

பெற்றோரை பாராமரிக்காத பிள்ளைகள் தொடர்பில் முறைப்பாடுகளை முன்வைக்க அனைத்து பிரதேச செயலகங்களிலும் உரிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பிரஜைகளுக்கான செயலகத்தின் பணிப்பாளர் தெரிவித்தார்.

முறைப்பாடுகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் அவர்களின் பிள்ளைகள் வரவழைக்கப்பட்டு, உரிமைகள் அடிப்படையில் மாதாந்தம் ஒருதொகை பணத்தை வயோதிபர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அவர் கூறியுள்ளார். இந்த முறைப்பாடுகளை வயோதிபர்கள் தவிர்ந்த ஏனையவர்களும் முன்வைக்க முடியும் என சிரேஷ்ட பிரஜைகளுக்கான செயலகத்தின் பணிப்பாளர் ஜே.கிருஷ்ணமூர்த்தி மேலும் குறிப்பிட்டார்.

# போதனா வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை நிபுணர்கள் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் இவ்வருட இறுதியில் 12 சத்திர சிகிச்சைக் கூட கட்டடத் தொகுதி திறந்து வைக்கப்பட விருப்பதால் இச்சத்திர சிகிச்சைக் கூடங்களுக்கு வேண்டிய உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு சத்திர சிகிச்சை நிபுணர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாக வைத்தியசாலை சமூகம் தெரிவித்துள்ளது.

சிறுநீரகம், புற்றுநோய், நரம்பியல் சத்திரசிகிச்சைகளுக்கு வைத்திய நிபுணர்கள் சுகாதார அமைச்சினால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்ட போதிலும் அவர்கள் வைத்தியசாலைக்கு தேவையில்லை என திருப்பி அனுப்பப்பட்டமை வேதனைக்குரிய செயலாக உள்ளது.

யாழ். மாவட்டத்தில் தற்போது விபத்து மரணங்கள் அதிகரித்து காணப்படுவதால் இதில் சிக்கும் இளைஞர் முதல் முதியோர் வரை காப்பாற்றப்படுவதற்கு நரம்பியல் சத்திரசிகிச்சை சேவை யாழ். போதனா வைத்தியசாலைக்கு அத்தியாவசிய தேவையாக வுள்ளது.

இந்நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அண்மைய நாட்களாக இடம்பெற்றுவரும் நிர்வாக சீர்கேடுகள் சம்பந்தமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு வருவதற்கு வைத்தியசாலை சமூகம் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வி)

# ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு 24 பில்லியன் நட்டம்




(கொழும்பு)

ஸ்ரீலங்கன் விமான சேவை 24 பில்லியன் ரூபா நஷ்டத்தை எதிர்கொள்கின்றமைக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளது. வி.ஐ.பி.களின் விசேட பயணங்களே இந்த நஷ்டத்திற்கு பிரதான காரணம் என அக்கட்சி தெரிவித்துள்ளது.

2010 நடுப்பகுதியிலிருந்து அரசாங்க உயர் மட்டத்தினர் இருபதுக்கும் அதிகமான நாடுகளுக்குச் செல்வதற்கு ஸ்ரீலங்கன் விமான சேவையை பயன்படுத்தியுள்ளதாகவும் இவற்றில் பெரும்பாலானவை விசேட விமானப் பயணங்கள் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

நாட்டின் பொருளாதாரத்தை விழுங்கும் பல ஜந்துகளில் ஒன்றாக ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் விளங்குகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், போக்குவரத்துச் சபை ஆகியனவும் பெரும் நஷ்டத்தை எதிர்கொள்ளும் அரச நிறுவனங்கள் என அவர் குறிப்பிட்டார்.

# கப்பம் கோரிய வழக்கு அமைச்சரின் செயலாளருக்கு பிணை

(கொழும்பு)

கப்பம் கோரிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த அமைச்சர் ஒருவரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் ஒருவர் நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்றைய தினம் கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றத்தின் மூலமாக இவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். அமைச்சரின் செயலாளர் என குறிப்பிடப்பட்ட டொனல்ட் ரஜ்ஜித் என்பவர் கப்பம் கோரிய சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவர் 26 இலட்சம் ரூபாய் கப்பம் கோரியிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். இந்நபர் இரண்டு 10 இலட்சம் ரூபா தனிநபர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். இதேவேளை இந்த வழக்கு எதிர்வரும் 26 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.



வலி. தெற்கு பிரதேச சபையின் 30 இலட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்ட சுன்னாகம் பஸ் நிலையப் பகுதியில் அமைந்துள்ள சந்தைக் கட்டடத் தொகுதி சபையின் தவிசாளர் தியாகராசா பிரகாசினால் திறந்து வைக்கப்பட்டது. இதில் மீன், ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, கோழி, கருவாட்டுக் கடையென பல கடைத் தொகுதிகளையும் உள்ளடக்கிய முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

# நயினை திருவிழாக் காலங்களில் படகு சேவை நேரம் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு திருவிழாக் காலத்தில் படகு சேவை நேரம் இரவு 8.00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது. இச்சேவை இறுதி 4 நாட்களும் இரவு 10.00 மணிவரை இடம்பெறுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நயினாதீவு பெருந்திருவிழா தொடர்பாக நேற்று 2.30 மணியளவில் ஆலய மண்டபத்தில் வேலணைப் பிரதேச செயலர் மஞ்சுளாதேவி சதீஸ் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேலும் மின்சார வசதியற்ற படகுகள் இரவு சேவைக்கு அனுமதிக்கப்படமாட்டாது என கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இதுதவிர ஆலய வீதியில் வியாபார நோக்கத்திற்காக தயாரித்து விற்கப்படும் குளிர்பானங்கள் சுகாதார காரணங்களுக்காக தடைசெய்யப்படவேண்டும் என்ற தீர்மானமும் எடுக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் வேலணை பிரதேச சபைத் தலைவர் சிவராசா (போல்), ஆலய அறங்காவலர் சபையினர், படகு உரிமையாளர்கள், போக்குவரத்து சபையினர், சுகாதாரப் பகுதியினர், பொலிஸார், கடற்படையினர் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர். (85,05)

## தமிழ் பெண்ணிடம் கப்பம் கோரிய இருவர் கைது

(கொழும்பு)

பம்பலப்பிட்டியில் வசித்து வந்த தமிழ்ப் பெண்கள் இருவரிடம் கப்பம் பெறமுயன்ற இருவர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் தங்களை குற்றப் புலனாய்வு அதிகாரிகள் என அறிமுகப்படுத்தி 25 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்களை கப்பமாக கேட்டுள்ளனர். சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களை புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்ததாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டுள்ளனர்.

# கடற்படைத் தளபதி பாகிஸ்தானில்


பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்புத் தொடர்பாகவும் கடற்படைப் பயிற்சிக் கல்லூரியூடாகத் தொழில் நுட்பங்களைப் பரிமாறிக்கொள்வது தொடர்பாகவும் இரு நாட்டு கடற்படைத் தளபதிகளும் முக்கிய பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் டி.டபிள்யூ.ஏ.எஸ்.திசாநாயக்க ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு பாகிஸ்தான் சென்றுள்ளார். பாகிஸ்தான் கடற்படை அதிகாரிகளின் பிரதானி அட்மிரல் முகமட் அஸிப் சன்டிலாவின் அழைப்பை ஏற்று பாகிஸ்தான் சென்றுள்ள கடற்படை தளபதி திசாநாயக்க தலைமையிலான நான்கு பேர் கொண்ட தூதுக்குழுவினர் தற்போது அங்கு தங்கியுள்ளனர்.

## மரண அறிவித்தல்

### கந்தர் துரைசிங்கம்

[சமாதான நீதவான், முன்னாள் ஈ.பி.டி.பி உடுவில் பிரதேச சபை உறுப்பினர்]



இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **கந்தர் துரைசிங்கம்** அவர்கள் நேற்று (12.06.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர் - பார்வதியின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து - இலட்சுமியின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா, கனகம்மா, சின்னத்தம்பி, இராசலிங்கம், பூமணி மற்றும் துரைச்சாமி, நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், அறிவழகன் (பிரான்ஸ்), அழிவழகி (நைஜீரியா), அன்பழகி, இன்பழகி (டென்மார்க்), பேரழகி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுகந்தினி (பிரான்ஸ்), செல்வராஜா (நியூலங்கா பாம்), செல்வதயாளினி, குலசிங்கம், கிருஷ்ணபாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கோகுலன் (மருத்துவ பீடம், கொழும்பு), வேணுகா, அலன், நிவேதன், நிவேதா, அபிவர்ணா, அனுஷன், சர்மிலன், நிரோஜன், நிசாந்தன், சர்மில், பியர், இஷபல், ஜூலியட் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2012) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்**
**எஸ்.கே.செல்வராஜா**
**(மருமகன்)**
**(நியூலங்கா பாம்)**

**நியூலங்கா பாம்,**
**கே.கே.எஸ். வீதி,**
**இணுவில்.**

(C/174)

# நீர் விநியோக நடவடிக்கைக்கு யாழில் காணிகளை பெற நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இரணைமடு குளத்திலிருந்து யாழ். மாவட்டத்திற்கு குடிநீர் கொண்டுவரும் திட்டத்தின் கீழ் குடிநீரை சேமித்து வைப்பதற்கும் விநியோகிப்பதற்கும் பொருத்தமான இடங்களில் தண்ணீர் தாங்கிகளை அமைத்துக்கொள்வதற்கு காணிகளைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

நேற்று யாழ். செயலகத்தில் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிரதேச செயலர்கள் மட்டத்திலான கூட்டத்திலேயே காணிகளைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் அந்தந்த பிரதேச செயலர் பிரிவுகளில் இதற்கென பொருத்தமான காணிகள் தெரிவுசெய்யப்பட்டு அரச காணியொன்றில் அதனை இத்திட்டத்திற்குள் எடுத்துக்கொள்ளவும் தனியார் காணியெனில அதற்கான கொடுப்பனவை உரிமையாளர்களுக்கு செலுத்தி பெற்றுக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரச மற்றும் தனியார் காணி குறித்த இந்த நடவடிக்கைகள் அனைத்தும் அரச சுற்றுநிருபங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இக்கூட்டத்தில் யாழ். குடாநாட்டின் நிலத்தடி நீரினை பாதுகாத்தல் மற்றும் இரணைமடு குளத்திலிருந்து யாழ். குடாநாட்டிற்கு குடிநீர் எடுத்துவரும் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் யாழ். மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம், யாழ். மாவட்ட தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பணிப்பாளர் பாரதிதாசன், கமநலசேவைகள் உதவிப் பணிப்பாளர் பற்றிக் டிறஞ்சன், பிரதேச செயலர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் கலந்துகொண்டனர். (பா)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூன் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.